பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 03 திங்கட்கிழமை (19.07.2010) UTHAYAN-A Lively National Tamil Dailyகதிர்: 235

# பான் கீ - மூனுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு

## இலங்கை நடவடிக்கை எனத் தகவல்

கொழும்பு, ஜூலை 19

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நிபுணர்கள் குழுவொன்றை அமைத்தமைக்காக, அவருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக அரச சட்டத்தரணிகள் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபுணர்கள் குழுவை அமைத்ததன் மூலம் சர்வதேச அரசமைப்பின் ஆறாம் பிரிவையும், அதன் 33ஆம் மற்றும் 34ஆம் உப பிரிவுகளையும் பான் கீ - மூன் மீறி விட்டார் என்று அச்சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசு பான் கீ - மூனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தால் ஐ.நா. செயலாளர் நாயகம் ஒருவருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த ஐ.நாவின் முதல் உறுப்பு நாடு என்று இலங்கை வரலாற்றில் பதியப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் ஐ.நா. நிபுணர்கள் குழுவை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கையில் ஐ.நா. செயலாளர் நாயகம் இறங்கியுள்ளார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் செயற்பாட்டை இலகுபடுத்துவதற்காக(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. செயற்குழு இன்று கூடுகிறது

கொழும்பு, ஜூலை 19

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இன்று கட்சித் தலைமையகத்தில் கூடும். இக்கூட்டத்தில் ஐ.தே.க. மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அக்கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக எம்.பி. தெரிவித்தார்.

செயற்குழுவில் ஐ.தே.கட்சி தேசிய மாநாட்டுக்கான திகதி குறித்தும் தீர்மானிக்கப்படவுள்ளது. (சி)

## உயர்பாதுகாப்பு வலயங்கள் கிரமமான முறையில் அகற்றப்படும்

### மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

கிரமமான முறையில் வடக்கு உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படும் என மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் நிலை கொண்டுள்ள படையினரை படிப்படியாக வெறியேற்ற அரசு திட்டமிட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் வாழ்ந்து வந்த 62 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்கள் கிரமமான முறையில் மீள் குடியேற்றப்படுவார்கள் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தமக்கு உறுதியளித்துள்ளார் எனவும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வடமராட்சியில் இவ்வாறு பொதுமக்கள் (24ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகங்களில் பகிடிவதை செய்ய உடனடியாகத் தடை!

### உயர் கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு உயர் கல்வி அமைச்சினால் உடனடியாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா இதனை அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் விவரித்ததாவது :-

இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பகிடிவதைகள் மேற்கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இதனையும் மீறி இச்செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இருந்து (24ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா இந்தியாவுக்கு எதிரானவர் அல்லர்!

### அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 19

புலிகளின் தலைவர் பிரபாகாரன் இந்தியாவுக்கு எதிரனவர் அல்லர். அவர் சென்ற பாதைதான் எதிரானது.

-என்று மத்திய உள்துறை அமைச்சர் பா. சிதம்பரம் கூறினார்.

பெருந்தலைவர் காமராஜரின் 108 ஆவது பிறந்த நாள் விழா மற்றும் காங்கிரஸ் கட்சியின் 125ஆவது ஆண்டு விழா ஆகியவற்றின் பொதுக்கூட்டம் விருதுநகர் தேசபந்து திடலில் நடைபெற்றது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தும் முயற்சி; மஹிந்தவின் பொறிக்குள் ரணில் விக்கிரமசிங்க

### ஜே.வி.பியின் அனுரகுமார சாட்டை

கொழும்பு, ஜூலை 19

அரசமைப்புச் சட்ட திருத்த விடயத்தில் ஜனாதிபதி மஹிந்தவின் பொறிக்குள் அகப்பட்டுவிட்டார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இவ்வாறு சாடியுள்ளார் ஜனதா விமுக்திப் பெரமுனவின் அரசியல் பீட உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸநாயக்கா.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்ததாவது:

17 ஆவது திருத்தச் சட்டத்தை திருத்துவது குறித்து அரச தரப்பும் பிரதான எதிர்க்கட்சியுமான ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு நடத்தவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (24ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலி உறுப்பினர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு

கொழும்பு, ஜூலை 19

வடக்கிலுள்ள புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 340 பேரே உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர் எனப் புனர்வாழ்வு ஆணையாளர் சுஸந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தம் குறித்து மு.காவுடன் கூட்டமைப்பு பேசும்

கொழும்பு, ஜூலை 19

அரசமைப்புத் திருத்தங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தும்.

நாளை 20ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்று பொன். செல்வராஜா எம்.பி.நேற்று 'உதயனுக்குத்'க்குத் தெரிவித்தார்.

இந்திய விஜயத்தின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சகல கட்சிகளுடனும் பேச்சு நடத்தத் தீர்மானித்தது. இதன் முதற்கட்டமாகவே(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சபையின் சமாதானப் படையில் இலங்கைப் பொலிஸாருக்கு இடமில்லை

கொழும்பு, ஜூலை 19

ஐக்கிய நாடுகள் சமாதானப் படையில் இலங்கைப் பொலிஸாரை சேர்க்கும் திட்டம் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

இன்ஸ்பெக்டர்கள் மற்றும் அதற்கு உயர்ந்த தரத்தில் உள்ள சுமார் நூறு பேரை ஐ.நா. சமாதானப்(23ஆம் பக்கம் பார்க்க)

இவற்றின் சிறப்பம்சங்கள்

ASP ENTERPRISES

யாழ் மண்ணில் புதியதோர் உதயம்

மின்சார சக்தியில் இயங்கும் புதிய

Electric Bicycles

புதிய தோற்றத்துடன் விற்பனையாகின்றன.

# பெற்றோல் செலவில்லை
# குறைந்த எடை & நீண்ட பாவனை
# இலகுவாக மிதித்துச் செல்லலாம்
# இலகு தொழில்நுட்பத்துடன் அமைந்தது
# எட்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து மின்னேற்றினால் 60-70Km வரை பயணம் செய்யலாம்
# பற்றரிக்கு ஒரு வருட உத்தரவாதம்
# ஒரு Km க்கான செலவு 0.15 சதம் மாத்திரமே





மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்



கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
தொலைபேசி - 0213001585, 0776079352

குறிப்பு- முற்பதிவு செய்தவர்கள் சைக்கிள்களை வந்து பெற்றுக்கொள்ளவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உத்தேச அரசமைப்புப் பேச்சுக்கள்; முதலில் யோசனையை முன்வையுங்கள்

## நிறைவேற்று முறையை ஏற்கோம் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 19

அரசமைப்பு குறித்துப் பேச்சுகளை ஆரம்பிக்கும் முன்னர் உத்தேச அரசமைப்புத் திருத்தங்களை முன்வைக்க வேண்டும் எனவும் நிறைவேற்று அதிகாரம் உள்ள பிரதமர் முறைமையை ஜே.வி.பி. எதிர்ப்பதாகவும் அமைச்சரவைக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கும் அரசமைப்பே தற்போதைய தேவை எனவும் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் கடந்த வாரம் நடைபெற்ற செய்தியாளர் மாநாடுகளில் அரசமைப்புத் திருத்தம் தொடர்பான பேச்சுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் முறையை ஜே.வி.பி. ஏற்காது எனவும், அமைச்சரவைக்கு அதிகாரம் வழங்கும் அரசமைப்புத் திருத்தத்துக்கே ஜே.வி.பி. ஆதரவு வழங்கும் எனவும் விஜித ஹேரத் எம்.பி.தெரிவித்தார்.

''அரசமைப்புத் திருத்தத்தில் என்ன இருக்கிறது எனத் தெரியாமல் பேச்சு நடத்தச் செல்வதில் பயனில்லை. பேச்சு என்ற பெயரில் அங்கு சென்று அமைச்சர்கள் உட்பட ஏனையோரின் காலத்தை விரயமாக்க நாம் விரும்பவில்லை. பேச்சுகள் குறித்து அக்கறை இருந்தால் உத்தேச அரசமைப்புத் திருத்தங்களைப் பகிரங்கப்படுத்த வேண்டும். அத்துடன் வெறுமனே ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைப் பிரதமருக்கு மாற்றுவதால் என்ன பயன்? ஒரு வருடத்தின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகாரமுள்ளவருக்கு இருக்கின்றதா என்பதையும் நான் அறிந்து கொள்ளவேண்டியுள்ளது. நாம் நிறைவேற்று அதிகாரம் மிக்கவருக்கு எதிராக நீதிமன்றம் செல்ல முடியுமா? அத்துடன் நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமரை எவ்வாறு தெரிவு செய்வது?

இவைபோன்ற சந்தேகங்கள் தீர்க்கப்படவேண்டும். அதற்கு உத்தேச அரசமைப்புத் திருத்தங்களைப் பகிரங்கப்படுத்தப்படவேண்டும்.'' - எனவும் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்தார். (ஒ-சி)

## சமூக சீர்திருத்த குறுந்திரைப்பட வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 19

ஆளிர்கள் நிறுவனத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாவும் 'மின்மினி' சமூக சீர்திருத்த குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிறுவனத்தின் பணிப்பாளர் கே.எஸ். ரகு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்ளவார்.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் விவசாய உயிரியல்துறைத் தலைவர் கலாநிதி கு.மிகுந்தன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். (ஒ-1)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, ஜூலை 19

வதிரி காளையந்தோட்டம் ஸ்ரீ முத்துக்குமாரசாமி திருக்கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 26ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-236)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 19

நவாலி வடக்கு நாச்சிமார் முருகன் ஆலய அலங்கார உற்சவம் இன்று முதல் ஆரம்பமாகிறது. தினமும் மாலை 5 மணிக்கு விசேட பூசை வழிபாடு இடம்பெறும். (ஒ-302)

## முன்பள்ளிகளின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 19

புத்தூர் கிழக்கு ஸ்ரீ விக்னேஸ்வரா முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளியின் பெற்றோர், ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சி. மதியழகன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக சமூக அபிவிருத்தி மன்றத்தின் மழலைகளின் தாய் பிரிவின் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன், வலி.கிழக்குப் பிரதேச சபை செயலாளர் த.நடராசா ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-1)

* * *

நவாலி,ஜூலை19

ஆனைக்கோட்டை முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வ.பாலச்சந்திரன் தலைமையில் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலக பொறுப்பதிகாரி கு.இரத்தினராசா கலந்துகொள்வார். (ஒ-100)

## எழுத்தாளர்களுக்கான கலந்துரையாடல்

மருதனார்மடம், ஜூலை 19

கொழும்பில் 2011 ஜனவரியில் நடைபெறவுள்ள சர்வதேச எழுத்தாளர் விழா தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்குச் சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெற உள்ளது. நூலகர் க.சௌந்தரராஜன் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் ''ஞானம்'' சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் சர்வதேச எழுத்தாளர் விழா தொடர்பான இலங்கைக்கான இணைப்பாளருமான தி.ஞானசேகரன் கலந்துகொண்டு விழா பற்றி விளக்கமளிக்கவுள்ளார்.

கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாணம், கரவெட்டிப் பிரதேசங்களில் நடைபெற்ற எழுத்தாளர் கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாக வலிகாமத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்விலே குறித்த விழாவிலே பங்குபற்றவும், ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவும் விரும்புபவர்கள் கலந்துகொண்டு தமது விவரங்களைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. (1-55)

## ஆங்கிலப் பயிற்சிநெறி இன்று மீண்டும் ஆரம்பம்

ஜிரிசற் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அரச உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில மொழிப்பயிற்சிநெறி இன்று திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றது.

கடந்த 3ஆம் திகதி ஆரம்பிக்க வேண்டிய இப்பயிற்சிநெறி பிரித்தானிய கவுன்சிலைச் சேர்ந்த விரிவுரையாளர்களுக்கு யாழ்ப்பாணம் வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததால் ஆரம்பமாகவில்லை.

அரச உத்தியோகத்தர்களின் ஆங்கில மொழித்திறனை அதிகரிக்கும் இப்பயிற்சிநெறி கடந்த 3 வருடங்களாகத் தொடர்ச்சியாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (1-121)

# வீதிகளில் குப்பை கொட்டிய ஆயிரம் பேர் வரை கைது!

## அவர்களில் அரசியல்வாதிகளும் அடங்குவர்

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு நகரில் வீதிகளில் குப்பை கொட்டிய சுமார் ஆயிரம்பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் வர்த்தகர்களும் மாகாண அரசியல்வாதிகளும் அடங்கியுள்ளனர்.

அரசு டெங்கு நோயைத் தடுக்க பல நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. ஜனாதிபதி இதற்கென விசேட செயலணியொன்றையும் அமைத்துள்ளார். பாதுகாப்பு அமைச்சும் டெங்கு ஒழிப்புக்கு என பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

டெங்கு நோய் பரவும் வகையிலும் சூழலை மாசுபடுத்தும் விதமாகவும் வீதிகளில் குப்பை கொட்டியவர்களையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் மீது வழக்குத் தொடரப்படுமென பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க தெரிவித்துள்ளார். (ஒ-சி)

## கல்வியியற் கல்லூரியில் நாளை முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முத்தமிழ்விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது. பிரதம விருந்தினராக பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் கௌரவ விருந்தினராக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராசாவும் கலந்துகொள்வர். இந் நிகழ்வில் சிறப்புப் பேருரையை அதி வண.கலாநிதி. எஸ்.ஜெபநேசன் ஆற்றுவார். (ஒ-1)


Nottingham College Of London
And UNI ICT - Campus
கணனி நிறுவனங்கள்

A/L பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2010

எமது யாழ் மாவட்ட மாணவர்களது கணனி, ஆங்கிலம், முகாமைத்துவம், மருத்துவம் போன்ற துறைகளின் அறிவை வளர்க்கும் நோக்குடன் கீழ்வரும் சர்வதேச கற்கை நெறிகளுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை வழங்குவதற்கு எமது நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. அந்த வகையில் கீழ்வரும் கற்கை நெறிகளை நீங்கள் புலமைப்பரிசில் திட்டம் ஒன்றின் மூலம் எமது நிறுவனத்தில் குறைந்த செலவில்கற்கமுடியும். இத்திட்டத்தின் மூலம் ஒருவர் மூன்று கற்கை நெறிகளை தெரிவு செய்து கற்க முடியும்.

Certificate Courses :-
- Certificate in Information Technology
- Certificate in PC Hardware Engineering
- Microsoft Office for Business Professional
- Certificate in PC Network Administration
- Certificate in English

Diploma Courses :-
- Diploma in Marketing
- Diploma in Mobile Phone Repairing
- Diploma in Human Resource Management
- Diploma in Electronic Technology
- Diploma in Multimedia
- Diploma in IT
- Diploma in Hardware Engineering
- Diploma in Business (With Accounting & IT)
- Diploma in Spoken Singala Language
- Professional Diploma in Marketing
- Diploma in Spoken & Practical English & IELTS

உங்கள் நண்பர்களுக்கும் இதை தெரிவியுங்கள் !!!

எமது இத் திட்டத்தில் இணைய நீங்கள் செய்ய வேண்டியவை?????

- எமது இப்புலமைப்பரிசிலானது பொது அறிவு மற்றும் நுண் அறிவு பரீட்சைகளை கொண்டதாகும்.
- நீங்கள் பெறும் புள்ளிகளின் ஊடாக எம்மால் உங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இன்றே கீழ்வரும் எமது முகவரிக்கு உங்களது முழுப்பெயர், வீட்டு முகவரி, நீங்கள் கற்க விரும்பும் எமது கற்கைநெறியின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை தெளிவாக எழுதி கீழே தரப்பட்டுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும். அல்லது மேற்படி உங்கள் விபரங்களை உங்களது கைத்தொலை பேசியில் ரைப்செய்து 078 - 911 4208 என்னும் எமது தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்!!!!! இவ்வாறு அனுப்பிவைக்கும் மாணவர்களுக்கு நாம் இலவசமாக எமது விண்ணப்படிவங்கள், எமது கற்கை நெறிகள் பற்றிய விபரம் மற்றும் எமது புலமைப்பரிசில் நடைபெறும் திகதி ஆகியவற்றை தபாலில் அனுப்பிவைப்போம்.

Higher National Diploma
விண்ணப்ப முடிவுத் திகதி :- 31/07/2010
- Higher National Diploma in Pharmacy (HND in Pharmacy for A/L Bio/Maths Students)

Degree Courses :-
- B .A (Hons) in Business Administration
- B.Sc (Hons) in Multimedia

- Conditions for Apply -

Our International Universities Affiliations:-
eie · Unitec · University of Wales, Newport

அனுப்ப வேண்டிய முகவரி :- UNI & NOTTINGHAM COLLEGE OF LONDON
ICT CAMPUS
No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P :- 021 321 6433 / 0777 110 862



JOB Guaranteed "Certified Medical Assistant"

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை **லாவா வைத்தியசாலையில்** சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகப் பெற்றிடுங்கள்.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி

கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகத் தேர்வு மூலம் அனுமதி.



M.B.B.S வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

உள்ளகப்பயிற்சி வழங்குவோர்: Lava Hospitals
சான்றிதழை இணைந்து வழங்குவோர்: KNOWLEDGE UNIVERSE — Malaysian Soft Skills and ICT Development Centre

Tel: 0212224333 |# 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தென்னிலங்கைக் கட்சிகளின் வக்கிரப் போக்கின் வெளிப்பாடா?

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவது என்ற அரசாங்கத்தின் திட்டம் அல்லது உத்தேசம் இப்போது எதிர்பார்த்ததைவிட வேறு வடிவம் எடுத்திருக்கிறது. அரசமைப்புச் சட்டத்தை அரசாங்கத் தரப்பு தயாரித்து, அதனை வெளியிட்டு, பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதத்துக்கும் அதன் பின்னர் வாக்கெடுப்புக்கும் விடுவது என்பது அரச தரப்பின் முதல் முடிவாக இருந்தது.

ஆனால் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை எத்தனை தடவைகளும் ஒருவர் வகிக்கலாம் என்ற மஹிந்தவின் விருப்பத்திற்கு, அவரது சொந்தக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரமுகர்களும் அதனோடு சேர்ந்து இடது சாரிகளும் மிகக் குறிப்பாக ஜாதிக ஹெல உறுமயவும் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியதனால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாயிற்று.

நிறைவேற்று ஜனாதிபதி முறை ஆட்சி வடிவத்தை மாற்றி, நாடாளுமன்றுக்குப் பதில் கூறும் பொறுப்புடைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை உருவாக்கும் புதிய திட்டத்தை ஜனாதிபதி கையில் எடுத்தார். அது குறித்து பிரதான எதிர்க்கட்சியுடன் பேச்சு நடத்தி இணக்கப்பாடும் கண்டாயிற்று.

முழுக்க முழுக்கச் சர்வாதிகாரத்துக்கும் ஏன் குடும்ப ஆட்சிக்கும் வழி செய்யக்கூடிய ஆரம்ப திட்டத்தை அரசு கை கழுவிவிட உத்தேசித்திருப்பது கண்டு, இதுவே நல்ல தருணம் என்று கருதி ஐக்கிய தேசியக் கட்சியும் அதனை 'லபக்' என்று கௌவிக்கொண்டது. அதற்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்டும் உள்ளது.

அடுத்து அரசமைப்புச் சட்ட திருத்த நிரலில் இரண்டாவது இடம் பிடித்திருப்பது அதன் 17ஆவது திருத்தமாகும். பொதுச் சேவை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நிதிச் சேவை ஆணைக்குழு, லஞ்ச ஊழல் ஆணைக்குழு ஆகியவற்றுக்கு அங்கத்தவர்களை நியமிக்காது, அவை மஹிந்த அரசில் முடக்கி வைக்கப்பட்டுள்ளன. அதன் பின்னணியில் 17ஆவது சட்டத்தைத் திருத்துவது குறித்து அரச தரப்பும் பிரதான எதிர்க்கட்சியுமான ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு நடத்த இருப்பதாகத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்த விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, ஜனாதிபதி மஹிந்தவின் பொறிக்குள் அகப்பட்டுவிட்டார் என்று ஜனதா விமுக்திப் பெரமுனவின் அரசியல் பீட உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமர திஸநாயக்க சாடியுள்ளார் - கடுமையாகக் கண்டித்துள்ளார்.

அரசமைப்புத் திருத்தங்கள் குறித்த பேச்சுவார்த்தையின் போது ரணில் விக்கிரம சிங்கா முதலில் கையில் எடுத்திருக்க வேண்டியது 17ஆவது சட்டத்தை உடனடியாக அமுல் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாடாகவே இருந்திருக்க வேண்டும் என்று அனுரகுமார சொல்கிறார்.

17ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் குறித்து ஆராய்வதற்கும் அதில் புதுக்கி அமைப்பதற்கும் எதுவும் இல்லை. அதனை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அரசை வலியுறுத்தியிருக்க வேண்டும் என்பது அனுர குமாரவின் நிலைப்பாடு.

மேற்கூறிய ஆணைக்குழுக்களுக்கு மூன்று வருடங்களுக்கும் ஒரு முறை புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பது அரசமைப்பு விதி. அதனைச் செய்யும் பொறுப்பு அரசமைப்புச் சபைக்கே (Constitutional Council) உண்டு. ஆனால் கடந்த பல வருடங்களாக, மஹிந்தரின் ஆட்சியில், அந்தச் சபைக்கு அங்கத்தவர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் நாட்டின் பல துறைகளிலும் நல்லாட்சி என்னவிலை என்று கேட்கும் அளவுக்கு நிலைமை கெட்டுப் போயுள்ளது.

இந்தக் கோலத்தைப் பார்க்கும்போது, ஐக்கிய தேசியக் கட்சி மீதான, ரணில் விக்கிரம சிங்கா மீதான, அனுர குமார திஸநாயக்காவின் குற்றச்சாட்டு அர்த்த முள்ள ஒன்றே.

அது ஒரு புறமிருக்க -

அரசமைப்புச் சட்டத் திருத்த இப்போதைய செயற்பாடுகளில், நாட்டில் கொழுந்துவிட்டு எரிந்த, எரியும் பிரச்சினையான இன விவகாரத்துக்குத் தீர்வு காண்பது குறித்து அரசு இன்னும் திரும்பியும் பார்க்கவில்லை. அதனை மறந்துவிட்டதோ என்று சந்தேகப்படும் அளவுக்கு அக்கறைகொள்ளாதிருக்கிறது.

அரசமைப்புத் திருத்த குறித்து நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் எல்லாக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும் என்று எரிபொருள் மற்றும் சக்தி வள அமைச்சர் பிரேம் ஜயந்த கூறியிருந்தார்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு அடிப்படைத் தீர்வையேனும் வழங்கும் விதத்தில் அரசமைப்பில் 13ஆவது சட்ட திருத்தத்தை புதிதாக வடிவமைப்பது சம்பந்தமாக ஒரு பேச்சு மூச்சைத்தானும் காணவில்லை. தமிழ் மக்களுக்கு நீதியான, நியாயமான, நிரந்தரமான தீர்வு ஒன்றினை உள்ளடக்கி அதனைப் பலப்படுத்துவது குறித்து எந்தவித சமிக்ஞையும் காட்டப்படவில்லை.

நாட்டில் மிக முக்கிய பிரச்சினையாக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய இனப்பிரச்சினை குறித்து அரச பிரதானிகள் வாய் திறக்கும் போக்கைத் தானும் கேட்க முடியவில்லை.

நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் ஆட்சி முறைக்கு அடுத்து இனப்பிரச்சினைக்கு நீதியான, நிலையான நிரந்தரத் தீர்வு காண்பது குறித்தே தெற்கின் சிங்களத் தலைமைத்துவங்கள் கரிசனை கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், அது குறித்து இதுவரை அரசும் சரி, தெற்கின் பிரதான எதிர்க்கட்சியும் சரி அக்கறை காட்டாதிருப்பது சிறுபான்மையினரை, அவர்களின் முதன்மையான (நம்பர் வண்) பிரச்சினையை, ஓரங்கட்டும் வக்கிரப் போக்கு என்று முற்றாக ஐயுற வேண்டியுள்ளது.

# கொழும்புக்கு வெளியில் முதல் தடவையாக நடைபெற்றுள்ள அமைச்சரவைக் கூட்டம்

**நேற்று 18.07.2010 அன்று சண்டேரைம்ஸ் வெளியிட்டுள்ள அரசியல் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முன்னைய கிளிநொச்சிப் பயணங்கள் பெரும்பாலும் ராணுவத்தினரைப் பாராட்டுவதற்காக இருந்தன. ஆனால் இந்த முறை வேறு விதமாக இருந்தது. விடுதலைப் புலிகளைத் தோற் கடிப்பதற்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கியிருந்த மனிதர் இந்த முறைதமிழர் தாயகம் அமைப் பதற்கு வேலுபிள்ளை பிரபாகரன் பயன்படுத்திய அதே மண்ணில் தமது அரசின் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தியிருந்தார்.

சில அமைச்சர்களுக்கு அது ஓர் உணர்ச்சி வசப்பட்ட பயணமாகவே இருந்தது. அவர்களில் ஒருவர் தமது சக நண்பரிடம் பேசுகையில் எல்லாளனைத் தோற்கடித்ததின் பின்னர் அவன் இருந்த மண்ணுக்கு துட்டகைமுனு தனது பரிவாரங்களுடன் சென்றதுபோல் இந்த பயணம் அமைந்தது என்று கூறியிருந்தார்.

இலங்கையின் வரலாற்றைக் கூறும் மகாவம்சம் என்ற நூலில் தற்போதைய தென் இந்தியாவை ஆண்ட தமிழ் சோழ மன்னன் அனுராத புரத்திலிருந்து இலங்கையை ஆண்டு வந்தான். அவனை எதிர்த்து துட்டகைமுனு என்ற சிங்கள இளவரசன் போர் தொடுத்து சென்றான். அவனுடைய படைகள் எல்லாளனின் படைகளை சிதறடித்து விட்டதையடுத்து யானை மீதமர்ந்து எல்லாளனை எதிர் கொண்டு வயதான அந்த அரசனை எதிர்த்து கொன்றான். கி.பி 161 அளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அங்கு சென்ற ஏனையவர்கள் தாம் கண்டவற்றை வைத்து தத்தமது எண்ணங்களை வெளியிட்டனர். பொதுமக்களில் சிலர் உற்சாகத்துடன் காணப்பட்டனர். சிலர் கலக்கமடைந் திருந்தனர். இன்னும் சிலரின் முகங்களில் வருத்தம் தோய்ந்திருக்கக் காணப்பட்டன.

போரின் எச்சங்கள் இன்னும் அங்கு மிங்கும் காணப்பட்டன. அபிவிருத்திக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் பொதுமக்களின் கஷ்டங்கள் தீர்ந்து விட வில்லை. இரத்தக் களரியான போரிலிருந்து தப்பித்து வந்திருப்பதே அவர்களுக்கு இன்னமும் கலக்கத்தைக் கொடுப்பதாய் இருந்தது.

கொழும்புக்கு வெளியில் தமது முதலாவது கூட்டத்தை நடத்துவதற்காக ராஜபக்ஷவும் அவரது அமைச்சர் களும் வந்திருந்தனர். கொழும்பில் நடந்தவைக்கு முற்றிலும் வித்தியாச மானதாக இந்தக் கூட்டம் அமையும் என்று முன்பே தெரிந்திருந்தது.

வடக்கு தொடர்பான விடயங்களையே நிகழ்ச்சி நிரல் காட்டிக் கொண்டிருந்தது. அவைகளில் முக்கியமான தாகவிருந்தது மக்கள் தொடர்பான பெற்றோல், டீசல், மற்றும் மண்ணெண்ணெய் விலைக்குறைப்பு என்பவையுமே. மாங்குளம் - முல்லைத்தீவு வீதிபுனரமைப்பு, அரசுக்கு சொந்தமான சீன நிறுவனம் ஒன்றை சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு அனுமதிப்பது மற்றும் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மாணவர்களை பல்கலைக்கழகங்களில் தொடர்ந்து படிக்க அனுப்புவது போன்றவையாகும்.

இன்னொரு சீன நிறுவனம் இலங்கை அரசு ரெயில்வே திணைக் களத்துடன் இணைந்து மாத்தறை - பெலியத்த ரெயில்வே வீதியைப் புனரமைப்பதற்கான ரெண்டரை பெற் றுக் கொண்டது. வடக்கு ரயில் பாதை யைப் புனரமைக்கும் அனுமதியை இந்திய நிறுவனம் ஒன்று பெற்றுக் கொண்டது.வடக்கின் பெரும்பாலான திட்டங்கள் சீனாவுக்கு கிடைத்துள்ளதென்றால் வடக்கின் வளர்ச்சித் திட்டங்களில் சிலவற்றை இந்தியாவும் பெற்றுக் கொண்டுள்ளது. இது இலங் கையின் புவிசார் அரசியல் யதார்த்த நிலைமைகளை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

வழமையாக இம்மாதிரி கூட்டங்களில் அந்த வாரத்திலான முக்கிய அரசியல் மற்றும் விடயங்கள் விவாதிக்கப் படுவதுண்டு. இம்முறை அவ்வாறு நடைபெறவில்லை. அமைச்சர்களும் இம்முறை தமது ஆலோசனைகளை ஒரு ராணுவ முகாமுக்குள் வைத்து நடத்தியமையால் இது புரிந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது. இதற்கு முந்திய வார அமைச்சரவைக் கூட்டம் ரத்து செய்யப்பட்டிருந்தது. ஏனென்றால் ஜனாதிபதி மாலைதீவுக்குச் செல்ல வேண்டியிருந்தது.

ஜனாதிபதி ராஜபக்ஷ தமது அமைச்சர்களுக்கு மாலைதீவு விஜயம் தொடர்பாக எடுத்து விளக்காமல் போன மைக்கு வேறு விடயங்கள் விவாதிக் கவேண்டியிருந்தமையே காரணம். இதில் முக்கியமானது ஐ.நா. ஆலோசனை நிபுணர் குழு அமைக்கப்பட்டமை, அமைச்சர் வீரவன்சவின் சாகும் வரையான உண்ணாவிரதம் இருந்தமை போன்றவையும் விவாதிக்கப்படவிருந்தன. இன்னுமொரு விடயம் என்னவென்றால் ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை கள் ஐரோப்பிய ஒன்றியத்தால் வாபஸ் பெறப்படவிருப்பதாகும். இந் நடவடிக்கையால் இலங்கை ரூ 56.5 பில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வருடந்தோறும் இழக்க வேண்டிய நிலைமை ஏற்படலாகும்.

இலங்கையில் 2,000 ஊழியர்களை வேலைக்கமர்த்தியுள்ள பாகிஸ்தான் ஆடைத் தொழில் முதலீட்டாளர் ஒருவர் தமது முதலீட்டை வாபஸ் பெறவிரும்புவதாக கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

## அமைச்சரின் தடுமாற்றம்

ஐரோப்பிய ஒன்றியம் தனது சலுகைகளை தொடர்ந்து வழங்குவதற்காக முன்வைத்துள்ள 15 அம்ச நிபந்தனையானது இலங்கையின் இறைமையைப் பாதிப்பதாக விருப்பதால் அதுபற்றி பேச்சு வார்த்தையில் ஈடுபட முடியாது என்று கடந்த வாரம் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்திருந்தார். இருந்தபோதிலும் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் குழு வொன்றை கடந்த வாரம் தமது அமைச்சரவையில் சந்தித்துப் பேசியதன் பின்னர் அதே அமைச்சர் பீரிஸ் கூறினார். மேலும் முன்னேறுவதானால் பேச்சு வார்த்தை தான் ஒரே வழி என்பதாக.

நாட்டின் வெளிவிவகாரங்களில் உயர்மட்ட சிந்தனையில் பெரும் தடுமாற்றங்கள் தென்படும் அதேவேளை, அமைச்சரின் மேற்கண்ட கருத்துக்கள், ஐரோப்பிய யூனியனுடன் தொடர்ந்தும் பேச்சுநடத்தவே அரசு விரும்புகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. ஐரோப்பிய யூனியன் நிபந்தனைகளை முற்று முழுதாக நிராகரித்ததன் பின்னர் இப்போது இந்த நிலையை எடுத்திருப்பது அரசின் அப்படியும் இப் படியுமான ராஜதந்திரத்தை வெளிப் படுத்துவதாகவுள்ளது எனலாம்.

வெளிநாட்டு உதவியுடன் வளர்ச்சிப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்குமேலாக தெற்கு மற்றும் வடக்கில் வாழும் மக்களும் இதற்கு பணம் செலுத்துகிறார்கள் என்று கூறிய ஜனாதிபதி அரசு சாரா நிறுவனங்களைக் கண்டிக்கவும் தவற வில்லை.

தெரிவு செய்யப்பட்ட பொதுமக்களுக்கு 25 டிராக்டர்களும் 2,000 சைக்கிள்களும் பகிர்ந்தளிக்கப்படும் நிகழ்வையும் பார்வையிட்டார்.

பகல் உணவின் பின்னர் அமைச்சர்களும் ஜனாதிபதியும் கிளிநொச்சி நகரில் இடம் பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டனர். ஜனாதிபதி அங்கு பத்து நிமிடங்கள் தமிழில் உரை நிகழ்த்தினார். பின்னர் ஹெலிகொப்டரில் கொழும்புக்குத் திரும்பினார்.

## நாடாளுமன்றம் வருவதற்கு ராஜபக்ஷ விருப்பம்

கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது அரசமைப்பு திருத்தம் தொடர்பாக ஆலோசிப் பதற்கு மூன்று குழுக்களை நியமிப்பதற்கு முடிவு செய்யப்பட்டது.

பேச்சுக்களின்போது நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதம மந்திரிப் பதவி உருவாக்கப்படுவதற்கு தாம் ஆதரவளிப் பதாகவும் தாமும் நாடாளுமன்றத்திற்கு வருவதற்கு விருப்பம் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது பொறுப்புக் கூறுவதையும் நாடாளுமன்றத்துக்கு பதில் கூறுவதையும் உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் 17 ஆவது திருத்தம் தொடர்பாக தமக்கு கடுமையான கருத்து வேறுபாடு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

"இவைகளை வைப்பதால் சரிவர மாட்டாது. மாலைதீவில் நடப்பது தெரிகிறது தானே, அங்கு அவ்வாறான பிரச்சினை தான் நிலவுகின்றது" என்று ராஜபக்ஷ கூறியுள்ளார். அங்கு ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை அவர் சுட்டிக்காட்ட முயன்றார். இஸ்ரேலிலும் இவைகளில் சில அம்சங்கள் செயல்படுத்த முயன்று தோல்வியுற்றுள்ளன என்று குறிப்பிட்டார்.

# அரசமைப்பு திருத்தம் ஐ.தே.கவுடன் அரசு நடத்தும் ஆலோசனைகள்

**தமிழில்: கோகுலன்**

அமைச்சரவை கூட்டத்தையடுத்து வடக்கின் வசந்தம் தொடர்பான கூட்டத்துக்கு ராஜபக்ஷ தலைமை வகித்தார். இந்த விடயத்துக்கு அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமைவகிப்பதால் அவர் அறிக்கையொன்றை சமர்ப் பித்தார். அவரைத் தொடர்ந்து வட பகுதி ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அறிக்கை கொடுத்தார். ராஜபக்ஷ அடிக்கடி இடைம றித்து கேள்விகள் கேட்டார். சில சமயம் உணர்ச்சிவசப்பட்டார், ஒருகட்டத்தில் இன்று நாம் இங்கிருக்க வழி செய்த படையினருக்கு நாம் நன்றி யுடையவர்களாக இருக்க வேண்டும் என்றார்.

இன்னொரு கட்டத்தில் ஜனாதி பதி கோபமுற்றார். வன்னியில் உள்ள சரியான நிலைமையை அதிகாரிகள் பொது மக்களுக்கு தெரிவிக்க தவறிவிடுகிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

வீதியோரங்களில் உடைந்த வீடுகள் காணப்பட்டாலும் உள் பகுதி யில் அனேகமானவை திருத்தப்பட்டுவிட்டன என்றார்.

கூரையொன்றை போடுவதற்கு நான்வரும்மட்டும் காத்திருக்க வேண்டுமா என்று அவர் கேட்டார். இப்பகுதியின் அபிவிருத்திக்காக பெருமளவு பணத்தை அரசு செலவு செய்கிறது என்பதை அதிகாரிகள் மக்களுக்கு எடுத்துக் கூறுகிறார்கள் இல்லை என்றார்.

தமிழ் அதிகாரிகளுடன் சிங்கள, முஸ்லிம் அதிகாரிகளும் இந்தப் பணிகளில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று பணித்தார்.

அரசு இப்பகுதியில் செய்துவரும் வளர்ச்சிப் பணிகளை மக்களுக்கு வெளிப்படுத்தாத அதிகாரிகள் தண்டிக் கப்படுவார்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பேச்சுக்களில் ஏற்பட்ட இணக்கப்பாட்டிற்கமைவாக விக்கிரமசிங்க, பசில் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தன மற்றும் உறுப்பினர்களுடன் சந்தித்து நிறைவேற்றுப் பிரதம மந்திரி பதவிக்கான கடமைகள், செயல்பாடுகள் தொடர்பானவிடயங்களை விவாதிப்பார். இப்படியான ஒரு பதவி தொடர்பான இணக்கம் ஒன்று ஏற்படுமானால் நிறைவேற்று பிரதம மந்திரியானவர் தேசிய வாக்கெடுப்பின் மூலம் தேர்ந் தெடுக்கப்படுபவராக விருக்க வேண்டும் என்று தாங்கள் விரும்புவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பான பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்று தெரிகின்றது.

ஐ.தே.க.பிரதித் தலைவர் கருஜெயசூரிய, வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸுடன் அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தம் தொடர்பாக ஆலோசனைகள் நடத்துவார். இந்தப் பேச்சுக்களின்போது இருதரப்பினரையும் சேர்ந்த சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என்று தெரிகின்றது.

ஐ.தே.கட்சியின் மூன்றாவது குழுவொன்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குழுவொன்றுடன் தேர்தல் சீர் திருத்தங்கள் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது. மாகாண மற்றும் உள்ளூராட்சி தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து இவர்கள் ஆலோசிப்பார்கள். கடந்த வியாழக்கிழமை ஐ.தே.க பொது செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க, அமைச்சர் தினேஷ் குணவர் தனாவின் இல்லத்தில் இடம்பெற்ற இரவு விருந்தொன்றின்போது அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் ஆலோசனைகள் நடத்தினார். மாவட்ட எல்லை நிர்ணயம் தொடர் பாக இவர்கள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இந்த மூன்று குழுக்களும் தமது ஆலோசனைகளின் முடிவில் மூன்று ஆவணங்களை தயாரிக்கும் என்றும் இந்த ஆவணங்கள் மக்களின் பரிசீலனைக்காக வைக்கப்படும் என்றும் தெரிகின்றது.

இவ்வாறு செய்வதன் மூலம் வெளிப்படைத் தன்மையை நாம் உறுதிபடுத்துவதுடன் மக்களுக்கும் நாட்டுக்கும் பயன் தரக்கூடிய அரச மைப்பொன்றை உருவாக்குவதற்கு அரசுடன் செயல்படுவோம் என்று ஐ.தே.கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 04 | : 20.07.2010 |
| | : செவ்வாய்க்கிழமை |
| திதி | : தசமி |
| | பி.இ. 05.27வரை |
| நட்சத்திரம் | : விசாகம் |
| | பி.இ 04.31 வரை |
| சுபநேரம் | : 10.31 - 12.01 |
| ராகுகாலம் | : 03.01 - 04.31 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10 . 02 . 1943

மறைவு 23 . 06 . 2010

### அமரர் சிவக்கொழுந்து காசிநாதன்

*அன்பால் பூத்த விழிகளும்*
*ஆரத் தழுவிய கரங்களும்*
*ஈரம் நிறைந்த இதயமும் ஓய்ந்து*
*மாதம் ஒன்று ஆகிறது.*

அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.07.2010) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அதில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(101162)

## தவறிவிட்டது

நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை சேர்ந்த துஸா சிவகுமாரன் ஆகிய எனது (897694093 V) எனும் இலக்கம் உடைய தேசிய அடையாள அட்டை 13.07.2010 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு :- சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம். T.P.:0776544547

## வீடு விற்பனைக்கு

யாழ்.–மானிப்பாய் வீதியில் மாநகரசபை எல்லைக்குள் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு : T.P.:0776991795

## தவறிவிட்டது

திருமதி சின்னத்துரை இராசேஸ்வரி ஆகிய எனது N.I.C. (556352305 V), விசேட அடையாள அட்டை (091022536) என்பன யாழ்.நகருக்கும் வேம்படிச் சந்திக்கும் பஸ்நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

தொடர்பு :- இ. பாலசுப்பிரமணியம்,
C/O: சி.கமல்ராஜ்,
V.T.S. லேன், உரும்பிராய் தெற்கு.
T.P.:0778448091

## விற்பனைக்கு

4அடி அகலம் 6 அடி உயரம் 4 கதவுகள் உள்ள முற்றிலும் சில்வர் நல்ல நிலையிலுள்ள குளிர்சாதனப்பெட்டி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : T.P.:0214903025

## பத்திரிகையாளர் சங்க கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 19.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஊடக வள நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

முக்கியமான விடயங்கள் ஆராயப் படவிருப்பதால் அனைத்து நிர்வாக உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி கேட்டுள்ளார். (ஒ-302)

## கோலத்திறன் விழா

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் வலி. மேற்குப் பிரதேச சபையும் இணைந்து முன்பள்ளிச் சிறார்களின் கோலத்திறன் போட்டி அண்மையில் நடத்தின. (எ-29)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 07 ★ 01 ★ 1938

உதிர்வு 20 ★ 06 ★ 2010

### திருமதி கனகாம்பிகை சிதம்பரபிள்ளை

*எங்கள் குடும்ப விருட்சத்தைப் போற்றி வளர்த்து*
*ஒளிவிளக்காய்த் திகழ்ந்து அன்போடும் பண்போடும்*
*பெருமையுடனும் பேணிக்காத்து எம்மை நல்வழி நடத்தி*
*இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட - எமது*
*அன்புத் தெய்வத்தின் அழியா நினைவுகளுடன் .....*

அன்னாரின் இறுதி நிகழ்வுகளின்போது நேரில் வருகைதந்து ஆறுதல் கூறியோருக்கும் மலர் வளையம் வைத்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை (20.07.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பழம் வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(101171)

குடும்பத்தினர்.

## நாளை நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு வெளிவருகின்றது




விளம்பர அனுசரணை :

### சிவா ரேடிங் கோ

பெயின்ற் வகைகள், சீற் வகைகள், கட்டடப் பொருள்கள், இலத்திரனியல் சாதனங்களைப் பருத்தி நகரில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

சிவா ரேடிங் கோ, பிரதான வீதி, பருத்தித்துறை.



## புங்குடுதீவு பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய சித்திரத் தேர் அமைத்தல் தொடர்பான கேள்விமனு கோரல்

*மேற்படி ஆலயத்தில் அம்பாளுக்கு சித்திரத்தேர் அமைப்பதற்கு அம்பாளின் திருவருள் கைகூடி இருப்பதால் இச் சித்திரத்தேரை அமைப்பதற்கு சிற்பக்கலையில் கைதேர்ந்த சிற்பாசாரியர்களிடம் இருந்து கேள்வி மனுப் பத்திரம் கோரப்படுகிறது. எனவே மேற்படி ஆலயத்தில் மேற்குறிப்பிட்ட தேர்வேலை செய்ய விரும்பும் சிற்பாசாரியார்கள் தமது கேள்வி மனுப் பத்திரங்களை 04.08.2010 அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ மேற்படி ஆலய நிர்வாகக் காரியாலத்திலோ அல்லது ''பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயம், 4ஆம் வட்டாரம் புங்குடுதீவு'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

**முக்கிய குறிப்பு:**

*தங்களின் கேள்விமனுப் பத்திரத்துடன் தங்களின் முழுப் பெயர், தொலைபேசி இலக்கம், தபால் முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.*

தொடர்பு கொள்வதற்கு: *0213205578*

(101173)

செயலாளர்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா காசிநாதர்

(முன்னாள் முகாமையாளர், தலைவர், வாழைக்குலை சங்கம், நீர்வேலி)



சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா காசிநாதர் நேற்று( 18.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆச்சிக்குட்டி யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருமதி தம்பிமுத்து சேதுப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் இராமராசா, இராமநாதன் (லண்டன்), நாகலிங்கம் (சுவிஸ்), காலஞ் சென்ற குலசிங்கம் மற்றும் செந்தில் மதி (ஆசிரியர், சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை) ஆகியோரின் தந்தையும் பரமேஸ்வரி, விஜயலட்சுமி, ஜெயக்குமாரி (லண்டன்), புவனேஸ்வரி, சுரேந்திரன் ஆகியோரின் மாமனாரும் அருந்ததி சிவபரன், யாழினி பாலமோகன் (கனடா), தர்சினி, மயூரன், விக்கினேஸ்வரன், சர்வேஸ்வரன், துர்க்கா (லண்டன்), கர்ணன் தம்பையா (லண்டன்), நித்திலா சபேசன், நிஷானி முகுந்தன் (லண்டன்), அனுஷன் (லண்டன்), ஜாதவன் ஆகியோரின் அன்புப் பேரனும் யஷ்மிகன் (கனடா), ஜெனிஷா (கனடா), சியானுஜா, தீதிகா (லண்டன்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு பி.ப. 2 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(101168)

தகவல்:
குடும்பத்தினர்.

## போமன் ஜோன் நவரட்ணம்

(ஓய்வுபெற்ற மேலதிக பதிவாளர் நாயகம், வட மாகாணம்)



துணவியைப் பிறப்பிடமாகவும், கொழும்பினை வசிப்பிடமாகவும் கொண்ட போமன் ஜோன் நவரட்ணம் நேற்றுமுன்தினம் (17.07.2010) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அஞ்சலாவின் (லீலா) கணவரும் மரியா (கனடா), Dr. வசந்தி, விக்டர் ஆகியோரின் அன்புத் தந்தையும் யூஜின் மோசஸ் (கனடா), புத்தபிரிய ராமநாயக, அம்பிகை ஆகியோரின் அருமை மாமனாரும் அஞ்சலா, நிக்கித்தா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை A.F. றேமன் மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (19.07.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

850, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
0212222843

(101170)

தகவல்:
போதகர் E.J. இராஜநாயகம்
(குமார்).

## பொன்னுத்துரை சீவரட்ணம்

(முன்னாள் பிரதம தாதி, யாழ்.போதனா வைத்தியசாலை)



கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் புதுவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சீவரட்ணம் நேற்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தம்பதியரின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவச்செல்வியின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் ராஜரட்ணம் தங்கரத்தினம், புஸ்பரட்ணம், நாகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(101169)

தகவல்:
மனைவி, மகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணை மருத்துவ மாது மரணம்: வைத்தியசாலை டாக்டரை

# நீதி விசாரணைக்கு கையளிப்பதற்காகவே எமது நிறுவனத்தில் வைத்திருந்தோம்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ,ஜூலை19

வேலணைச்சம்பவத்தில் தொடர்புடைய வைத்தியர் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற முற்பட்டதாலேயே, அவரை நீதி விசாரணையின் முன் நிறுத்த வேண்டிய கடப்பாட்டின் அடிப்படையில் அவரை எமது கண்காணிப்பின் கீழ் வைத்திருந்து விசாரணைக்காக கையளித்தோம். அவ்வாறு செய்திராவிட்டால் குறித்த வைத்தியர் யாழ்ப்பாணத்தை விட்டுத் தப்பிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தன.

இவ்வாறு மருத்துவமாது தர்ஷிகா மரணம் தொடர்பாக நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் முழுவிவரமும் வருமாறு-வேலணை வைத்தியசாலை மருத்துவமாது மரணம் சம்பந்தமாக குறிப்பிட்ட வைத்தியரை நான் பாதுகாத்ததாக சில செய்திகள் வெளியாகியுள்ளன. இவ்விடயம் சம்பந்தமாக உண்மை நிலையை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று குறிப்பிட்ட வைத்தியரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. இந்நிலையில் அவர் நீதி விசாரணைக்கு முகம் கொடுக்காது யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற முற்பட்டார். அவரை நீதி விசாரணைக்கு முன் நிறுத்த வேண்டிய கடமைப்பாடு எனக்கு இருந்தது. எனவே தான் அவரை நீதி விசாரணைக்கு கையளிக்கும் வரை எமது நிறுவனத்தில் எமது கண்காணிப்பின் கீழ் வைத்திருந்து நீதி விசாரணைக்காக கையளித்தோம். இல்லாவிடில் அவர் யாழ்ப்பாணத்தை விட்டுத் தப்பிச் செல்ல வாய்ப்புக்கள் இருந்தன.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று வேலணை வைத்திசாலையில் குறிப்பிட்ட வைத்தியருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இந்நிலையில் அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும். எனவே மத்திய சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கமைய அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

எனவே அவர் நீதி விசாரணைகளிலிருந்து தப்பிச் செல்லாது தடுக்கவும், இச்சம்பவத்தால் பாரிய பின்விளைவுகள் ஏற்படுவதை தடுக்கவுமே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்பதை தெளிவு படுத்தவிரும்புகிறேன்.

இவ்வைத்தியரால் அம் மருத்துவமாதிற்கு துன்புறுத்தல் இடம்பெற்றதாக எமக்கு அறிவிக்கப்பட்டும் நாம் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கத் தவறியதாகச் செய்திகள் வெளியாகின. இது சம்பந்தமாக ஒரு போதும் எமக்கு அறியத்தரப்படவில்லை என்பதை பகிரங்கமாக தெளிவுபடுத்த விரும்புகிறேன்- என்றுள்ளது. (எ)




# வலி. மேற்குப் பகுதியில் 24 மணிநேரமும் சேவையை தேசிய சேமிப்புவங்கி வழங்குகின்றது

## முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ,ஜூலை19

வலி. மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஏ.ரி.எம் வசதியுடன் 24 மணிநேர சேவையை முழுமையாக வழங்கி வாடிக்கையாளரது தேவையை தேசிய சேமிப்பு வங்கி பூர்த்திசெய்து வருகின்றது.

அத்துடன் மக்களுக்குத் தேவையான நிதி ரீதியான சேவைகளை நடமாடும் வங்கிச் சேவை மூலம் உடனுக்குடன் தேசிய சேமிப்பு வங்கி வழங்கி வருகின்றது.

இவ்வாறு தேசிய சேமிப்பு வங்கியின் சங்கானைக் கிளை யின் முகாமையாளர் பி. வரதராஜன் தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

சங்கானைத் தேசிய சேமிப்பு வங்கியானது அரச உத்தரவாதம் உடையது.

நீண்ட காலமாக இப்பகுதியில் சேமிப்பு வங்கி ஒன்று இல்லாத குறையைத் தற்போது பூர்த்தி செய்துள்ளோம்.

தற்போது எமது வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கான சேவையை நேர முகாமைத்துவத்தின் கீழ் சில நிமிட நேரங்களிலேயே பூர்த்தி செய்து வழங்குகின்றோம்.

மேலும் அதிர்ஷ்ட வெள்ளித்திட்டத்தின் கீழ் பரிஆதிய சேமிப்பு, வைப்பு சாதாரண சேமிப்புக் கணக்கு, 'ஏரிஎம்' வசதி உட்பட பல சேவைகளை முந்திக் கொண்டு வழங்குகின்றோம்.

எதிர்காலத்தில் பல்வேறு நலத்திட்டங்களை சிறியவர் முதல் முதியவர் வரைக்கும் அறிமுகப்படுத்த எண்ணியுள்ளோம்- என்றார். (எ-302)

# கண்மூடிக்கிடக்கும் வீதி விளக்குகள் கல்லடிபடுகின்றனர் பயணிகள்!

கொழும்புத்துறை ,ஜூலை19

குருநகர் டேவிற் வீதி மிகவும் சேதமடைந்து, குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னர் இந்த வீதியைச் செப்பனிட்ட போது மேல் தார்ப்பூச்சு இடப்படாமை போன்ற தொழில் நுட்பத் தவறுகள் காரணமாகவே டேவிட் வீதி மிக விரைவில் சேதமுற்றுள்ளதாகச் சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை இவ்வீதியிலுள்ள வீதி விளக்குகளும் இரவில் ஒளிராது, கண்மூடி இருப்பதினால் பயணிகள் வீதிகளில் உள்ள குழிகளில் விழுந்து கல்லடி பட நேரிடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

டேவிட் வீதியில் இரவும் பகலும் பல அசௌகரியங்களைச் சந்தித்து வரும் இப்பகுதி மக்களின் குறைபாடுகள் நிவர்த்தி செய்ய உரியவர்கள் கவனமெடுக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர். (எ-135)

# ஆங்கில தினக் கவிதை ஒப்புவித்தலில் வெற்றிபெற்ற மாணவர் விவரம்

வலி. வடக்கு ,ஜூலை19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டிகளில் கவிதை ஒப்புவித்தலில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**தரம் 3**

முதலாமிடம்- மதுமதா ரமணன்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, இரண்டாமிடம்- தீபிகா சிங்கபாலன்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம்- பிரியங்கா அகிலன் குமார்- உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் 4**

முதலாமிடம்- சந்துஜா கிருபாகரன்- உடுவில் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- ரமந்தி அபியல் அந்தோனி- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மூன்றாமிடம்- சதானந்தன் லக்ஷன்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

**தரம் -5**

முதலாமிடம்- டிலக்ஷன் தமிழ்ச் செல்வம்- மானிப்பாய் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - சாரங்கி பகீரதன்- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மூன்றாமிடம்- சாயித்தியா செல்வகுமார் - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் 6**

முதலாமிடம் எஸ்.ஜனனி - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, அமின்டா நிசரின் பெஞ்சமின் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி , மூன்றாமிடம்- துஷியா ஸ்ரீகாந்தன்- மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

**தரம் 7**

முதலாமிடம்- தர்ஷிகா சபாரெட்ணம் சிங்கி- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இரண்டாமிடம்- நிசோதா நந்தகுமார் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மூன்றாமிடம் கோஜிகா பரமேஸ்வரன் - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**தரம் 8**

முதலாமிடம்- விதுஷா லிங்கசபேசன்- உடுவில் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- சிந்துஜா சிவராசா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் கீர்த்தனா ஜெயரட்ணம்- சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**தரம் 9**

முதலாமிடம்- ஆஷா டிவினியா - சொலமன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இரண்டாமிடம் சிவாஜி ஆரமுதன் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, மூன்றாமிடம்- தஸ்மினி தனநாதன் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**தரம்- 10**

முதலாமிடம்- ஹனுஜா சேவியர்- இளவாலை புனித கன்னியர் மடம் வித்தியாலயம், இரண்டாமிடம்- நிக்ஷலா நடேசன்- உடுவில் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம்- அஞ்சலின் சிவகுரு ஜோசேப் - உடுவில் மகளிர் கல்லூரி.

**தரம் 11**

முதலாமிடம்- பிரதக்ஷனா சிவசுப்பிரமணியம் - உடுவில் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- கமலினி மில்ஸ் -உடுவீல் மகளிர் கல்லூரி, மூன்றாமிடம்- ஜெயநாதன் ஐங்கரன்- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (எ-86)

# மதுபோதையில் ரகளை புரிந்த தென்னிலங்கை வாசிகளுக்கு அபராதம்

யாழ்ப்பாணம் ,ஜூலை19

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் மதுபோதையில் ரகளை புரிந்த ஒன்பது தென்னிலங்கை வாசிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

மொரட்டுவப் பகுதியிலிருந்து வந்து இரும்பினால் தயாரிக்கப்படும் கட்டில்கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் என்பவற்றை விற்பனை செய்யும் ஒரு குழுவினருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை இவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் தலா 15 நாள்கள் வீதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (எ-207)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக வணிக பீடப் பீடாதிபதியுமான பேராசிரியர் க.தேவராஜா கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: ரட்ணம்,நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புகைப்படக்கலைஞர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி."

# பிரியங்கா

டிஜிற்றல் கலர் லாப்

பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 5 670 210

வடக்கு கிழக்கில் முதன் முறையாக
NORITSU QSS-37HD (High Dimination) 640 DPI, எனும் இயந்திரத்தை
அறிமுகப்படுத்தியது பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்பினரே!

எம்மிடம் 3R-தொடக்கம் 12X36 வரையான அளவில் புகைப்படங்களைபிரதியாக்கம் செய்துகொள்ளவும், போட்டோ, வீடியோ, உட்புற வெளிப்புற படப்பிடிப்பு, வீடியோ எடிற்றிங், கொம்பியூட்டர் டிசைனிங், ஸ்கானிங், Cool&Hot லெமனேற்றிங், அல்பம்மேக்கிங், டியூறோபிறேம்ஆகிய சேவைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்...




# மரண அறிவித்தல்

## சுந்தரம் பொன்னம்மா

(தர்மகர்த்தா, விழுபளை கண்ணகை அம்மன், எழுதுமட்டுவாழ்)



விழுபளை, எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும் மீசாலையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம் பொன்னம்மா நேற்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் அருந்தவநாயகி, இராஜேஸ்வரி, திருஞானசம்பந்தர் (மார்க்கண்டு - சுவிஸ்), சுப்பிரமணியம் (கனடா), பாலகிருஷ்ணன் (பாலு - டென்மார்க்), பாஸ்கரமூர்த்தி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பாலாவி தெற்கு,
கொடிகாமம்.
தொ.பே.: 021 3737248

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி.கிழக்கு பிரதேசத்தின் தேசிய மத்தியஸ்தர் தினவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் மத்தியஸ்த சபைத் தலைவர் இ.மயில்வாகனம் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர், மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம், வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் ஆகியோர் உரையாற்றுவதை முறையே இரண்டாவது, மூன்றாவது, நான்காவது படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.
(படங்கள்:- நாவற்குழிச் செய்தியாளர், கலைஞன்)

# ஆறாயிரம் மொழிகள் இருந்தாலும் கூட தமிழ் உட்பட ஆறு மொழிகளே செம்மொழிகள்

## கலை இலக்கிய விழாவில் உடுவை எஸ்.தில்லைநடராஜா உரை

பருத்தித்துறை,ஜூலை 19
'உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் இருந்துள்ளபோதிலும் எமது தமிழ் மொழி உட்பட 6 மொழிகள் மட்டுமே செம்மொழி என்ற சிறப்பினைக் கொண்டுள்ளன'.

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தினால் நடத்தப்பட்ட கலை இலக்கிய விழாவின் முதலாம்நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வு நிலை, கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் உடுவை எஸ்.தில்லை நடராசா கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்தவிழா வடமராட்சி, துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் தலைவர் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் தில்லை நடராசா தொடர்ந்து உரையாற்றும்போது கல்விக்கு அடுத்ததாக கலைகளும் இலக்கியங்களுமே தமிழ் மக்களை வழிப்படுத்துகின்றன. இலக்கியங்கள் எமது வாழ்வுக்கு வழிகாட்டியாக உள்ளன. மகாத்மா சிறுவயதிலே அரிச்சந்திரா நாடகத்தை பார்த்து சத்தியத்தை பேணியதினால்தான் உலகத்தால் மகாத்மாவாக போற்றப்படுகின்றார்.

கலைகள் எல்லாம் தமிழ் மக்களால் தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றன. அவ்வாறு தொடர்ந்து பேணி வருவதினால்தான் பலம் கொண்டதாக எமது சமூகம் உள்ளது. அருமையான கலைகள் எல்லாம் எமது தமிழ் மொழியில் உள்ளன.

உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் இருந்துள்ளபோதிலும் எமது தமிழ்மொழி உட்பட ஆறு மொழிகள் மட்டுமே செம்மொழி என்ற சிறப்பினைக் கொண்டுள்ளன.

எமது தமிழுக்கு இனிமை இருக்கின்றது. தொன்மை இருக்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்த இலக்கியங்களைக் கொண்டதாக தத்துவங்களைக் கொண்டதாக-உள்ளது.

'பாராட்டுதல் என்பது தமிழர்களிடையே அவர்கள் வாழ்வதற்கு வழிகாட்டுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக எமது மொழி, இலக்கியம் வளரவும், சமூகம் வாழ்வும் வழிகாட்டுகின்றது' என்றார்.

இவ்விழாவில் மூத்த எழுத்தாளர் கலாபூஷணம் தெணியான், பண்டிதை வ.பத்தினிப்பிள்ளையம்மா, கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (எ-190)

# தேருநர் படிவங்களை மீள ஒப்படைக்கவும்

கொழும்புத்துறை, ஜூலை19
யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் வாக்காளர் இடாப்புத் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென தேர்தல் திணைக்களம் தயாரித்துள்ள தேருநர் திருத்தப்படிவங்கள் கிராம அலுவலரூடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இப்படிவத்தினை 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தத்தமது குடும்ப விவரங்களுடன் பூர்த்திசெய்து கிராம அலுவலரிடம் விரைவாக ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

பல இடங்களில் பொதுமக்கள் தமது அசமந்தப்போக்கினால் இதுவரை இப்படிவங்களை மீள ஒப்படைக்காது இருப்பதாக சில கிராம அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடும் போது வாக்களிப்பதிலும் இதர தேவைகளுக்கு வாக்காளர் இடாப்பு பிரிவிடுதல், பிரதி பெற்றுக்கொள்ளல் என்பவற்றின் போது பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-135)

# சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் கிராமஅபிவிருத்தித்திட்டம் முன்னெடுப்பு

சண்டிலிப்பாய்,ஜூலை 19
கோண்டாவில் சமுர்த்தி வங்கிச் சங்கம் தனது சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும், கிராமத்தின் அபிவிருத்திக்காகவும் நிதியுதவியையும், வேலைத்திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறது. இதனால் நூற்றுக்கணக்கான பயனாளிகள் நன்மை அடைந்துள்ளதுடன் பல வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

இரண்டாயிரத்திற்கும் அதிகமான உறுப்பினர்களைக்கொண்ட இச்சங்கம், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்கள் வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் இதுவரை 106 பேருக்கு 50வீத மானியத்துடன் 10ஆயிரம் ரூபாவிலிருந்து 30 ஆயிரம் ரூபாவரை ஒருவீத வட்டிக் கடனாக வழங்கியுள்ளது. சூழற்சி முறையில் வழங்கப்பட்டுவரும் இக்கடன் ஏனைய அங்கத்தவர்களும் தொடர்ந்து வழங்கப்பட இருக்கின்றது.

ஜே/125 கிராம சேவைகள் பிரிவிலுள்ள கல்திட்டி வீதி, ஜே/116 பிரிவிலுள்ள பாடசாலை வீதி, வெள்ள வாய்க்கால், ஜே/99 பிரிவிலுள்ள மயிலு வீதி ஆகியன பல லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப் பட்டுள்ளன. இதேபோல் வீட்டுத் திட்டத்தில் உள்ள மூன்று வீதிகளும் சுமார் 15 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப் பட்டுள்ளன.

'திரிய பியறு' திட்டத்தின்கீழ் கொக்குவில், கோண்டாவில் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவில் மூன்று வீடுகள் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களும், வாழ்வாதாரத் திட்டங்களும் தொடர்ந்தும் மேற்கொள்ளவிருப்பதாக மேற்படி சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (எ-115)

# கொழும்புத்துறை வாடிக்கட்டடத்துக்கு மீண்டும் உயிர் கொடுங்களேன்!

கொழும்புத்துறை,ஜூலை 19
கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் களைப்பாறிச் செல்லும் வாடிக்கட்டடம் கடந்தகால போரின் தாக்கங்களினால் முற்றாக அழிவடைந்து காணப்படுகிறது.

தற்போது சுமுக நிலை திரும்பியுள்ளதைத் தொடர்ந்து இப்பகுதி மீனவர்கள் இரவு, பகல் இருவேளைகளிலும் கடற்றொழிலை மேற்கொள்வதாகவும் இதன்போது தொழிலாளர்கள் தங்கிக் களைப்பாறிச் செல்லவும் வலைகளைச் சீர்செய்யவும் இந்த வாடியின் அவசியம் உணரப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே மீனவர்களின் தொழில் முயற்சியினை மேம்படுத்த வசதியாக மேற்படி வாடிக் கட்டடத்தைப் புனரமைத்து உதவுமாறு இப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-135)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சந்தைக்குக் கொண்டுவரும் கோழிகளை கோழியிறைச்சிக் கடைக்கே விற்கவேண்டும்

## -திருநெல்வேலிச் சந்தையில் புதுச்சட்டம்-

சண்டிலிப்பாய்,ஜூலை 19
குடாநாட்டின் முக்கிய சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலிச் சந்தையில் பொதுமக்கள் கோழிகளை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சந்தைக்குக் கொண்டு வரப்படும் சகல கோழிகளையும் சந்தையில் இயங்கும் கோழி இறைச்சிக் கடைக்கே விற்பனை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை குறித்துக் கவலையும், அதிருப்தியும் அடைந்துள்ள பொதுமக்கள், இது குறித்துச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென்று கேட்டுள்ளார்கள்.

மேற்படி சந்தை புனரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் ஒரு பகுதியில் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழி இறைச்சிக்கடைகள் ஆகியன இயங்கி வருவதுடன் மீன் சந்தையும் இயங்கி வருகின்றது.

கடந்த காலங்களில் சந்தைக்குக் கோழிகளைக்கொண்டு செல்லும் பொதுமக்கள் அங்கு வைத்து அவர்களே கோழிகளை விற்பனை செய்தும் வந்தனர் இதனால் கோழி விற்பவர்களும், வாங்குபவர்களும் நன்மை அடைந்துவந்தனர்.

ஆனால் தற்பொழுது பொதுமக்கள் வழமைபோல் சந்தையில் வைத்துக் கோழிகளை விற்பனை செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சந்தைக்குக் கொண்டு செல்லும் கோழிகளை அங்குள்ள கோழியிறைச்சிக் கடைக்கே விற்க வேண்டுமென்று தெரிவிக்கக்கப்பட்டுள்ளது. இதனால் கடைக்காரர் கேட்ட விலைக்கே கோழிகளைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை குறித்துக் கவலையும், அதிருப்தியும் அடைந்துள்ள பொதுமக்கள் கடந்த காலங்களைப்போல் சந்தையில் வைத்துப் பொதுமக்கள் கோழிகளை விற்பனை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேச சபையைக் கேட்டுள்ளனர். (எ-115)

# வலி.மேற்கின் திண்மக்கழிவுகளுக்கு கல்லுண்டாய் வெளியில் சமாதி!



யாழ்ப்பாணம், ஜூலை 19
வலி.மேற்குப் பிரதேச சபைக் குட்பட்ட அராலி, வட்டுக் கோட்டை, சங்கானை, சுழிபுரம் ஆகிய பிரதேசங்களில் உள்ள டெங்கு அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய 230 டிராக்டர் அளவுடைய லோட் திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன.

பிரதேச பொறுப்பதிகாரி ஊடாக கிராமம்-கிராமமாக ஒலி பொருக்கி மூலம் திண்மக் கழிவுகள் வீதிவீதியாகப் பெறப்பட்ட பின் முழுக் கழிவுகளும் அகற்றப்பட்டுஅராலி-கல்லூண்டாய் வெளியில் இதற்கென உள்ள பிரத்தியேகமான இடத்தில் புதைக்கப்பட்டன. இதன் மூலம் உடனடியாக வலி.மேற்குப் பிரதேசத்தில் உள்ள டெங்கு அபாயம் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை-சங்கானை கரைச்சி மயானத்திற்கு விரைவில் ரூபா 12 லட்சம் செலவில் சுற்றுமதில் அமைக்கப்பட்டு அங்குள்ள திண்மக் கழிவுகள் முழுமையாக புதைக்கப்பட்டு அழிக்கப்படவுள்ளன.

இத்திட்டம் நிறைவேறிய பின்னர் சங்கானை கரைச்சி மயானம் புனித பூமியாக பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணியால் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை- பிரதேச சபைச் செயலாளர் தலைமையில் டெங்கு கட்டுப் பாட்டுக்கான 12 குழுக்கள் அமைக்கப்பட்டு-

கிராம ரீதியில் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் இந்த டெங்குக் கட்டுப்பாட்டுக்கான குழுக்கள் வாரந்த அறிக்கையினையும் சமர்ப்பித்து வருகின்றன. 25 கிராம அலுவலர் பிரிவுகளில் மீண்டும் திண்மக் கழிவு சேர்க்கும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி முதல் இப்பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் உயர்ந்த கட்டடமாக மிளுரும் கூட்டுறவின் சின்னம் வீரசிங்கம் பொது மண்டபம்

யாழ். நகரில் பரந்து விரிந்து கிடக்கும் பண்ணைக்கடலை அடுத்து பழைய ஒல்லாந்தர் கோட்டையைக் கடந்தால் பச்சை பசேலென முற்ற வெளி. இதற்கு எதிரே கம்பீரமாக,அழகாக கூட்டுறவின் சின்னமாக காட்சி அளிக்கிறது வீரசிங்கம் மண்டபம்.ஐந்தடுக்கு மாடிகளை கொண்டமைந்தது இக்கட்டடம். அவற்றில் ஒன்று மொட்டைமாடி. இதன் மீது நின்று யாழ்ப்பாணத்தின் முழு அழகையும் அள்ளிப்பருகலாம். யாழ்ப்பாண அபிவிருத்தி என்ற பெயரிலே எத்தனையோ வானுயர்ந்த கட்டடங்கள் இன்று முளைக்க தொடங்கினாலும் அன்று தொட்டு இன்று வரை நகரின் உயர்ந்த கட்டடமாக இருந்து வரும் சிறப்பு இதனையே சாரும். இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டது முதல் இப்பிரதேசத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகவும் வசதி நிறைந்த தாகவும் விளங்கியது. இதற்கு சிறந்த உதாரணமாக வடபகுதியிலேயே முதன்முதலில் மின்தூக்கி (லிப்ற்) வசதியுடன் இயங்கியதை கூறலாம்.இன்றும் அங்கு செல்பவர்கள் அதற்குரிய அடையாளங்களை காணமுடியும்.

பல்லாயிரம் கலைஞர்களின் கலைக்கூடமாக, அறிவுசார் பெரியார்களின் மாநாட்டு மண்டபமாக, வடபகுதிக்கு வரும் பிரமுகர்களை வரவேற்கும் வரவேற்பு நிலையமாக, திருமண மண்டபமாக பல்பரிமாணம் கொண்ட இதன்பங்கு அளப்பரியது. 1974 ஆம் ஆண்டு நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடந்தேறிய இடம் என்ற பெருமையையும் இது தன்னகத்தே கொண்டது. அது மட்டுமா? யாழ்.பல்கலைகழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவும் இங்கேயே நடைபெற்றது. அந்த வகையில் இம்மண்டபத்தின் வரலாறு பற்றி அறிந்திருப்பது வட பகுதி மக்கள் ஒவ்வொருவரதும் கடமை யாகும்.





1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் - அன்றைய வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபை கூட்டுறவாளர்களின் வருடாந்த மாநாடு, பொது கூட்டங்கள் என்பவற்றை றீகல் பட மாளிகையிலும் நகர சபை மண்டபத்திலும்தான் நடத்தி வந்தது. இந்நிலையிலேயே சபையானது தனக்கெனச் சொந்த கட்டடம் ஒன்றை நிறுவ வேண்டிய தேவையை உணர்ந்து கொண்டது. 1962 ஆம் ஆண்டு வருடாந்தப் பொது கூட்டத்திலே கூட்டுறவு பெரியார் வீரசிங்கம் தலைமையில் மாநாட்டில் சபைக்கென காரியாலயமும் மண்டபமும் அமைக்க வேண்டும் எனத் தீர்மானிக் கப்பட்டது.

இதற்கான நிதியை முன்கூட்டியே ஒவ்வொரு சங்கத்தினதும் நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டது . அதிலிருந்து பெரும்பகுதியும் மிகுதிப் பணம் கூட்டுறவு வங்கியிலிருந்து கடனாகப்பெறப்பட்டது.

அக்காலத்தில் பிரபலமாக விளங்கிய கட்டடக் கலைஞர் துரைராசா அசோசியேற் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு, இம் மண்டபத்தை கட்டப்படுவதற்கான பணிகள் நடந்து கொண்டு இருக்கும் போதே - அதாவது 05.12.1964 இல் - கூட்டுறவு பெரியார் வீரசிங்கம் அமரத்துவம் அடைந்து விட்டார்.

பெரியார் வீரசிங்கம் சிறந்த கூட்டுறவாளராக வாழ்ந்து வடபகுதிக்கு மட்டுமன்றி இலங்கை முழுவதிற்கும் 25 வருடங்களுக்கு மேல் சேவை



ஆற்றியவர். இவரின் கூட்டுறவுப் பணிக்கு பெரிதும் மதிப்பு வழங்கி 18.12.1964 இல் யாழ்.மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற அமரரின் நினைவு அஞ்சலிகூட்டத்தில் புதிதாக கட்டப்படும் மண்டபத்திற்கு வீரசிங்கம் மண்டபம் எனப் பெயரிட வேண்டுமெனக் கூட்டுறவாளர்கள் தீர்மானித்தனர். மேற்கொண்டு கட்டட வேலைகளை அக்காலப்பகுதியில் வடபகுதி ஐக்கிய மேற்பார்வையாளராக இருந்து ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆர்.இராஜரட்ணம், செயலாளர் ஓய்வுபெற்ற அதிபர் அ.கந்தையா, நிர்வாகச் செயலாளர் பொ.செல்வரத்தினம் ஆகிய கூட்டுறவாளர்களது தளராத முயற்சியின் பயனாக இம் மண்டப வேலைகள் செவ்வனே செய்து முடிக்கப்பட்டன.

இம்மண்டபத் திறப்பு விழா 27.11.1968 அன்று கோலாகலமாக நடைபெற்றது. மண்டபத்தை கூட்டுறவு முன்னாள் ஆணையாளரும், சர்வதேசக்கூட்டுறச் சம்மேளனத்தின் தென்கிழக்காசிய பிராந்தியப் பணிப்பாளருமாகிய ஈ.வீரமன் திறந்து வைத்தார் தொடர்ந்து இசைமணி மேனாம்பிகை கணேசனின் கூட்டுறவு இசைவிருந்தும், குமரி லீலா நாராயணனின் நடனவிருந்தும் தான் இம்மண்டபத்தை அலங்கரித்த முதல் நிகழ்வுகள் என்று சொல்லாம்.

1972 ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்பின் புரனமைப்பு நடவடிக்கையின் கீழ் வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையும் அதன் சொத்துகளும் தேசிய கூட்டுறவு அமைப்புடன் இணைக்கப்பட்டன. இருந்த போதும் தொடர்ந்தும் இம்மண்டபத் தின் பயன்பாடுகள் இப்பிரதேசங்களுக்கு கிடைத்தே வந்தன.

1987ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையால் இம்மண்டபமும் பேரழிவை சந்தித்தது. 1989 இல் கூட்டுறவு அமைப்பில் ஏற்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கையின் பயனாக 19.05.1989 இல் மாவட்ட கூட்டுறவு சபை தோற்றம் பெற்ற போதும் இக்கட்ட டத்தின்

**தொகுப்பு: சித்தார்த்**

இழப்பால் அந்தச் சபை சுமார் 13 ஆண்டுகளாக பல்வேறு இடங் களில் வாடகைக் கட்டடத்திலேயே செயற்பட்டு வந்தது.

இக்கட்டடத்தை புனரமைப்புச் செய்ய வேண்டும் என பணிப்பாளர்சபையும், கூட்டுறவுசபை யும் காட்டிய ஆர்வத்தின் பலனாக மீண்டும் தேசிய கூட்டுறவு சபையிடம் இருந்து மண்டபம் மீளப் பெறப்பட்டது. எனினும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த அமைதியான சூழலை பயன்படுத்தி மண்டபத்தை புனரமைப்புச் செய்வதற்காக துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் மீண்டும் நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையால் கட்டடவேலை திட்டம் நிறுத்தப்பட்டது. 1997ஆம் ஆண்டு நிலைமை ஓரளவிற்கு சுமூகமாக வந்ததும் எப்படியாவது இக்கட்டடத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற முயற்சியில் பணிப்பாளர் சபை இறங்கியது .

இதன் பயனாக மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகளில் பெரும்பகுதி வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்டது. கூட்டுறவு சங்கங்களும் சமாசங்களும் கூட்டுறவு சங்க பணியாளர்களும் தம்மாலான பங்களிப்பை வழங்கினர். இதனால் வீரசிங்கம் மண்டபத்தை இன்று எம் கண் எதிரே நிமிர்ந்து கம்பீரமாக நிற்க வைத்துள்ளார்கள்.எனவே ஏ.சி. இல்லை, அது இல்லை என்று பேசுவதை விடுத்து பெருமை மிகுந்த இம்மண்டபத்தை இக்கால நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் மாற்றி அமைத்து நாட்டில் மிகச் சிறந்த மண்டபமாக மிளிரசெய்வதற்கு அனைவரும் தம்மாலான உதவிகளை வழங்க முயற்சி செய்யவேண்டும்.

## ஆஸ்பத்திரி வீதியில் மீண்டும் தலைதூக்கும் நடைபாதைக் கடைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். நகரில் ஆஸ்பத்திரி வீதியின் நடைபாதை ஓரமாக வியாபாரிகளின் பிரசன்னம் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இந்த வீதியின் நடைபாதையில் முன்னர் வியாபார நடவடிக்கையில் ஈடு பட்டோரை பொலிஸார் அப்பகுதியில் இருந்து அகற்றியிருந்தனர். அதன் பின் இப்பகுதியில் நடைபாதைக் கடைகள் காணாமல் போயிருந்தன.

ஆனால் தற்போது மீண்டும் வியாபாரிகள் நடைபாதைகளில் தற்காலிக கடைகளை அமைத்துப் பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர்.

வியாபாரிகளின் இந்த நடவடிக்கையால் நடைபாதையால் பயணம் செய்யும் பாதசாரிகள் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

நடைபாதை வியாபாரிகள் ஆக்கிரமிக்கத் தொடங்கியுள்ளதால் பாதசாரிகள் வீதியோரமாக நடக்க வேண்டிய நிலையும் தோன்றியுள்ளது. எனவே இது குறித்து உடன் நடவடிக்கை தேவை என்று பயணிகள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## டெங்கு நோய் ஒழிப்பு பக்ரீறியாவை வீடு வீடாக விநியோகிக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 19

டெங்கு நோயை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தவுள்ள - கியூபாவிலிருந்து தருவிக்கப்படவிருக்கும் - பீ.ரீ.ஐ. பக்ரீறியாத் திரவம் ஏற்கனவே திட்டமிட்டதற்கமைய வான் மூலமாக விசிறப்பட மாட்டாது. அதற்குப் பதிலாக போத்தல்களில் அடைக்கப்படும் பீ.ரீ.ஐ. திரவத்தை வீடுகள் தோறும் விநியோகிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டதற்கமைய 10 ஆயிரம் லீற்றர் பீ.ரீ.ஐ. பக்ரீறியா திரவத்தை வான் மூலமாக விசிறுவதற்கு ஏறத்தாழ 18 கோடி ரூபா செலவாகும் என்பதால் அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக சுகா தார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

வீடு வீடாகப் பக்ரீறியாத் திரவத்தை விநியோகிக்கும் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுவது தொடர்பாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பிரதேச ரீதியிலான குடம்பி நிபுணர்களின் ஒத்துழைப்பும் பெறப்பட உள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ-206)



வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கான சுயதொழில் முயற்சிக் கைத்தொழில் கருத்தரங்கு நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. வளவாளர்களாகக் கலந்துகொண்ட இராணிபெர்னான்டோ மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பொது முகாமையாளர் ஜஸ்மின் மன்னப்பெரும ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், காட்சிப்படுத்தப்பட்ட கைவினைப் பொருட்களை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். (டிலீப், தமிழினி, சோபனா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை மாநகரசபையால் தமிழ்ப் பகுதிகள் புறக்கணிப்பு

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜூலை18

கல்முனை மாநகரசபையால் கல்முனை தமிழ்ப் பகுதிகள் புறக் கணிக்கப்படுகின்றன. எனக் கல்முனை மாநகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஏ.அமிர்தலிங்கம் குற்றஞ் சாட்டினார்.

கல்முனை மாநகரசபையின் அமர்வு கடந்த வியாக்கிழமை புதிய மேயர் மசூர் மௌலானா தலைமையில் இடம்பெற்றது.

இதில்அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

கல்முனை வடக்கு பகுதிக்கென தெரு விளக்குகள் பொருத்துவதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்பு 32 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. அப்போது மேயராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம்.ஹரிஸ் இருந்தார்.

ஆனால், இதுவரை இங்கு எவ்வித வேலைகளும் செய்யப்படவில்லை. அதற்காக ஒதுக்கப்பட்ட 32 லட்சம் ரூபா நிதி எங்கே? அதற்கு என்ன நடந்தது என்று கூடத் தெரியாது. ஆனால், இதனோடு, சாய்ந்தமருது பகுதிக்கென ஒதுக்கப்பட்ட 60 லட்சம் ரூபா நிதிக்கான வேலைகள் நிறைவடைந்துள்ளன. இதன் விளக்கத்தை மேயர் தர வேண்டும்.

கல்முனை மாநகரசபைக்கு கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சிவநேச துரை சந்திரகாந்தன் வருகை தந்த போது முன்னாள் மேயர் ஹரிஸ் அவரிடம், 'தமிழ் மக்களுக்கு எந்தப் புறக் கணிப்புமின்றி நான் வேலை செய்கின்றேன். கல்முனை வடக்குப் பகுதிக்கு 32 லட்சம் ரூபா செலவில் தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளன. அதற்கான வேலைகள் இரு வாரங்களில் ஆரம்பிக்கப்படும்'' என்று கூறியிருந்தார். ஆனால், இதுவரை நடந்தது ஒன்றும் இல்லை. இதனை தமிழ்ப் பகுதிகளின் புறக் கணிப்பாகவே நான் பார்க்கின்றேன்.

கல்முனை மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட தமிழ்ப் பகுதிகளிலுள்ள வீதிகள் மின்விளக்குகள் இல்லாமல் இருள் சூழ்ந்து காணப்படுகின்றன. இங்கு மின் விளக்குகள் அமைப்பதற்காக நிதி ஒதுக்கித்தருமாறு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் சோ.புஷ்பராசாவிடம் கோரியுள்ளேன்.

- இவ்வாறு அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

(ளி)

# பேராளர்களுக்கு அழைப்பு தமிழ்ச் செம்மொழிவிழாவுக்கு

அம்பாறை, ஜூலை 19

கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் நினைவாக நடத்தும் தமிழ்ச் செம்மொழி விழாவிற்கான அழைப்பிதழ்கள் வெளியிடப்பட்டு அனுப்பப் பட்டுள்ளன.

மாகாணக்கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஸாம் தலைமையில் இன்று திங்கட்கிழமை காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் தமிழ்ச் செம் மொழி விழா நடைபெறும்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் முதன்மை விருந்தினராகவும், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திஸாநாயகா கௌரவ விருந்தினராகவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியா பாண்டிச்சேரி புதுவைப் பல்கலைக்கழக சுப்பிரமணிய பாரதி தமிழியற் புலத் தலைவர் பேராசிரியர் ஏ.அறிவு நம்பி, சிங்கப்பூர்முனைவர்இ.வெங்கடேசன், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் முனைவர் கே.பிரேம்குமார், தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் முனைவர் எஸ்.எம். இஸ்மாயில் ஆகியோர் விசேட விருந் தினர்களாகக் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் வ.பொ. பாலசிங்கம், கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் எச்.கே.யூ.கே. வீரவர்த்தன, கிழக்கு மாகாண பிரதிக்கல்விச் செயலாளர் எஸ். தண்டாயுதபாணி ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாகக் கலந்து கொள்வர்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் தமிழ்ப் பேராசிரியர்களான எஸ்.தில்லைநாதன், சு.சண்முகதாஸ், கா.சிவத்தம்பி, எம்.ஏ. நுஃமான், சி.சிவலிங்கராஜா, எஸ். மௌனகுரு, சித்ரலேகா மௌனகுரு, க.அருணாசலம் ஆகியோர் கௌரவ பேராளர்களாக வருகை தரவுள்ளனர்.

கிழக்கிலங்கையின் தமிழ்ப் படைப்பாளிகள் விழாவிற்கு அழைக்கப்பட்டுள்ளனர். இரு நூல்கள் வெளியிடப்படவுள்ளன. சுவாமி விபுலானந்தரின் மருமகள் திருமதி. கோமேதக வல்லி செல்லத்துரை (இ.அதிபர்) கௌரவ பேராளராக அழைக்கப்பட்டுள்ளார்.

மாகாணகல்வித் திணைக்களம் கல்முனைக்கு வருகை தந்து போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

பொறுப்பாளர் எஸ்.முருகுப்பிள்ளை விழா ஒழுங்குகளைக் கவனித்து வருகிறார். அத்துடன்,காரைதீவின் பொது நல அமைப்புகளும் உஷாராக பணியிலீடுபட்டு வருகின்றன. (ளி)




# வெருகல் பிரதேசத்தில் வங்கிக்கிளை தேவை

திருகோணமலை, ஜூலை 19

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில், வங்கிக்கிளைகள் திறக்கப்பட வேண்டுமென, பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

வங்கி தொடர்பான சேமிப்பு, பணம் பெறுதல், அரச ஊழியர்களின் ஊதியம் பெறுதல், ஓய்வூதியம் பெறுதல், நகைஅடகு வைத்தல், கடன் பெறுதல் ஆகியவை உட்பட அநேக தேவைகளை நிறைவேற்றவேண்டிய கட்டாயம் உண்டு என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதன்பொருட்டு, நாளாந்தம் அநேக பொதுமக்களும், அரச ஊழியர்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களுடன் தூர இடங்களிலுள்ள வங்கிச் சேவைகளை நாடவேண்டிய நிலையில் உள்ளார்கள் - என்றும் இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

வெருகலில் வங்கிகிளைகளை திறந்து நடமாடும் வங்கிச் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பல தடவைகளில் வங்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். எனினும், இதுவரை ஒன்றும் நடக்கவில்லை என்றும் மக்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி வெருகலில் அரச வங்கிக் கிளைகளை திறக்க காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

(ளி)

# ஊவா மாகாணத்தில் டெங்கு தீவிரம் பொலிஸ் பொறுப்பதிகாரி உயிரிழப்பு

## தொடர் மரணங்களால் மக்கள் அச்சம்

கொழும்பு, ஜூலை 19

ஊவா மாகாணத்தில் டெங்கு நோய் மிகத் தீவிரமாகப் பரவிவருகின்றது. உயிரிழப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்கின்றது.

டெங்கு நோயால் பீடிக்கப்பட்டிருந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரும் கடந்த வியாழக்கிழமை மரணமடைந்துள்ளார்.

பசறையை அண்மித்த படல்கும்பரை என்ற இடத்தைச் சேர்ந்தவரும், அம்பாறை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியுமான ஆர்.ஏ. சாந்த குணதிலக்க ( வயது - 39) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

ஊவா மாகாணத்தில் பதுளை, மொனராகலை மாவட்டங்களில் டெங்குக் காச்சலினால் இதுவரை 7 பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்தநிலை காரணமாக மக்களிடையே பெரும் அச்சம் தோன்றியுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பதுளை வைத்தியசாலையில் இளம் பெண் வைத்தியர் ஒருவரும் டெங்கு நோயால் மரணமடைந்தார்.

அம்பாறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விடுமுறையில் படல்கும்பரையிலுள்ள தனது வீட்டிற்கு வந்திருந்தபோது அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

உடனடியாக அவர் படல்கும்பரை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு காய்ச்சல் கடுமையானதை அடுத்து விசேட அம்புலன்ஸ் மூலம் மொனராகலை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவருக்கு இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டபோது அவர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதையடுத்து அவர் அதிவிசேட சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. எனினும், சிகிச்சைகள் பலனின்றி கடந்த வியாழக்கிழமை அதிகாலை பொலிஸ் பொறுப்பதிகாரி மரணமாகியுள்ளார்.

இவரின் மரணத்துடன் ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் 7 பேர் டெங்குநோயால் மரணமாகியுள்ளனர்.

பதுளையில் ஏழு பேரும் மொனராகலையில் 49 பேரும் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விரு மாவட்டங்களிலும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் துரிதமாக முன் னெடுக்கப்பட்ட போதிலும் பதுளை மாவட்டத்தில் டெங்குநோய் மிக மோசமாகப் பரவி வருவது குறிப்பிடத்தக்கது.

(ளி)




# கதிர்காமத்தில் கஞ்சாசேனை முற்றுகை சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது

கொழும்பு, ஜூலை 19

கதிர்காம உற்சவ காலத்தில் விற்பனை செய்வதற்கென தயார் நிலையில் இருந்த நான்கு கஞ்சா சேனைகள் கண்டி கலால் திணைக்களத்தின் விசேட நடவடிக்கைக் குழுவால் கடந்த செவ்வாய்க் கிழமை சுற்றிவளைக்கப்பட்டது. இதன் போது 20 லட்சம் ரூபா கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

செல்லக்கதிர்காமம் மற்றும் ஹங்குஹார பிரதேசங்களில் இந்தக் கஞ்சா சேனைகள் இருந்தன. இங்கிருந்த சுமார் 12 ஆயிரம் கஞ்சா கன்றுகளும் நிர் மூலமாக்கப்பட்டன என கண்டி கலால் திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கண்டி கலால் திணைக்களத்துக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு விரைந்த அதிகாரிகளால் சேனைகள் சுற்றி வளைக்கப்பட்டன.

கதிர்காமப் பிரதேசத்தில் அவ்வப்போது இத்தகைய சேனைகள் முற்றுகையிடப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி கலால் திணைக்களத்தின் விசேட நடவடிக்கைப் பிரிவின் பொறுப்பதிகாரி ஆர்.எம். சேனாரத்னவின் தலைமையில் சென்ற குழுவே இச்சுற்றிவளைப்புகளை மேற்கொண்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜராக்கப்படவுள்ளனர். (ளி)

# கேகாலை மாவட்ட தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யுமாறு முதலமைச்சரிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19

கேகாலை மாவட்டத்திலுள்ள தோட்டப் பாடசாலைகளிலும், பின் தங்கிய கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளிலும் நீண்டகாலமாக நிலவிவரும் குறைபாடுகளை நீக்குமாறு கோரப்படுகின்றது.

தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்து தோட்டப்புறப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு உதவுமாறு சப்ரகமுவ மாகாண முதலமைச்சரும், மாகாணக் கல்வி அமைச்சருமான மஹிபால ஹேரத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பல தோட்டப் பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் இல்லை. ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக் குறை, கட்டட வசதியின்மை போன்ற பல குறைபாடுகளைக் குறிப்பிடலாம்.

ருவான்வல்ல, எட்டியாந்தோட்ட, தெரணியகலை, தெஹியோவிற்ற போன்ற பிரதேசங்களிலேயே அதிக குறைபாடுகளுடன் தோட்டப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

தோட்டப்புற புத்திஜீவிகளும், பெற்றோரும் இது பற்றி முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

(ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் மூத்த உறுப்பினரும், ஆரம்பத் தலைவரும், (Charter President)எமது சக உறுப்பினர் லயன் எமில் அத்தனாசியார் அவர்களின் அன்புத் தந்தையும் ஆகிய

**லயன் எஸ்.ரி.அத்தனாசியார்.J.P**

அவர்கள் லண்டனில் காலமானதையிட்டு கழக உறுப்பினர்களாகிய நாம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். அன்னாரின் சேவைகளை இந்நேரத்தில் நினைவு கூர்ந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் அன்னாரின் குடும்பத்துடன் பகிர்ந்துகொள்கின்றோம்.

தலைவரும், உறுப்பினர்களும்
லயன்ஸ் கழகம் வட்டுக்கோட்டை.

# முக்கிய அறிவித்தல்
## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்-கிளிநொச்சி

**கிளைகள் ரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்டுதலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளலும்**

கடந்தகால போர்ச்சூழல் காரணமாக, வன்னியில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் எமது சங்கம் பல இடங்களிற்கு இடம் பெயர்ந்து சகல ஆவணங்களையும், சொத்துக்களையும் இழந்த நிலையில், தற்போது தனது சொந்த இடத்தில் மீண்டும் செயற்பட்டு வருகின்றது.

எமது சங்கத்தின் எல்லைப் பரப்பிற்குள் தற்போது பெருமளவு மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். எனவே, எதிர்காலத்தில் சங்கத்தின் பொதுச் சபையினையும் இயக்குநர் சபையினையும் ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்வதற்கான முன்னோடி நடவடிக்கைக்காக, கிளைகள் ரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்டவேண்டியுள்ளது. மேலும் புதிய அங்கத்தவர்களையும் சேர்த்துக்கொள்ள முடியும். அங்கத்தவர்கள் விவரங்களைத் திரட்டுவது தொடர்பில் ஏற்கனவே சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்தவர்கள் பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

❋தாங்கள் சங்கத்தின் ஏதாவது கிளையொன்றில் ஏற்கனவே, அங்கத்தவராக இணைந்திருப்பின் அதற்கு ஆதாரமாக, பங்குப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு அல்லது சேமப்புத்தகத்தல் பங்குப்பணம் செலுத்தியமைக்கான அல்லது ஆதாரப்படுத்தக் கூடிய சான்றளிக்கக்கூடிய விவரமிருப்பின் அதனை சங்கத்தின் தலைவரிடம் அல்லது செயலளரிடம் சமர்ப்பித்து உறுதிப்படுத்தி இரண்டு அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்திச் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

❋ஏற்கனவே அங்கத்தவராக, இணைந்து ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாதவர்கள் ரூபா 100.00 பங்குப்பணத்தைச் செலுத்தி இரண்டு அங்கத்துவ விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து செயலாளரிடம் அதனைச் சமர்ப்பிப்பதுடன், தாங்கள் பழைய அங்கத்தவர் என்பதனை உறுதிப்படுத்தக் கூடிய சத்தியக்கடதாசி ஒன்றைத் தயாரித்து, முறைப்படிப் பூரணப்படுத்தி விண்ணப்பப் படிவத்துடன் ஒப்படைக்கவும்.

(எதிர்காலத்தில் பழைய கணக்கு விவரம் கிடைக்கும் பட்சத்தில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குப்பணம் தற்போது செலுத்தப்படும் பங்குப்பணத்துடன் சேர்த்துக் கணிப்பிடப்படும்).

❋ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100.00

❋புதிய அங்கத்தவர்கள் வழமையான நடைமுறைக்கமைய ரூபா 100.00 பங்குப்பணத்தைச் செலுத்தி இரண்டு அங்கத்துவ விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்திச் சங்கத்தின் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

**திரு.ச.சோமகைலாலன்**
தலைவர்,
கரைச்சி தெற்கு.
ப.நோ.கூ.சங்கம்-கிளிநொச்சி.

**திரு.செ.ம.ஜெயரத்தினம்,**
செயலாளர்,
கரைச்சி தெற்கு. ப.நோ.கூ.சங்கம்-கிளிநொச்சி.

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் — 1208

மிதுனம் — 03 21 51 52 — 16-07-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 6,333,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 215,565 | 20/- | 4,311,300/- |
| 2 இலக்கங்கள் | 19,745 | 40/- | 789,800/- |
| 1 இல. + லக்கினம் | 19,497 | 60/- | 1,169,820/- |
| 2 இல. + லக்கினம் | 1,837 | 200/- | 367,400/- |
| 3 இலக்கங்கள் | 527 | 1000/- | 527,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,333,550/- | - |
| மொத்தம் | | | 8,025,320/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 578 | | 587,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 257,797 | | 8,612,820/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,814,950/-

## இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்

துலாம் — 09 14 23 33 — ஜக்பொட் பரிசு ரூபா. 6,333,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 575 | 500/- | 287,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 578 | | 587,500/- |

இந்த செவ்வாய்க்கிழமை இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை ரூபா.200,000/- வெல்லப்படவில்லை




டயிடஸ் ஸ்ரோஸ் 2439422


## பறந்தது பொறி பற்றியது நெருப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 19

சட்டைக் கொலரில் தீப்பொறி ஒன்று பறந்து தீப்பற்றிக் கொண்டதில் குடும்பப் பெண் ஒருவர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் மீசாலையில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த ஏ.யமுனா (வயது- 40) என்பவரே கழுத்துப் பகுதியில் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-207)

## வாய்க்காலைக் கவனியுங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 19

வேம்படி வீதி, இரண்டாம் குறுக்குத் தெருவில் நீண்ட நாள்களாகச் சுத்தம் செய்யப்படாத வாய்க்காலில் கழிவுநீர் தேங்கி நிற்பதால் புழு, பூச்சிகள் நிரம்பி வழிகின்றன.

இதனால் சுற்றுப்புறச் சூழலில் நுளம்புத் தொல்லை ஏற்பட்டுள்ளதுடன் துர்நாற்றமும் வீசுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து ஆவன செய்யுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (எ-316)

## கைது

யாழ்ப்பாணம்,ஜூலை 19

ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றுக்குரிய பதிவுச் சான்றிதழ் இன்றி அவற்றைச் செலுத்திய நால்வரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-207)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது எனச் சங்கத்தின் செயலாளர் கு.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (எ-207)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப.1 மணிக்கு வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (எ-207)


# VISA - வீசா
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கந்தையா குணரத்தினம்
(யா/பிரபல வர்த்தகர், குணரத்தினம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

தோற்றம் 16★01★1927

மறைவு 30★07★2009

ஆதவன் ஒளிபோல அன்பினாலரவணைத்தே...
பாதகம் புரிந்திடாப் பண்புடன் வாழ்ந்திட்ட....
மாதவனார் தலைமகனை மறக்கவும் கூடுமோ..?
வேதங்கள் கூறிடும் விதிவழிதான் நடந்தாலும்..
ஆண்டொன்று தான் மாயமாய்ப் போனாலும்...
வேதனையாய் நெஞ்சில் நீங்காதுன் நினைவுகளே..!

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[1001C8]

# தீங்காத நினைவுடன்
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 . 02 . 1948

உதிர்வு 19 . 07 . 2009



## அமரர் பாவிலுப்பிள்ளை அரியதாஸ்

ஆண்டொன்று சென்றாலும்
அன்பான வார்த்தைகளும்
அமைதியான உங்கள் பண்பும்
அரவணைக்கும் நற்குணமும்
என்றும் நிலைத்திருக்கும் எம் மனதில்

இவரின் ஆன்மசாந்திக்காக இன்று(19.07.2010) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பொலிகண்டி குழந்தை யேசு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்குகொண்டு, இவருக்காக வேண்டிக் கொள்ளத் தங்களையும் அழைக்கின்றோம். அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டிநிற்கும்:


**குடும்பத்தினர்.**

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

[illegible] ஊறணி, வல்வெட்டித்துறை.

(101127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுளும் மனிதனும்

ஒரு மிகப் பெரிய தத்துவஞானி ஜே.கிருஸ்ணமூர்த்தி. அவர் சொன்னார், 'மனித இனத்தைக் கடவுள் காப்பாற்றுவார் என்று மக்கள் நம்பி வருகின்றார்கள்!' ஆனாலும் போர் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்றார். 'தேசப்பற்று, மதப்பற்று, கட்சிப்பற்று, இனப்பற்று, ஜாதிப்பற்று, மொழிப்பற்று இவை எல்லாம்தான் யுத்தத்தையும் கலவரத்தையும் உருவாக்கி மனித இனத்துக்கு தாங்க முடியாத இழப்புக்கள், வேதனைகள், விசனங்கள், துக்கங்கள் போன்றவற்றைக் கொடுத்து வருகின்றன!' - அப்படி என்றார் ஜே.கே. போர்கள் அழிவையும், வேதனையையும் உருவாக்கி வந்திருக்கின்றனவே தவிர மனித இனத்தின் ஒரு சிறிய பிரச்சினையும் தீர்த்தது கிடையாது' என்றார்.

அவர் ஒரு கதையை அடிக்கடி சொல்வது உண்டு. ஒரு சிறந்த சீடன் கடவுளிடம் போனான்.

''கடவுளே! உண்மையைப்பற்றித் தெரிந்து கொள்ள வந்திருக்கிறேன். அதைப்பற்றிச் சொல்லுங்கள்!'' என்றான்.

பாவம்! கடவுள் என்ன செய்வார்? கொஞ்சம் யோசித்தார். பின்பு அந்த சீடனைப் பார்த்து சொன்னார்.

''நண்பனே! வெயில் தாங்க முடியவில்லை.. தயவு செய்து எங்கேயாவது போய் ஒரு குவளை தண்ணீர் கொண்டு வா! என்றார்.

சீடன் 'சரி' எனச் சொல்லிவிட்டுப் போனான்.

வழியிலே முதலில் கண்களில் பட்ட வீட்டுக் கதவைத் தட்டினான். தகவு திறக்கப்படுகிறது. ஒரு அழகான பெண் கதவைத் திறக்கிறாள். இவன் பார்க்கிறான் இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்ப ஆரம்பிக்கின்றார்கள். காதல் மலர்ந்தது! இவன் எதற்காக அங்கே வந்தானோ அதை மறந்து விட்டான்!

இரண்டு பேரும் திருமணம் செய்து கொள்கிறார்கள். சிறிது காலம் கழிந்தது. குழந்தை குட்டியோடு அவன் குடும்பம் நடத்த ஆரம்பித்தான். அப்படி இருக்கும் நேரத்தில் ஒரு நாள்.. அடை மழை பொழிய ஆரம்பித்தது... வயல்வெளி, வீடு வாசல் எல்லாம் வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போக ஆரம்பித்தது.

இந்தச் சீடன் என்ன செய்தான் தெரியுமா? மனைவியை ஒரு கையால் பிடித்தான். தோள் மீது ஒரு குழந்தையை உட்கார வைத்தான். இன்னொரு குழந்தையை மற்றொரு கையில் பிடித்தான். மற்றொரு குழந்தையை உடன் அழைத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே வந்து விட்டான். வழியிலே ஆற்றைக் கடக்க வேண்டி இருந்தது. அதில் இறங்கினான். அவ்வளவுதான் அவனையும் மனைவி மக்களையும் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போனது. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கை இரண்டையும் உயரத் தூக்கினான்...

''கடவுளே என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று கத்தினான். இது கடவுள் காதில் கேட்டது. உடனே கடவுள் கேட்டார்; 'அப்பனே! நான் கேட்ட ஒரு குவளை தண்ணீர் எங்கே...?' என்ற கேட்டாராம். தத்துவஞானி சொன்ன கதை இது. மனித இயல்பை புரிந்து கொள்வதற்காகச் சொல்லப்பட்ட கதை இது.

'மனிதன் சுயநலத்தின் காரணமாக மற்றவர்களை வெற்றி கொள்ள விரும்புகிறான். மனிதர்கள் அனைவரும் இப்படி செயல்பட்டு வந்தால் ஒவ்வொரு மனிதனும் இன்னொரு மனிதனுக்கு விரோதியாக மாறிவிடுகின்றான்!' என்பது அவர் சொன்ன கருத்து.

ஒருவன் கடவுளிடம் கேட்டான், ''கடவுளே! எங்கள் எதிர் வீட்டுக்காரனுடைய பொருளாதார நெருக்கடி எப்போது தீரும்? என்று கேட்டான். '5 வருடத்தில் தீரும்' என்றார் கடவுள். சரி.. என் பக்கத்து வீட்டுக்காரன் பொருளாதார நெருக்கடி எப்போது தீரும்? என்றான். 'அது ஒரு 7 வருடத்தில் தீரும்!' என்றார்.

'சரி.. என்னுடைய பொருளாதாரப் பிரச்சினை எப்போது தீரும்? என்றான்.

கடவுள் இதற்குப் பதில் சொல்லாமல் தேம்பித்தேம்பி அழுதார்!

அப்புறம் சொன்னாராம் 'அதைப் பார்க்க நான் உயிரோடு இருக்க மாட்டேன்!' என்றாராம்.

*(சொன்னவர் : கோ.சுவாமிநாதன்)*

---

# கண் மூடி விடாதே கண்மணி

அவள் ஓர் அழகான இளம்பெண். காசு கொடுக்கும் படிப்பு. பேச்சில் நடையில் துடிப்பு. அப்பா சாதாரணர் அல்ல பெரிய அதிகாரி. சரி எது தவறு எது என்று நன்கு ஆராய்ந்து முடிவெடுத்து உத்தரவுகள் பிறப்பிக்கும் திறமையும் தகுதியும் பதவியும் பெற்ற பெரிய மனிதன். ஒப்பற்ற ஒரே ஒரு மகளை மிக உயர்வாக உயர்த்த யோசித்து திட்டமிட்டு உயர்த்துபவர்.

பருவ வயது, படிப்பு, தொழில் தொடங்கிவிட்ட துணிவு எதைக் கேட்டாலும் மறக்காத அப்பா என்ற நினைப்பு உடன் படித்த கல்லூரித் தோழனுடன் காதல். செய்தி அறிந்து கண்டித்தபோது கண்ணீர் வந்தது. முதன்முறையாக அப்பாமேல் கோபம் பிறந்தது. புனிதமான தன்காதலை புரிந்துகொள்ளும் சக்தி அப்பாவிற்கு இல்லை என்று அப்பாவின் அறிவின்மீது கூட அருவருப்பு வந்தது. சம்மதிக்க வைக்க முடியும் என்ற எண்ணமும் உள்ளே இருந்தது.

முடிவும் முடிவில் உறுதியும் மிக்க அப்பாவை அசைக்க முடியவில்லை. தன் எதிர்பார்ப்பின்படி அப்பா இல்லை என்கிற எரிச்சலும் கோபமும் வந்தது. இதயமே இல்லாத கல் என்று கூட எண்ணம் வந்தது.

காதலிக்க எந்தப் பெண்ணுக்கும் உரிமை உண்டு. ஆனால் காதலை ஏற்கவோ மறுக்கவோ அவளது அப்பாவிற்கு உரிமை உண்டு.

தான் நினைத்தபடி அப்பா நடந்து கொள்ள வேண்டும் என்கிற எதிர்பார்ப்பும் அப்படி நடந்து கொள்வதுதான் அவரது ஒரே செயலாக இருக்க வேண்டும் என்ற எண்ணமும் ஒரு பெண்ணுக்கு எப்படி வரலாம்?

அவர் மோசமான அப்பா இல்லை. அறிவுரைகள், கண்டிப்பு என்பது தவிர காதலை முறியடிக்க முரட்டுத்தனமான நடவடிக்கையில் இறங்குபவரல்ல. மனைவி மூலம் மகளைச் சமாதானப்படுத்தி மேற்படிப்பு படிக்க வைத்தார். படித்தாள், ஆனால் மகள் தாயுடன் போராட்டம். மகளின் சோகம் தாளாத மகராசி, மகளது காதலன் குடும்பத்தைப் பெண் கேட்டு வரச் சொல்லிவிட்டார்.

வந்தவர்களை கண்ணியமாகச் சொல்லி திருப்பி அனுப்பி விட்டார் அப்பா. தன் காதலன் குடும்பத்தை அவமதித்து விட்ட அப்பா ஒரு அப்பாவா? வீடு இரண்டு பட்டது.

கொஞ்சம் நிறுத்துகிறேன்.

சம்பந்தமே இல்லாத ஒருவர் ஒன்றைக் கேட்டு வர உரிமை இருப்பதாக நினைக்கும் போது தருவதற்கு விருப்பம் இல்லை என்று மறுக்கவும் உரிமை இருக்கிறது. தான் நினைத்தபடி அப்பா நடந்து கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அப்படி நடந்து கொள்வதுதான் அவரது ஒரே செயலாக இருக்க வேண்டும் என்ற எண்ணமும் எப்படி வரலாம்? அன்பு பகையானது அப்பா எதிரி, துரோகி என்று மனது சொன்னது, பழிக்குப்பழி அப்பாவை அவமானப்படுத்த ஆயுதம் கண்டாக வேண்டும். பெரிய நிலையில் இருக்கும் அப்பாவை அவமதிக்கும் ஆயுதம் கோயிலில் திருமணம் செய்து கொள்வது. அப்பாவின் அகங்காரத்தை அடியோடு சாய்த்துவிட்ட திருப்தி மகளுக்கு. புதுவிடு புதுவாழ்க்கை, புதுமாப்பிளை இரண்டு நாள் இனித்தது.

ஒற்றைத் துணியோடு ஓடி வந்தவள் என்று மாமியால் அலட்சியம். மிக உயர்ந்த வாழ்விலிருந்து நடுத்தர வாழ்வில் இறங்கிவந்த நடைமுறைச்சிக்கல். தன் வேலைகளைக்கூட தானே செய்வதா என்கிற தன்னிரக்கம். தவறு செய்துவிட்டோமோ என்கிற குற்ற உணர்வு மகளுக்கு. அப்பா அம்மாவோடு சேரவே முடியாதா என்கிற பாசம் பதறவைத்தது. ஒரே ஆறுதல் நல்ல கணவன். கொழு கொம்பு நன் றாக இருந்தா லும் கொடியைப் பூச்சி அரித்தால் கொழுகொம்பு என்ன செய்ய முடியும்.

நான் எதிர்பார்த்த வாழ்வு இது அல்ல என்ற ஏமாற்றம் அல்லது கற்பனை கலைந்து நிஜத்திற்கு இறங்கி வந்த அதிர்ச்சி மனம் அலைபாய்ந்தது. அப்பாவை அணுக மனம் துடித்தது. அவமதித்துவிட்டால் கணவன் மிக நல்லவர் அவரை ஏதும் சொல்லிவிட்டால் அப்பாவை கணவன் விரும்பா விட்டால் என்ன செய்வது. முட்டாள் தனமாக நடந்து விட்டோமோ என்று தன்மீதே வெறுப்பு. ஆத்திரம். அவள் தன் னைக் கொலை செய்துவிட்டாள்.

பிரச்சினை இப்போது திசை திரும்பி விட்டது! திருமணமாகி மாமியார் வீட்டில் மருமகள் தற்கொலை செய்து விட்டால் சட்டம் பொலிஸ், பெற்றவர்கள் வேடிக்கை பார்ப்பார்களா? நல்ல கணவன் இக்கட்டில் சிக்கிவிட்டான்.

இந்தப் பெண்ணால் யாருக்காவது நின்மதி கிடைத்ததா. எவ்வளவு பேருக்கு எத்தனை துயரம் எதிர்பார்த்த வாழ்வு அமையவில்லையென்றால் அதனை உருவாக்க வேண்டும் என்ற தைரியம் தன்னம்பிக்கை வேண்டும். அல்லது எதிர்பார்க்க நமக்கு உரிமை உண்டு. அதன்படி நடக்காமல் இருக்க பிறர்க்கும் உரிமை உண்டு என்ற வேகமாவது வேண்டும். இரண்டும் இல்லையே இந்தப் பெண்ணுக்கு இத்தனைக்கும் அவள் படித்த படிப்பு பலருக்கு நம்பிக்கையூட்டும் படிப்பு ஆம் அது மருத்துவப்படிப்பு.

*(நன்றி: சுகி.சிவம்)*

---

# சோதனை ஏன்?

முன்னொரு காலத்தில் இறைவனை நேருக்கு நேர் கண்டு உரையாடும் பேறு பெற்ற பெரியவர் ஒருவர் இருந்தார். வாழ்க்கையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஏழை பக்தர் ஒருவர் ஒருநாள் இந்தப் பெரியவரைத் தேடி வந்தார். வந்தவர் பெரியவரிடம்,'' தாங்கள் தான் இறைவனுடன் அடிக்கடிப் பேசுகிறீர்களே! எனக்கு ஒரு விஷயம் கேட்டுச் சொல்கிறீர்களா?'' என்று பணிவோடு கேட்டுக் கொண்டார். என்ன கேட்க வேண்டும்? என்றார் பெரியவர்.

'' இறைவன் எனக்கு மட்டும் ஏன் கஷ்டத்துக்கு மேல் கஷ்டம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்? நான் எந்த நேரமும் இறைவனையே வணங்கிக் கொண்டிருக்கிறேனே! கஷ்டத்துக்கெல்லாம் பெரிய கஷ்டமாக நேற்று என்னுடைய சிறிய குடிசையும் இடிந்து விழுந்துவிட்டது. இப்போது தங்குவதற்குக் கூட எனக்கு இடமில்லை. இவ்வளவு கஷ்டங்களை அனுபவிப்பதற்கு நான் என்ன தவறு செய்தேன்? என்று ஆண்டவனிடம் கேட்டுச் சொல்லுங்கள்'' என்றார். அந்த ஏழைப் பக்தர். பெரியவரும் சம்மதித்தார்.

சில நாள் கழித்து இறைவன் பெரியவருக்குத் தரிசனம் கொடுத்தார். அப்போது பெரியவர் ஏழை பக்தரின் சந்தேகத்தைக் கேட்டார். '' இதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமானால், நீ எனக்கு ஒரு செங்கல் கொண்டு வந்து தர வேண்டும்!'' என்றார் இறைவன். பெரியவரும் செங்கல் கொண்டு வருவதற்காகப் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே கட்டடங்கள் எல்லாம் நல்ல நிலையில் இருந்தன. அவற்றிலிருந்து செங்கல் எடுக்க பெரியவருக்கு மனம் வரவில்லை. வழியில் பாதி இடிந்து போன ஒரு வீடு இருப்பதைப் பார்த்தார். மீதிப் பாதி எப்போது வேண்டுமானாலும் இடிந்து விழலாம் என்ற நிலையில் இருந்தது. எனவே அதிலிருந்து ஒரு செங்கல்லை பிடித்து இழுத்தார் பெரியவர். அவர் அப்படி இழுத்தவுடனேயே மீதிப் பாதி வீடும் பொல பொல வென்று இடிந்து விழுந்து விட்டது!

பெரியவர், தாம் எடுத்து வந்த செங்கல்லை இறைவனிடம் கொடுத்தார். '' இந்த செங்கல்லை எங்கிருந்து எடுத்து வந்தாய்?'' என்று இறைவன் கேட்டார். பெரியவர் செங்கல்லை ஒரு பழைய வீட்டிலிருந்து எடுத்து வந்ததைக் கூறினார். ஏன் அங்கிருந்த பெரிய கட்டடங்களிலிருந்து எடுக்கவில்லை என்று இறைவன் கேட்டார்.

இதற்கு அப்பெரியவர், பெரிய கட்டடங்கள் நல்ல நிலையில் இருந்தன. எனவே அவற்றிலிருந்து செங்கல்லை எடுக்கவில்லை. ஆனால் அங்கிருந்த ஒரு இடிந்த வீட்டில் செங்கல்லை எடுத்தது நல்லதாகப் போயிற்று. ஏனெனில் இப்போது அங்கே ஒரு புது வீடு கட்டுவார்கள்! '' என்றார்.

'' நான் அந்த பக்தருக்கு அதிகமான கஷ்டங்கள் கொடுத்ததும் இதற்காகத்தான்! அவருக்கு வைராக்கியம் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான்! கஷ்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க அவன் புது மனிதனாக மாறிவிடுவான்'' என்றார் இறைவன்.

துன்பத்தைக் கண்டு துவளக் கூடாது. துன்பங்கள் மனிதனைப் பக்குவப்படுத்துகின்றன. துன்பம் வரும் போது மன உறுதி வரவேண்டும். துன்பங்கள் மனித உள்ளத்தை இறைவனை நோக்கி திசை திருப்புகின்றன. போன்ற கருத்துக்களை இந்தக் கதை உணர்த்துகின்றது.

*(சொன்னவர்: தென்கச்சி கோ.சுவாமிநாதன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# கணக்கீடு 01 — பகுதி - I

★ 1-20 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. நிதிக் கணக்கீட்டு தகவலின் பண்பு அல்லாத ஒன்று,
   1) இது வரலாறு சார்ந்ததாகும்.
   2) இது பழையானதும் அண்ணளவான தகவல்களிலருந்து பெறப்பட்ட முடிவு.
   3) இது சரியான தகவல்களைக் கொண்டதால் இதற்கு ஒரு தீர்மானங்களும் தேவை இல்லை.
   4) இது முகாமைத்துவ விளக்கத்தால் விரிபுபடுத்தப்படும்.
   5) மேற்கூறிய எவையுமல்ல.

02. சில்வா கம்பனி (மீன் விற்பனை) தேவைக்காக 50,000 லீற்றர் டீசல் வாங்கியது. அது கம்பனியின் எக்காலத்தில் செலவாகக் கொள்ளப்படும்.
   1) எப்போது விநியோகத்தோருக்கு கட்டளை வழங்கப்பட்டதோ அக்காலத்தில்.
   2) விநியோகத்தோரிடம் இருந்து எப்போது கிடைக்கிறதோ அக்காலத்தில்.
   3) கொடுப்பனவு செய்யும் காலத்தில்.
   4) எப்போது பாவிக்கப்பட்டதோ அக்காலத்தில்.
   5) தேவையேற்படும் காலத்தில்.

03. ஒரு கம்பனி வாடிக்கையாளருக்கு ரூபா 100 ஆன வியாபாரக் கழிவீட்டினை அளிப்பதன் மூலம் ரூபா 5,000 பெறுமதியான பொருட்களை விற்றது. பின்வருவனவற்றுள், வியாபாரக் கழிவீட்டு தொகை கணக்கீடுப் பதிவினை உள்ளடக்குவது யாது?
   1) பொதுப் பேரேடு. 2) காசேடு.
   3) விற்பனைகள் நாளேடு. 4) சிறு செலவுக் காசேடு.
   5) கணக்குகளின் ஏடுகள் எதிலும் இல்லை.

04. ஓர் நிறுவனம் ரூ. 80 கிரயம் உடைய 5 விடயங்களை கடனுக்கு 25% வியாபாரக் கழிவுடன் கொள்வனவு செய்தது. முழுத்தொகையையும் 14 நாட்களுள் செலுத்தினால் 5% காசுக் கழிவு கிடைக்கும். இந்நிறுவனம் முதல் 2 கிழமைக்குள் பணம் செலுத்தினால் அத்தொகை,
   1) ரூபா 260 2) ரூபா 280
   3) ரூபா 285 4) ரூபா 340
   5) மேற்கூறியவை எவையுமல்ல.

05. பின்வரும் A - D வரையிலான உருப்படிகளுள் வங்கி இணக்கக் கூற்று ஒன்றில் சேர்க்கப்பட முடியாதது யாது?
   A. தேறாத வைப்புக்கள்.
   B. காசேட்டில் பதிவு செய்யப்படாத வங்கிக் கட்டணங்கள்
   C. வங்கிக்கு கொடுப்பனவுக்காக ஒப்படைக்கப்படாத காசோலைகள்.
   D. காசேட்டில் ஒரு கொடுப்பனவைப் பதிவு செய்வதில் ஏற்பட்ட ஒரு வழுவின் திருத்தியமைப்பு.
   1) (A) மட்டும். 2) (D) மட்டும்.
   3) (B) மற்றும் (C) மட்டும். 4) (A) மற்றும் (D) மட்டும்.
   5) யாவையும் சேர்க்கப்படவேண்டியவை.

06. கட்டுப்படுத்தும் கணக்கின் நோக்கமற்றது,
   1) பழைகளைக் கண்டுபிடித்தல்.
   2) நின்ற செலவுகளை நீக்குதல்.
   3) உள்ளகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துதல்.
   4) மோசடிகளை ஓரளவு தவிர்க்க உதவுதல்.
   5) மேற்கூறிய எவையுமல்ல.

★ 7ஆம், 8ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துக. விளம்பரங்களை அச்சிடுவதில் ஈடுபட்டுள்ள கம்பனி ஒன்று ரூபா 50,000 இற்கான விற்பனை ஒப்பந்தம் ஒன்றின் செயற்பாட்டை அடுத்த வருடத்தில் இருந்து ஆரம்பக்கின்றது. குறித்த தினத்தில் கம்பனி ஒரு முற்பணக் கொடுப்பனவாக ரூபா 20 000 ஐயும் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளும்போது கம்பனி முழுப்பெறுமதியான ரூபா 50,000 ஐ விற்பனைக் கணக்கில் செலவிலும், காசுக் கணக்கில் ரூபா 20,000 ஐ வரவிலும், கடன்பட்டோர் கணக்கில் ரூபா 30,000 வரவிலும் வைக்கிறது.

07. மேற்படி தவறைப் பொது நாட்குறிப்பேட்டில் திருத்துவதற்கான பதிவு,
   1) விற்பனைக் க/கு வரவு ரூபா 50 000, காசேடு ரூபா 50 000.
   2) விற்பனைக் க/கு வரவு ரூபா 50 000, கடன்பட்டோர் க/கு ரூபா 30 000, முற்பணக் க/கு ரூபா 20 000.
   3) முற்பணக் க/கு வரவு ரூபா 10 000, விற்பனைக் க/கு ரூபா 10 000.
   4) காசேடு வரவு ரூபா 20 000, முற்பணமாகப் பெற்ற வருமானக் க/கு ரூபா 20 000
   5) மேற்கூறிய எவையுமல்ல.

08. மேற்படி தவறின் திருத்தமானது பின்வரும் எந்தக் கணக்கீட்டுச் சமன்பாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்டது?

| | சொத்துக்கள் | = | பொறுப்புக்கள் | சொந்தக்காரர் உரிமை |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| 1) | (30 000) | = | 20 000 | (50 000) |
| 2) | (20 000) | = | 50 000 | 5 000 |
| 3) | 50 000 | = | - | 50 000 |
| 4) | 20 000 | = | 30 000 | 10 000 |
| 5) | 30 000 | = | 30 000 | 10 000 |

09. பின்வருவனவற்றுள் நடப்புப் பரிப்பு அல்லாதது எது?
   1) அட்டுகள்.
   2) வங்கி மேலதிகவரைவு.
   3) குறுகியகால முதலீடு.
   4) வியாபாரச் சென்மதியாளர்கள்.
   5) சில நிலையான சொத்துக்களின் விற்பனைகளுக்காகப் பெறப்பட்ட முற்பணங்கள்.

10. உரிமையாளர் காசு செலுத்தாது பொருள் எடுத்திருக்கின்றார். ஏனெனில், அது தனது உரிமையென்பதால் செலுத்தவில்லையெனக் கூறுகின்றார். இதனால் முடிவுக் கணக்குகள் தயாரிக்கும் போது,
   1) தேறிய இலாபமும் முடிவு இருப்பும் கூடுதலாக இருக்கும்.
   2) தேறிய இலாபம் குறைவாகவும் இருப்பு மாற்றமில்லாமலும் காணப்படும்.
   3) தேறிய இலாபமும் இருப்பும் குறைவாக இருக்கும்.
   4) தேறிய இலாபம் கூடும். இறுதி இருப்பில் மாற்றமில்லை
   5) மேற்கூறிய எவையுமல்ல.

11. கடன்பட்டோர் கழிவேற்பாடு 1.1.2009 இல் மீதி ரூபா 17 500, 31.12.2009 வரை அனுமதித்த கழிவு ரூபா 12 500, இத்தகவல்களிலிருந்து அறியக்கூடியது,
   1) 1.1.2009 இல் உள்ள கடன்பட்டோர் தொகையில் [illegible] 31.12.2009 வரை பெருப்படவில்லை.
   2) 2009 ஆண்டின் கடன் விற்பனை 2007 ஆம் ஆண்டிலும் பார்க்க அதிகம்.
   3) கடன்பட்டோருக்கு வழங்கிய கழிவுத்தொகை அதிகம்.
   4) 2008 ஆண்டில் அறவிடமுடியாக்கடன் ஏற்படவில்லை.
   5) எதையும் அறியமுடியாது.

12. ஒரு தொழில் நிறுவனத்தின் இலாப நட்டத்த அறிவதற்கு வழி,
   1) மூலதன மாற்றத்தை ஒப்பிடல்.
   2) வருமானங்களுடன் செலவினங்களை இணைத்தல்.
   3) சொத்துக்களின் மாற்றங்களை ஒப்பிடல்.
   4) (1), (2) இல் கூறிய இரு வழிகளும்.
   5) மேற்கூறிய எவையுமல்ல.

13. ஒரு ஸ்தாபனத் தலைவரின் கம்பனி வாகனத்தின் கொள்வனவுக் கிரயம் ரூபா 4 மில்லியன் ஆகும். அது ஒரு சமதவணை (நேர்கோட்டு) முறையில் தேய்மானப் படுத்தப்படுகிறது. 31.3.2004 அன்று அதன் தேறிய ஏட்டுப்பெறுமதி ரூபா 1.6 மில்லியனும், ஆண்டுத்தேய்மானச் செலவு ரூபா 0.8 மில்லியனும் ஆகும். வாகனத்தின் கணக்கீட்டுத் தேயமானத்தைக் கணிப்பதற்குப் பின்வருவனவற்றுள் அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள காலம் யாது? (அக்கால முடிவில் பெறுமதி ஏதும் இல்லைனெக் கருத்திற்கொள்க)
   1) 4 வருடங்கள். 2) 8 வருடங்கள்.
   3) 10 வருடங்கள். 4) 5 வருடங்கள்.
   5) பற்றாக்குறையான தகவல்.

14. பின்வரும் சமன்பாடுகளுள் பொருத்தமற்றது,
   1) ஆரம்ப மீதி பெற்ற பணம் = கொடுத்த பணம் இறுதி மீதி.
   2) கொடுத்த பணம் இறுதி மீதி பெற்ற பணம் = ஆரம்ப மீதி பெற்ற பணம்.
   3) இறுதி மீதி பெற்ற பணம் = ஆரம்ப மீதி கொடுத்த பணம்.
   4) இறுதி மீதி கொடுத்த பணம் = பெற்ற பணம் ஆரம்பமீதி.
   5) மேற்கூறிய எவையுமல்ல.

15. ஒரு கழகத்தில் ஒவ்வொருவரும் சந்தாவாக ரூபா 20 செலுத்தும் 50 பேர் இருக்கின்றனர். ஆண்டுத் தொடக்கத்தில் 5 பேர் முற்பணமாகத் தமது சந்தாவைச் செலுத்தியிருக்க, 4 பேர் சந்தாவைச் செலுத்தாது இருந்தனர். வருட இறுதியில் 2 பேர் முற்பணமாகத் தமது சந்தாவைச் செலுத்தியிருக்க, 3 பேர் சந்தாவைச் செலுத்தாது இருந்தனர். வருடத்தில் பெற்ற சந்தா,
   1) ரூபா 960 2) ரூபா 1,000 3) ரூபா 1,020
   4) ரூபா 1,040 5) ரூபா 1,090

16. ஒரு பங்காளன் தனது சம்பளத்தைப் பணமாகப் பெறுவதால் வருட முடிவில்,
   1) தேறிய இலாபம் குறையும்.
   2) பொறுப்புக்களும் சொத்துக்களும் அதிகரிக்கும்.
   3) பொறுப்புக்களும் சொத்துக்களும் குறைவடையும்.
   4) 1, 2 ஆகிய இரு நிகழ்வுகளும் ஏற்படலாம்.
   5) மேற்கூறிய எவையுமல்ல.

17. ஒரு நிறுவனத்தில் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரிக் கணக்கின் கொண்டு வரப்பட்ட தொகை வரவாகவிருப்பன் அது,
   1) ஒரு செலவு.
   2) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தவேண்டிய வரி.
   3) திரும்பப் பெறமுடியாத செலவு.
   4) திரும்பப் பெறவேண்டிய செலவு.
   5) ஒரு வருமானம்.

18. மறுபடி விலைமதித்தல் இலாபம் மாற்றப்படுவது,
   1) பற்றுக் கணக்கிற்கு. 2) நடைமுறைக் கணக்கிற்கு.
   3) மூலதனக் கணக்கிற்கு. 4) பகிர் கணக்கிற்கு.
   5) மேற்கூறிய எவையுமல்ல.

19. நிதிக் கூற்றுக்கள் தயாரிப்புப் பற்றி அதிகம் கூறும் இலங்கைக் கணக்கீட்டு நியமம் யாது?
   1) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 5.
   2) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 3.
   3) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 9.
   4) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 10.
   5) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 12.

20. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 5 இன்படி தேறக்கூடிய நிகரப் பெறுமதி என்பது,
   1) கொள்விலையில் செலவைக் கழித்தல்.
   2) விற்பனை விலையில் அதற்கான செலவைக் கழித்தல்.
   3) கொள்விலையுடன் செலவைக் கூட்டுதல்.
   4) விற்பனை விலையுடன் செலவைக் கூட்டுதல்.
   5) விற்பனை விலை.

★ 21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடையளிக்குக.

21. கொள்வனவு, ஆரம்ப இருப்பிலிருந்து இறுதியிருப்பு கழிப்பதற்கு எந்த எண்ணக்கரு உதாரணமாகும்?

.................................................................................................

22. முடித்தற் பதிவின் பிரதான நோக்கம்,

.................................................................................................

23. ஒரு வணிகத்தின் தகவல்கள் வருமாறு:

| | ரூபா |
|---|---|
| தேறிய சொத்துக்கள் - 01.04.2009 | 480,000 |
| தேறிய சொத துக்கள் - 31.03.2010 | 680,000 |
| 31.03.2010 இல் முடிவடைந்த ஆண்டின்போது | |
| - வியாபாரியால் எடுக்கப்பட்ட காசு | 34,000 |
| - வியாபாரியால் மேலதிக மூலதனம் | 12,000 |
| - வியாபாரத்தில் ஈடுபடாத வியாபாரியின் மனையியின் பேரில் நிறுவனம் செலுத் திய பணம் | 5,000 |

தேறிய இலாபம்,

.................................................................................................

24. ஒரு நிதியாண்டின் தொடக்கத்தில் ரூபா 450,000 இற்கு வாங்கிய மோட்டார் காரை 9 மாதத்தில் ரூபா 46,000 இலாபத்தில் விற்பனை செய்தது. நிறுவனம் மோட்டார் காருக்கு ஆண்டிற் 25% தேய்வு நேர்கோட்டு முறையில் இடும். மோட்டாரின் விற்பனை விலை யாது?

.................................................................................................

.................................................................................................

25. கடனட்டை விற்பனைக்கும் அந்தப் பணத்தைப் பெறுவதற்கும் இரட்டைப் பதிவுகளைத் தருக.

.................................................................................................

.................................................................................................

26. இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் அனுகூலங்கள் இரண்டு தருக.

.................................................................................................

.................................................................................................

(13 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: திரு.D.Sam, DMI, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. நிறைவில் பதிவிற்கும் இரட்டைப் பதிவிக்கும் இடையிலான வேறுபாடுகள் 2 தருக.

..................................................................................................

29. தொங்கல் கணக்கிற்கும் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டு தருக.

..................................................................................................

30. பெறுமதிசேர் வரியின் இரண்டு அனுகூலங்களைத் தருக.

..................................................................................................

* 31-35 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரி அல்லது பிழை எனக் குறிப்பிடுக.

31. அளவுசார் தகவல்களில் கணக்கீடு சார் தகல்களும் அடங்கும். ( )

32. நிறுவனத்தின் வங்கிமீதி அதிகரிப்பு இலாபத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது. ( )

33. இலாப நோக்கற்ற அமைப்பின் பிரதான வருமானம் கலை நிகழ்ச்சி வருமானம் ஆகும். ( )

34. 1890ஆம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24ஆம் சரத்தின்படி, பங்காளர் கடன் வட்டி 9% ஆகும். ( )

35. பங்காளர்களின் உரிமையில் மாற்றம் நிகழும்போது மறுபடிவிலைமதித்தல் மட்டும் சீராக்கப்படும். ( )

* 36-40 வரையுள்ள வினாக்களின் கூற்றுக்களின் இடைவெளிகளை நிரப்புக.

36. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இன் படி, கழிவுப் பெறுமதி என்பது .............................................. ஆகும்.

37. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 5 இன் படி, தொக்குக்களின், கிரயம், ............................................ ஆகியவற்றில் எது குறைவோ அதை .................... அல்லது .................................. மதிப்படமுடியும்.

38. மறுபடி விலைமதித்தல் ஞாபன முறையின்படி சொத்துக்கள் ஐந்தொகையில் .................................. காட்டப்படும்.

39. 1890ஆம் ஆண்டு பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பரிவுக்கமைய விலகும் பங்காளன் கடன்தொகைக்கு ............ வட்டி வழங்கப்படுதல்வேண்டும்.

40. இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின்படி, பரிமாற்ற ஊடுசெயற் திகதியில் கொள்வனவு செய்யப்படும் இனங்காணக்கூடிய சொத்துக்களினதும் பரிப்புக்களினதும் .................................. கொடுனனுக்கு உள்ள பாத்தியத்திலும் பார்க்க அதிகமாகச் செலுத்தப்படும் கொள்வனவுக் கிரயம் நன்மதிப்பாகும்.

## கணக்கீடு 01 — பகுதி - II

அறிவுறுத்தல்:

* முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
* ஒவ்வொரு விடையும் புதியதொரு தாளில் ஆரம்பக்கப்படல் வேண்டும்.
* ஒவ்வொரு விடையுடனும் பொருத்தமான செயன்முறைகள் இணைக்கப்படல் வேண்டும்.

01. வரையறுக்கப்பட்ட ஜில் நிவனம், தயாரிக்கப்பட்ட ஆடைகள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனியாகும். இது 1 000 000 சாதாரண பங்குகளையும், வழங்கி 5 வருடங்களின் பின்னர் எந்தவேளையிலும் மீட்கப்படக்கூடிய ரூபா 6 பங்குலாபம் உடைய 600 000 முன்னுரிமைப் பங்குகளையும் ொண்டதாகும்.

31 மார்ச் 2010 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழ்வருமாறு காணப்பட்டது.

| | வரவு ரூபா '000' | செலவு ரூபா '000' |
|---|---|---|
| சாதாரண பங்குகள் | | |
| (ஒவ்வொன்றும் ரூபா 20) | | 9 556.8 |
| முன்னுரிமைப் பங்குகள் | | |
| (ஒவ்வொன்றும் ரூபா 20) | | 4 000 |
| உருவாக்கமுன் உழைத்த இலாபம் | | 3 200 |
| 12% தொகுதிக் கடன்கள் | | 3 200 |
| சொத்துக்கள், விருட்சங்கள், உபகரணங்கள் | | |
| இறையில் நிலம் | 14 000 | |
| கட்டடங்கள் | 6 400 | 2 560 |
| அலுவலக உபகரணங்கள் | 3 200 | 1 280 |
| மோட்டார்வாகனம் | 4 800 | 1 440 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 2 400 | 720 |
| ஆரம்பச் செலவுகள் | 1 200 | |
| நன்மதிப்பு | 1 080 | |
| 2009.04.01 இல் இருப்பு | 720 | |
| கையிலுள்ள காசும் வங்கியிலுள்ள காசும் | 40 | 99.2 |
| அறவிடமுடியாக் கடனும் ஐயக்கடன் ஏற்பாடும் | 48 | 96 |
| கொள்வனவுகளும் விற்பனைகளும் | 17 144 | 29 220 |
| கொள்வனவுத் திரும்பல்களும் விற்பனைத் திரும்பல்களும் | 168 | 64 |
| நிர்வாகச் சம்பளம் | 1 120 | |
| விளம்பரம் | 288 | |
| மின்சாரம் | 384 | |
| தொலைபேசியும் தபாலும் | 384 | |
| வங்கிக் கட்டணம் | 108 | |
| உள்வந்த கூலிகள் | 480 | |
| விற்பனை விநியோகச் செலவீடுகள் | 528 | |
| நிலையான வைப்பு மீதான வட்டி | | 40 |
| நிலையான வைப்பு (10% வட்டியில்) | 800 | |
| பணிப்பாளர் படிகள் | 2 344 | |
| பொது ஒதுக்கம் | | 672 |
| இலாபநட்டக் கணக்கு | | 1 360 |
| வருமானவரி ஏற்பாடு 2008/2009 | | 152 |
| வருமானவரி | 640 | |
| மறுமதிப்பீட்டு ஒதுக்கம் | | 800 |
| 12% தொகுதிக்கடன்கள் வட்டி | 368 | |
| பாதிப்படைந்த கட்டடத்தின் மீது பெற்றுக் கொண்ட அறவீடு | | 600 |
| | 59 604 | 59 604 |

மேலதிகத் தகவல்கள் :

- 31.03.2010 இல் இருப்புக்கள் ரூபா 880 000 ஆகக் காணப்பட்டது.
- கம்பனியானது வருமானவரியை காலாண்டு அடிப்படையில் செலுத்துகிறது. 2009/2010 இற்கான செலுத்தப்படவேண்டிய மீதி வருமானவரி ரூபா 192 000 என ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆண்டுத்தொகை குறித்த காலத்தின்போது செலுத்தப்பட்டது. நடைமுறை ஆண்டிற்கான இறுதிக் காலாண்டின் வாழிடப் பொறுப்பு ரூபா 224 000 ஆக மதிப்பிடப்பட்டது.
- சுற்றாடல் அதிகாரசபை ரூபா 800 000 பெறுமதியான பாதிப்புக் கோரிக்கையை முன்வைத்து கம்பனிக்கெதிராக ஒரு வழக்குப் பதிவுசெய்துகொண்டது. இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு யாதென இதுவரை தெரியவில்லை.
- சொத்துக்கள், விருட்சங்கள் மற்றும் உபகரணங்களினது பெறுமானத்தேய்வு தொடர்பான கம்பனியின் கொள்கை பின்வருமாறு:
  கட்டங்கள் கிரயத்தில் வருடமொன்றிற்கு 10%
  அலுவலக உபகரணங்கள் கிரயத்தில் வருடம் ஒன்றிற்கு 15%
  தளபாடமும் பொருத்திகளும் கிரயத்தில் வருடம் ஒன்றிற்கு 20%
  மோட்டார் வாகனம் கிரயத்தில் வருடம் ஒன்றிற்கு 20%
- விநியோகத்தர் ஒருவருக்கு எழுதப்பட்ட ரூபா 28 000 இற்கான காசோலை ஒன்று தொழில்நுட்பப் பாதிப்புக் காரணமாக 01.04.2010 இல் வங்கியால் மறுக்கப்பட்டது.
- வருடத்திற்கான அருவிடமுடியாக்கடன் மொத்தம் ரூபா 64 000 ஐ பதிவழிப்பதென தீர்மானிக்கப்பட்டது. ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு அறவிடமுடியாக் கடன் பதிவழித்ததன் பின்னர் மீதிக் கடன்பட்டோரில் 10% மாக சீராக்கப்படல் வேண்டும்.
- பலத்த மழை காரணமாக ஏற்பட்ட மண் சரிவினால் 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாதையின் ஓரத்தில் அமைந்திருந்த சிறிய அலுவலகக் கட்டடம் ஒன்று அழிக்கப்பட்டது. அழிக்கப்பட்ட கட்டத்தினது கிரயமானது ரூபா 1 600 1000 ஆகக் காணப்பட்டதுடன், பெமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 320 000 ஆகவும் காணப்பட்டது. காப்புறுதிக் கம்பனி சேதத்திற்காக ரூபா 1 240 000 ஐச் செலுத்துவதாக ஏற்றுக்கொண்டது. இதன் ஒரு பகுதியை 2009 பெப்ரவரியில் செலுத்தவேண்டியிருந்தது. கணக்குப்பதிவாளர் செலுத்தப்பட்ட வரியை, காப்புறுதி பெற்ற அறவீட்டுக் கணக்கில் செலவு வைத்ததுடன் இது தொடர்பாக வேறு எந்த ஒரு பதிவினையும் மேற்கொண்டிருக்கவில்லை.
- கம்பனியானது 2010 மார்ச் 28 ஆம் திகதியன்று பட்டியலிடப்பட்ட பெறுமதியான ரூபா 704 000 இற்கு விற்பனையின்றேல் திருப்பயனுப்புக எனும் அடிப்படையில் ஒரு வாடிக்கையாளருக்கு சில பொருட்கள் அனுப்பப்பட்டன. அப் பொருட்களுக்கான திருப்பயனுப்பக்கூடிய காலம், இன்னும் முடிவடையவில்லை. வாடிக்கையாளர் பொருட்களின் பங்கு, 2010 மார்ச் 31 இல் விற்கப்பட்டுவிட்டதாக அறிவித்தார். கிரயத்தில் 20% ஐச் சேர்த்து பட்டியலிடுவது கம்பனியின் கொள்கையாகும்.
- 2010 மார்ச் 31 ஆம் திகதியில் இயக்குநர்கள் பின்வருவனவற்றை ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்தனர்.
  பொது ஒதுக்கத்திற்கு ரூபா 160 000 ஐ மாற்றுவதற்கு சாதாரண பங்கு ஒவ்வொன்றுக்கும் ரூபா 2 பங்குலாபத்தையும், முன்னுரிமைப் பங்குகளுக்கு ரூபா 4 பங்குலாபத்தையும் முன்மொழிதல்.
  ஆரம்பச் செலவீடுகளில் 10% ஐப் பதிவழித்தல்.

**வேண்டப்படுவது:**

பிரசுரிப்பதற்குப் பொருத்தமான வடிவில் பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

1) 2010 மார்ச் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கு இலாபநட்டக் கணக்கு.
2) 2010 மார்ச் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கு உரிமை மூலதன மாற்றங்களைக் காட்டும் கூற்று.
3) 2010 மார்ச் 31 இல் ஐந்தொகை. (பங்குலாப வரி 10%)

02. அ. வரையறுத்த பத்தன் கம்பனியின் சாதாரண பங்கு 120 000 இற்கான விண்ப்பங்களை அழைப்பதற்கு பணிப்பாளர் தீர்மானித்தனர். இதற்குப் பின்வரும் முறைப்படி பணம் பெறப்படும்.

| | ஒவ்வொன்றும் |
|---|---|
| விண்ணப்பம் | ரூபா 10 |
| ஒதுக்கலின் போது | ரூபா 8 |
| அழைப்பன் போது | ரூபா 6 |

- 168 000 பங்குகளுக்கான விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதுடன் சரியாகக் பூரணப்படுத்தாத 8 000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அத்துடன் அவற்றின் தொகை மீளளிக்கப்பட்டன.
- 160 000 பங்குகள் விண்ணப்பித்தவர்களுக்கு விகிதாசார அடிப்படையில் 120 000 பங்குகள் ஒதுக்கப்பட்டது. மேலதிக விண்ணப்பப் பணம் கொடுக்க வேண்டிய பகிர்வுக்காக செம்மையாக்கப்பட்டது.
- 300 பங்குகள் வைத்திருந்த திரு.அனில் பகிர்வுப் பணத்தைச் செலுத்தத் தவறினார்.
- 360 பங்குகள் வைத்திருந்த திரு.சலீம் அழைப்புப் பணத்தைச் செலுத்த் தவறினார்.

ஆ. அழைப்பற்குப்பின் இருவரின் பங்குகளும் முழுமையாகச் செலுத்தப்பட்ட பங்குகளாக ரூபா 24 இற்கு மீள வழங்கப்பட்டது.

**தேவைப்படுவது:**

1) ஒதுக்கலின்போது பெறப்பட்ட பணத்தைக் கணிப்பிடுக.
2) ஒதுக்கல், அழைப்பு நிலுவைகளைத் தனித்தனியே காண்க.
3) இக் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்கான (காசு உட்பட) நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.
4) பறிமுதலும் மீள் விநியோகத்துக்குமான கணக்கைத் தயாரிக்குக.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். மனைவி, குழந்தைகளுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பணவரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்யலாம். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். மதிப்பு, கௌரவம் பார்த்து சில விடயங்களில் நடந்து கொள்வீர்கள்.

### இடபம்




உறவினர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். உங்கள் நலனில் அக்கறை கொண்டவர்களின் யோசனையைக் கேட்டு செயற்படுவீர்கள். வெளியிடங்களுக்கு செல்லும்போது எதிர்பாராமல் ஒருவரைப் பார்க்கலாம். விருப்பமான உணவு வகைகளை அதிகமாகச் சாப்பிட்டு தொந்தரவுகளுக்கு ஆளாகலாம். வீண் பயம் உண்டாகும்.

### மிதுனம்



சில வேலைகளுக்காக அங்கும் இங்கும் அலைய நேரிடலாம். பிள்ளைகளின் பொறுப்பான செயல்பாடுகளால் பெருமை கொள்வீர்கள். அயலாரை அனுசரித்துச் செல்ல வேண்டும். உறவினர்கள் சிலருக்காக செலவுகள் செய்யலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய நேரிடலாம். ஆடம்பரச் செலவு தவிர்க்கவும்.

### கடகம்



தந்தை தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். நோய் உபாதைகள் நீங்கி தெம்பு உற்சாகம் பெறுவீர்கள். பண விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். ஆசைப்பட்ட பொருள் ஒன்று கைக்கு கிடைக்கலாம். காலை முதல் மாலை வரை உற்சாகமாக செயல்படுவீர்கள். கலகலப்பான அனுபவம் உண்டு.

### சிங்கம்



சிறிய விடயங்களுக்காக பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். முன்பின் தெரியாதவர்களை நம்பி சில வேலைகளை ஒப்படைக்கலாம். திடீர் செலவுகளைச் சமாளிக்க பிறரிடம் கடனுதவி பெறலாம். திட்டமிட்ட பணிகளில் மாற்றங்கள் செய்வீர்கள். மற்றவர்களை கேலி, கிண்டல் பேசி அதில் சந்தோஷம் காண்பீர்கள்.

### கன்னி



நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்கள் வீடு தேடி வரும் நாள். எடுத்த காரியத்தை முடிக்க நண்பர்கள் வழியில் உதவி கிடைக்கலாம். வண்டி வாகனங்களை, கனமான பொருள்களை கையாளும் போது கவனம் அவசியம். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கலாம். அனுகூலமான நாள்.

### துலாம்



சிலரிடம் கோபம், வேகமாகப் பேசலாம். தொலை பேசி வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். வசதியான வீடுகளுக்கு மாற திட்டமிடுவீர்கள். வாய்ப்புகள் நழுவாமல் இருக்க எச்சரிக்கை அவசியம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். எதிர்பாராத சந்திப்புகள் நிகழலாம்.

### விருச்சிகம்



வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். உறவினர்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கும். ஏதோ ஒரு வகையில் பணவரவுகளைப் பெறலாம். நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம்.

### தனுசு



தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவும் நாள். தெய்வ காரிய பிரார்த்தனைகளை நிறைவேற்ற முற்படுவீர்கள். காலை நேரத்தில் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம்.

### மகரம்



குழப்பங்கள், தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். நினைத்த ஒரு வேலையைச் செய்ய முடியாமல் மற்றொரு வேலையைச் செய்யலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்பீர்கள். கேளிக்கை, கொண்டாட்டத்தில் நாட்டம் செல்லும்.

### கும்பம்



கடன் பிரச்னைகளால் கவலை அடையலாம். சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம். போட்டி, பொறாமைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். வாடகைக்கு குடியிருப்போர் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். எதிலும் வேகத்தை தவிர்த்து நிதானமாக செயற்பட வேண்டும். தண்டச் செலவு நேரும்.

### மீனம்



பொதுவாழ்வில் உள்ளோருக்கு செல்வாக்கு அதிகரிக்கும். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொடர்புகொண்டு முக்கிய விடயமாகப் பேசுவீர்கள். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்குவீர்கள். உறவினர்கள் வழியில் மனதிற்கு சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். சோர்வின்றி புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள்.


DANISH DEMINING GROUP

## DANISH DEMINING GROUP

Danish Demining Group (DDG) has been in operations in Sri Lanka since 2003. Presently the work force consists of 400 personnel which is expected to increase to 700, including deminers, administrative staff and a Management group, mainly built upon national capacity supported by expatriate Programme Manager, Operations Manager and Technical Advisors. DDG presently operates in Jaffna, Killinochchi and Vavuniya districts.

DDG is an active participant in the global effort to reduce the effects of landmines. The objective of DDG is to contribute towards the goals and objectives of the National Mine Action Program in Sri Lanka, which aims to reduce the threat of mines and other unexploded ordnance from priority areas. The Demining project in Sri Lanka is scheduled to run upto December 2010, with the possibility of extension upto 2011, depending on funding.

Vacancies: Quality Assurance Officer - Jaffna and Vavuniya (2 Posts)

SPECIFIC DUTIES

Under the direction of the Operations Manager

**Operational Responsibilities**

a. Report all QA matters to Operations Manager.
b. Conduct QA of DDG sites in your area of operations.
c. Complete QA reports for all facets of Mine Action in the DDG Sri Lanka mine action programme.
d. Prepare a monthly QA working plan.
e. Advise Team Leaders on any non conformity issues and how to correct any such instances.
f. Point of contact for all DMAO QA issues in consultation with the Operations Manager.
g. Provide technical assistance to DDG teams where required.
h. Stand in for Technical Advisor MCT as required.

**General**

a. Act as in-country technical advisor during stand-down periods.
b. Provide QA input to the DDG monthly operations report.
c. Point of contact for all QA queries concerning the allocated area of operations/field teams.

Conduct other duties for the good and benefit of the DDG Sri Lanka programme.

MINIMUM QUALIFICATIONS

1 Completed High School Education.
2 Substantial experience as an International Mine Action Technical Advisor or Field Operations Officer 1
3 Proven IT skills.
4 Ability to work proactively and with initiative.
5 Team approach.
6 Good interpersonal skills.
7 Flexible, reliable and trustworthy.
8 Good level of English (verbal and written).

Preferable

- 2 years work experience as a International Technical Advisor or Field Operations Officer.
- Experience in a Quality Control and Assurance.
- Experience in Manual Demining Techniques.
- Level 3 EOD

How to Apply

Applications for all positions should accompany a cover note to DDG, stating why and how they fit the selection criteria and attach a copy of CV with contact details and names of two non related referees to the following address by 25th July 2010.

Only candidates who meet all the above requirements will be invited for an Interview/test.

Office Manager,
DANISH DEMINING GROUP
456, Main Street, Chundukuli,
Jaffna

(101106)

Fax 021 222 8180
E-mail: Jaofficemgr@ddg.lk



## நன்றி கலந்த வாழ்த்துக்கள்



அரச சேவையில் அர்ப்பணிப்பான அகவைகள் ஐம்பதை நிறைவு செய்து ஓய்வு பெற்றுச் செல்லும் சரித்திர நாயகன்


முன்னாள் யாழ்.அரச அதிபர்

**திரு.கே.கணேஷ்**

மக்கள் சேவையே மகேசன் சேவையென வாழ்ந்த மகோன்னத மனிதரே! அரசாங்க சேவகன் என்ற சொல்லிற்கு அகராதியாக வாழ்ந்தவரே! மாயக்கை குடிநீர்த்திட்டம், கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை, அத்துளுகுளம் புனரமைப்பு இத்திட்டங்களின் மூலம் கரவையூர் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்கு உழைத்த உத்தமரை நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கரவை அபிவிருத்தி ஒன்றியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**01.01.1995**

✱ ஒன்றில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அல்லது புலிகளுக்கு எதிராகப் போரைத் தீவிரப்படுத்த வேண்டும். இந்த இரண்டில் ஒன்றை இப் புத்தாண்டில் ஜனாதிபதி பிரேமதாஸ தீர்மானிக்க வேண்டும், என அரசியல் விமர்சகர்கள் தெரிவிப்பு.

✱ மன்னார், வங்காலையில் கிணறு ஒன்றினுள் இருந்து ஆறு மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**02.01.1995**

✱ வடக்கு -கிழக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முட்டுக்கட்டை போடாது சகலரும் அரசுக்கே ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ பகிரங்கமாக வேண்டுகோள் விடுப்பு.

✱ வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு துரிதமான தீர்வு காணுமாறு அஸ்கிரிய பீடாதிபதி ஜனாதிபதி பிரேமதாஸவிடம் வேண்டுகோள் விடுப்பு.

**03.01.1995**

✱ யாழ். பல்கலைக்கழகம் தவிர்ந்த நாட்டில் உள்ள ஏனைய பல்கலைக் கழகங்கள் அனைத்தும் நேற்று முதல் செயல் இழந்தன. ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பீடாதிபதிகள் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱ புலிகளுக்கு எதிரான போரில் நவீனரக ஆயுதங்களை பாவிக்கும் நோக்குடன் அவை வெளிநாட்டில் இருந்து வந்து சேரும்வரை இராணுவத்தரப்பு காத்திருப்பதாகத் தெரிவிப்பு.

**04.01.1995**

✱ யாழ். குடாநாட்டுக்கான போக்குவரத்தை இலகுவாக்கும் நோக்கில் பூநகரிப் பாதையைத் திறக்கும் சாத்தியம் குறித்து அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் ஜெனிவா தலைமையகம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிப்பு.

✱ கிளாலிக் கடலில் பொதுமக்கள் பயணம் செய்த படகுகள் மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 9 போதுமக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

**05.01.1995**

✱ கிளாலிக் கடலில் பயணம் செய்த படகுகள் மீது நேற்றும் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் 15 பொதுமக்கள் உயிரிந்ததாகத் தெரிவிப்பு.

✱ சுதந்திரக் கட்சிக்குள் நடைபெற்று வரும் அதிகாரப் போட்டியில் அனுரா பண்டாரநாயக்காவுக்கு பெரும் வெற்றி கிடைத்திருப்பதாக அரச கட்டுப்பாட்டு பத்திரிகைச் செய்தி தெரிவிப்பு.

**06.01.1995**

✱ பொருளாதாரத் தடையை நீக்குவது உட்பட நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து யாழ். நகரில் வெகுசனப் பேரணி ஒன்று எதிர்வரும் திங்கள்கிழமை நடாத்தப்படும் என அறிவிப்பு.

✱ கிளாலியில் படுகொலையுண்ட பொதுமக்களின் சடலங்களில் வெட்டுக் காயங்களும் குத்துக் காயங்களும் காணப்படுவதாக சம்பவத்தில் உயிர் தப்பிய ஒருவர் தெரிவித்துள்ளதாக பி.பி.ஸி வானொலி தெரிவிப்பு.

**07.01.1995**

✱ இலங்கை விமானப்படையின் இரு சுப்பசோனிக் விமானங்கள் நடத்திய விமானக் குண்டு வீச்சில் சித்தக்கோணியில் 9 பொது மக்கள் உடல் சிதறிப்பலியானதாகத் தெரிவிப்பு.

✱ அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வருவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்துவிட்டதாகத் தெரிவிப்பு.

**08.01.1995**

✱ கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்த போதிலும் அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி. வண.கென்னத் பெர்னாண்டோ அரசின் அனுமதியின்றியே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிப்பு.

✱ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் பாரிஸிலோ அல்லது வேறு எந்த ஐரோப்பிய நாட்டிலே அமைச்சர் ஹமீத் பேச்சு நடத்தவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

**09.01.1995**

✱ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரச படைகளின் நடவடிக்கைகள் குறித்து தென் பகுதிச் சிங்களவர்களில் கணிசமானோர் அதிருப்தி அடைந்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱ யாழ். குடாநாட்டு மக்கள் குடாநாட்டுக்கு வெளியே செல்வதில் அனுபவிக்கும் சிரமங்கள் குறித்து தாம் கவலை அடைவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு.

**10.01.1995**

✱ குடாநாட்டுக்கான போக்குவரத்தை சீர் செய்யும் ஏற்பாடாக பூநகரிப் பாதையைத் திறப்பதற்கு புலிகள் விதித்த நிபந்தனையை இலங்கை அரசு நிராகரிப்பு.

✱ அரசின் பொருளாதாரக் கொள்கை குறித்து பொது மேடையொன்றில் விவாதிக்க வருமாறு ஜனாதிபதி பிரேமதாஸ விடுத்த சவாலை எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ ஏற்றுள்ளதாகத் தெரிவிப்பு.

**11.01.1995**

✱ மூன்று கிறிஸ்தவ திருச்சபைகளின் ஆயர்கள் நேற்று விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரைச் சந்தித்து உரையாடியதாகத் தெரிவிப்பு.

✱ நாடாளுமன்றத் தெரிவிக் குழுவின் யோசனையை நம்பிக்கையோடு எதிர்பார்க்குமாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி.வண.கென்னத் பெர்னாண்டோ தெரிவிப்பு.

**12.01.1995**

✱ மட்டக்களப்பு மாவட்டம் - கொஸ்வலையில் இராணுவம் - விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஆறு படையினரும் பன்னிரண்டு போராளிகளும் உயிர் இழந்ததாகத் தெரிவிப்பு.

✱ இலங்கை இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் வேலைகள் தொடர்ச்சியாக முடுக்கி விடப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

**13.01.1995**

✱ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவருக்கும் அங்கிலிக்கன் திருச்சபை ஆயருக்கும் இடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு வழி செய்யக் கூடும். என ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

**14.01.1995**

✱ முப்படைகள், பொலிஸ் சேவை ஆகியவற்றில் இருந்து இதுவரையில் 10 ஆயிரம் வரையிலானவர்கள் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிப்பு.

✱ இலங்கை இராணுவத்தில் நான்கு புதிய பட்டாலியன்கள் உருவாக்கப்பட்டு வருவதாகத் தெரிவிப்பு.

**16.01.1995**

✱ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான கிட்டுவை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படை கைது செய்து சென்னைக்குக் கூட்டிச் செல்வதாக அறிவிப்பு.

✱ நமது கப்பலை இந்தியக் கடற்படைக் கப்பல் வழிமறித்தால் தமது கப்பலை தன்னுடன் சேர்த்துத் தகர்த்து விடப்போவதாக கிட்டு எச்சரித்தார் எனத் தெரிவிப்பு.

✱

# புதிய நிர்வாக சபை

யாழ்ப்பாணம், ஜூலை 19

சாவகச்சேரி நகர சபை சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக் கூட்டம் அண்மையில் நகரசபை மண்டபத்தில் தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ. ஜெகதீஸன் தலைமையில் நடைபெற்றது.

சமாசத்தின் தலைவராக சு.சரவணமுத்துவும், செயலாளராக வை.இராசரத்தினமும், உப செயலாளராக ப.ஞானசேந்தனும், பொருளாளராக செ.மகேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக க.மோகனராஜலிங்கம் (நுணாவில் கிழக்கு சர்வசாதன ச.ச.நி), நா.நந்தபாலன் (சங்கத்தானை கணேசர் ச.ச.நி), வே.சிவராசா (சாவகச்சேரி திருவள்ளுவர் ச.ச.நி), ஆ.மார்க்கண்டு (மீசாலை வீனஸ் ச.ச.நி), பா.சுதாகரன் (மீசாலை கிழக்கு பாலையடி ஸ்ரீ விநாயகர் ச.ச.நி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(எ-207)

# வாசகர் திருமுகம்

## இ.போ.ச.ஒரு சில பாடசாலைகளை தவிர்ப்பது ஏன்?

*யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை பாடசாலையை நோக்கி கொக்குவிலிருந்து இணுவில், சுன்னாகம், மல்லாகம், மாகியப்பிட்டி, அளவெட்டிப் பகுதிகளிலிருந்து அதிகளவு மாணவர்கள் 768 இலக்க பஸ்ஸின் மூலம் பிரயாணம் செய்கிறார்கள். ஒரு மாதத்தில் இவ்வழி பஸ்ஸிற்கு 135 பருவகாலச் சீட்டுக்கள் பாடசாலையினூடு பெறப்படுகின்றது. இரண்டாம் தவணையிலிருந்து 768 இலக்க பஸ் விரல்விட்டு எண்ணும் அளவு ஒரு சில நாள்களே காலை பாடசாலைக்கு வந்துள்ளது. இது தொடர்பாக பல புகார்க் கடிதங்கள் முகாமையாளர் கோண்டாவில் டிப்போ, அரச அதிபர் யாழ்.மாவட்ட செயலகம், பிரதேச செயலர்-தெல்லிப்பழை, வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்குப் பாடசாலை அதிபரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் கொடுத்தும் நேரடியாகக் கதைத்தும் எவ்வித முன்னேற்றமும் இல்லை. காங்கேசன்துறை வீதியினூடு பல பேருந்துகள் பாடசாலை நேரத்திற்கு யாழ்ப்பாணத்தை நோக்கி ஓட முடியுமானால் ஒரு வழிப் பாதை மட்டும் உள்ள அம்பனைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஏன் ஒரு பஸ்ஸாவது ஓட விடமுடியவில்லை என்பதை புரிந்து கொள்ள முடியாமல் பெற்றோர்களும் அங்கலாய்க்கின்றனர். பருவகாலச் சீட்டுக்கள் விற்பனை செய்யும் போதாவது இலங்கைப் போக்குவரத்துச் சபை இதைப்பற்றிச் சிந்திக்கமாட்டார்களா? அல்லது கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைதானே என்ற இளக்காரமா? கிராமப்புறப் பாடசாலைகளைத் தேடி வருபவர்களில் பெரும்பாலானோர் நடுத்தரக் குடும்பத்தினர். அவர்களுக்குப் பருவகாலச் சீட்டை மாதத் தொடக்கத்தில் வாங்குவதற்குப் பணத்தைச் செலவழித்துக் கொண்டு பிரத்தியேக வானிற்கும் பணம் செலவழிப்பதற்கும் முடியாது என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் சொந்த வாகனத்திலும் தங்கள் பிள்ளைகளை பாடசாலைகளுக்குக் கொண்டு செல்ல முடியாதவர்கள்.*

*நடுத்தர வர்க்கத்தினரின் போக்குவரத்திற்கு என்று நாடெங்கிலும் தொழிற்படும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஒரு சில பாடசாலைகளை ஏன் தவிர்க்கின்றது என்பதற்குப் பதிலைப் பாடசாலைச் சமூகம் எதிர்பார்க்கின்றது.*

அதிபர், மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

திருமதி ஆனந்தசபாஸன்.

## துன்பப்படும் மக்களைத் தொடர்ந்தும் வதைக்கலாமா?

*சமூக ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் மனித விழுமியங்களோடு மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் தாங்கள் செய்யாத குற்றத்திற்குத் தண்டனை அனுபவிப்பது போலப் போரிற் சிக்கிய நாள் தொடக்கம் எழுத்தில் வடிக்கவொணாத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உடன்பிறப்புக்கள் உட்பட அவர்களைப் பற்றி போதிய கரிசனை இல்லாமலே உலகத்திலுள்ளவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.*

*அதை விட மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதாகப் பெரும் ஆரவாரகமாகப் பெரும் பணச் செலவுடன் செய்யப்படும் தொண்டு (?) நிறுவனங்கள் இவர்களுடைய துன்பத்தைத் தொடரச் செய்வதற்காகவே செயல்படுபவர்கள் போலக் காரியமாற்றுகிறார்கள்.*

*இம்மக்களுக்கு இருப்பிட வசதி செய்வதாகச் சொல்லி சிறு சிறு புறாக் கூடுகள் செய்கிறார்கள். அவற்றிற்குப் படம் வரைவது தொடக்கம் திட்டமிடுவது வரை பெரிய ஏற்பாடுகள். ஆனால் இதனால் மக்கள் பயனடைய வேண்டுமென்ற கோட்பாடு இருப்பது போலவே தெரியவில்லை. இவ்விருப்பிடங்கள் அமையும் இடத்தைப் பற்றி அறிவு திட்டமிட்டவர்களுக்கு இருந்திருக்கவில்லை. ஒன்றைக் குறிப்பிடலாம். உயரமான கட்டடங்களில் பயன்படுத்தும் போது கூட வெப்பத்தடுப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டிய கூரைத் தகட்டை ஆகக் குறைந்த உயரமுள்ள கட்டடங்களுக்குரிய கூரைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். அதுவும் இவற்றின் அமைவிடங்கள் அயலில் உள்ள இடங்கள் எல்லாவற்றையும் விட வெப்பமான பிரதேசங்கள். இந்த உண்மைகளை வெளிப்படுத்தவே சக்தியற்ற ஒரு மக்கள் கூட்டமாக நாம் இருப்பதுதான் இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் காரணமா?*

கொக்குவில்.

வை.சந்திரபாலன்

## கவனிப்பார் இல்லையா?

*வனவாசம் முடித்து, அஞ்ஞாத வாசத்தின் பொருட்டு எமது சொந்தக் காணிகளில் ஒதுங்கி வாழ இடமில்லாமலிருக்கும் வன்னி மக்களின் வருத்தத்தில் ஒன்று.*

*பெருந்தெருக்கள் திணைக்களமோ, வீதி அதிகார சபையோ கவனம் செலுத்தாமல் கிடக்கும், கிளிநொச்சி இராமநாதபுரம் வீதியின் நிலை.*

*குண்டும் குழியும் ஆகக் குறுகி வழி நடையின் பொருட்டு வேலியோரங்களால் கனரக வாகனங்கள் செல்வதால் வேலி கூரையில்லாத வீடுகள் அனைத்தும் தூசி படிவது மாத்திரமன்றி மக்களுக்கு காசநோயை வரவழைத்தும்விட்டது. வீதியோரங்களில் வீதிக் கிறவல்கள் குவிந்திருப்பதனால் சைக்கிள்களில் பயணிப்போர் நாளாந்தம் சறுக்கி விழுந்து உடலில் வெளிப்புறக் காயங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. உட்புறக் காயம் உரியவரிடம் கேட்டறிய வேண்டும்.*

*இவைகளைக் கண்ணுற்று போக்குவரத்துப் பெருந்தெருக்கள் திணைக்களமோ, அதிகார சபையோ அன்றி கிளிநொச்சி மாவட்டத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரோ கவனஞ்செலுத்தி வீதியைச் செப்பனிடுவித்துத் தருமாறு வட்டக்கச்சி இராமநாதபுரம் வீதியோர மக்கள் கேட்டுக்கொள்கின்றார்கள்.*

இராமநாதபுரம்.

பாதிக்கப்பட்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் கல்விச் சுற்றுலா - மீள் பதிவுகள்

இலங்கையின் இலவசப் பாடக் கலைத்திட்டத்தின் கற்றல் செயற்பாட்டின் ஒரு அங்கமாக இணைப்பாட விதான செயற்பாடுகள் அமைகின்றன. இதன் மூலம் ஒரு மாணவனது ஆளுமைத்திறன்,தலைமைத்துவப் பண்பு, நல்ல மனப்பாங்கு என்பவற்றில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தவகையில் கலைத்திட்ட இணைப்பாடவிதான செயற்பாட்டில் கல்விச்




சுற்றுலா முக்கிய பங்கைப் பெறுகின்றது. நேரடி அவதானிப்புக் கற்றலுக்கு இச்செயன்முறை வழிவகுக்கிறது.கல்வியியலாளரான '' ஜோன் டூயின்'' கருத்தாகிய '' அனுபவங்கள் வாயிலாகக் கற்றல்'' எனும் கருத்துக்கு களப்பயணம் செயலுருவம் வழங்குகின்றது. அந்த வகையில் இக்கட்டுரையின் நோக்கமும் கல்விச் சுற்றுலா மூலம் அனுபவ வாயிலாகக் கண்ட உணர்வுப் பரிமாற்றத்தை பகிர்ந்து கொள்வதாகும்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த தரம்11 வகுதியைச் சேர்ந்த கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர்,பிரதி அதிபர் ,

## போருக்குள் முடங்கிக் கிடந்த மாணவர்கள் புதியதொரு சூழலுக்குள் உள் நுழைந்தனர்

ஆசிரியர்கள், மாணவர்கள்,பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட 70 பேர் அடங்கிய பயணக் குழுவினர் கடந்த 03.07.2010 தொடக்கம் 09.07.2010 வரையான 07 நாள்கள் கொண்ட வெற்றிகரமான களப்பயணத்தின் அனுபவத் திரட்டாக இக்கட்டுரை அமைகின்றது. மிகவும் சிறப்பான திட்டமிடல், வழிப்படுத்தல்கள், தலைமைத்துவம், ஒருங்கிணைப்பு என்பன ஒரு களப்பயணத்திற்கு அவசியம் என்பதற்கு உதாரணமாக இப்பாடசாலையில் கல்விச் சுற்றுலா அமைந்துள்ளது. தொடர்ந்து களப்பயணத்திற்குள் உங்களை அழைத்துச் செல்கின்றோம்.

**03.07.2010 சனிக்கிழமை அதிகாலை 5.45 மணி**

தென்மராட்சிப் பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகிய கச்சாய் அம்மன் ஆலயத்திலிருந்து பயணம் ஆரம்பமாகின்றது. சுற்றுலாக் குழுவுக்கான பொறுப்புக்கள் கையளிக்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட பயணக்குழுவினர் மிகவும் உற்சாகமாகக் காணப்படுகின்றனர். பயண ஒழுங்கில் முறிகண்டிப் பிள்ளையார் தரிசனத்துடன் ஏ-9 வீதியூடாகப் பயணித்து இலங்கையின் பௌத்த மத

**அபராஜிதன்**
**(ஆசிரியர்,கச்சாய் அ.த.க. பாடசாலை)**

பரம்பலுக்காக மகிந்ததேரர் வருகைதந்த இடமாகிய மிகிந்தலையைப் பயணக்குழு சென்றடைகின்றது. இலங்கையின் அண்சமவெளிப் பிரதேசத்தின் எச்சக்குன்றுகளை மாணவர்கள் கண்டறிவதற்கும் பௌத்த மதத்தின் தோற்றுவாயின் மூலங்களை கண்டறியவும் இந்த இடம் மாணவர்களுக்கு உதவியாக அமைகின்றது. தொடர்ந்து இலங்கையின் ஆட்சி மையத்தின் முக்கிய இடமாகிய அனுராதபுரம் நோக்கி பயணத்திசை திரும்புகின்றது. சங்கமித்தையில் வெள்ளரசுக் மரக்கிளை கொண்டுவந்து நடப்பட்ட இடத்தினையும் அதனோடு இணைந்துள்ள ருவான் வெலிசாய, ஜேதவனராமய, இலங்கையில் முதலாவது விகாரையாகிய தூபராம மற்றும் குட்டம் பொய்கை,அபயகிரி விகாரை என்பன வரலாற்றைக் கற்கும் மாணவர்களின் நேரடித் தரிசிப்புக் காரணமாக மனதில் பதிய வைப்பதற்கான சம்பவமாக அமைகின்றது. இலங்கையில் மத அனுஷ்டானங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவமும் கௌரவமும் வழங்கப்படுகின்றது என்பதை இவ்விடங்களுக்குச் சென்று பார்வையிடுவதன் வாயிலாக அனுபவித்துக்கொள்ள முடிகின்றது.

அனுராதபுரத்தின் கேந்திர வரலாற்று இடங்களைப் பார்வையிட்ட பின் நமது பயணம் புத்தளம் நோக்கி நகருகின்றது. இயற்கை எழில் கொஞ்சும் கடலும் அதனோடு கூடிய களப்பும் அம்மாவட்டத்தை அழகுபடுத்துகின்றது. புத்தளம் மாவட்டத்தின் உடப்பு எனும் கரையோரக் கிராமம் பௌதிகச் சூழலின் அழகை மேலும் மெருகூட்டுகின்றது. உடப்புப் பிரதேசத்தின் தரைத்தோற்ற அம்சங்கள், அம்மக்களின் வாழ்க்கை முறை, விருந்தோம்பல் பண்புகள் என்பன எம்மை நெகிழ வைத்தன. திரௌபதை அம்மன் வழிபாட்டின் முக்கிய இடமாக உடப்புக் கிராமம் காணப்படுகின்றது. அங்கு திரௌபதைஅம்மன் ஆலயம் பெரு விருட்சமாக அக்கிராமத்தை அழகு படுத்துகின்றது. அவ்வாலயத்தில் முக்கிய சிறப்பு ஒன்றுள்ளது. அதாவது இரண்டு கொடிக்கம்பங்கள் காணப்படுகின்றது. அதன் அம்சம் யாதெனில் மூலக் கிரகத்தில் திரௌபதை அம்மனும் அதற்கருகில் விஸ்ணுவினதும் சிலை வைக்கப்பட்டு இரு தெய்வங்களுக்குமான வழிபாடுகளும் உற்சவங்களும் நடைபெறுகின்றன. குறிப்பாக திரௌபதை அம்மனுக்கான வழிபாட்டு உற்சவ காலம் வேறாகவும் விஸ்ணுவுக்குரிய உற்சவ வழிபாட்டுக் காலம் வேறாகவும் அமைந்திருப்பதால் இரண்டு கொடிக்கம்பங்கள் பயன்படுத்தப்படுகின்றனவாம். அந்த வகையில் எமது முதலாம் நாள் களப் பயணம் கச்சாய் அம்மனில் ஆரம்பித்து திரௌபதை அம்மனில் இனிது நிறைவெய்துகின்றது. முதலாம் நாளில் ஆண்கள் உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்திலும் பெண்கள் திரௌபதை அம்மன் கல்யாண மண்டபத்திலும் தங்க வைக்கப்பட்டனர். உடப்பு தமிழ் மகா வித்தியாலய அதிபர் ஆனந்தன் எங்களை வரவேற்று உணவு வசதிகளை மேற்கொண்டு தங்களது கிராமியப் பண்பாட்டு முறைகளையும் ஆலய வழிபாட்டு முறைகளையும் பிரதேசத்தின் பிரதான தொழிலாகிய மீன்பிடியுடன் கூடிய இறால் வளர்ப்பு முறைபற்றி விளக்கமாகக் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அம் மக்களின் பேச்சு வழக்குகளில் கூட வேறுபாடுகள் காணப்பட்டன. மேலும் அப்பிரதேசத்தில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவுகின்றமையும் இலங்கையின் கரையோர மாவட்டங்களில் ஒன்றாகிய புத்தளம் மாவட்டத்தின் தரைத்தோற்ற மற்றும் பொருளாதார அம்சங்கள் சிறப்பாக அமைந்துள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.



இரண்டாம் நாள் பயணம் உடப்பிலிருந்து ஆரம்பமாகின்றது.மாணவர்கள் மிகவும் உற்சாகமாக புதியதொரு சூழலுக்குள் மெல்ல மெல்ல நுழைந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. போருக்குள் முடங்கிக் கிடந்த நமது கல்விச் சமூகம் புதியதொரு சூழலை உள்வாங்கத் தலைப்படுகின்றது. இரண்டாம் நாளின் ஆரம்பம் இலங்கையின் ஐந்து ஈஸ்வரங்களில் ஒன்றாகிய முன்னேஸ்வரத்தில் உதயமாகின்றது. தமிழர் தம் பண்பாட்டில் ஆலய வழிபாடு அமைப்பு என்பன இன்றியமையாததற்கு முன்னேஸ்வரர் ஆலயம் உதாரணமாகும். மிகவும் அழகிய சூழலில் ஆலயத்தைச் சூழ பல்வேறு மணிக்கடைகள், பூக்கடைகள், அபிஷேகத் திரவியங்களை விற்பனை செய்யும் கடைகள் என கண்களுக்கு விருந்தளித்து அப்பிரதேசத்தின் மூலக்கிரகத்தை சிவலிங்கமாகக் கொண்டு முன்னேஸ்வரப் பெருமாள் அருள்புரிவதை அவதானிக்க முடிந்தது. ஆலயத்தின் அமைப்பு, விக்கிரங்களின் அமைப்பு, பூஜை ஒழுங்குகள் எம்மை பிரமிக்க வைத்தன. முன்னேஸ்வரப் பெருமானின் தரிசனத்துடன் எமது பயணம் நீர்கொழும்பினூடாக கட்டுநாயக்கா விமான நிலையத்தை அண்மிக்கின்றது. இலங்கையின் விமானப் போக்குவரத்து மார்க்கங்களின் நிலையங்களில் கட்டுநாயக்கா விமான நிலையம் முதன்மை பெறுகின்றது. கட்டுநாயக்காவில் பயணிகளை ஏற்றிச் செல்லும் விமானங்களை எம்மவர்கள் காணச் சந்தர்ப்பமாக இது அமைகின்றது. விமான ஓடுபாதை, விமான எழும்புகை, பயணிகளின் நுழைவுகள், காவிச்செல்லும் வாகனங்கள் வெளிநாட்டு ,உள்நாட்டு பயணிகளின் வருகை, வெளியேற்றம், கட்டடத்தொகுதியின் அமைப்பு என்பன பற்றிய புதிய பார்வைகள், அனுபவங்கள் பயணக்குழுவினருக்கு ஏற்படுகின்றது.அத்துடன் பழுதடைந்து தரித்து நிற்கும் விமானத்தில் அனைவரும் ஏறி தம்மை கமராவிற்குள் புகுத்திக் கொள்ளவும் எவரும் தவறவில்லை. இலங்கையின் வெளிநாட்டு பயண மார்க்கத்தின் பிரதான மூலம் இதுவாகும். கட்டுநாயக்காவிலிருந்து எமது பயணம் அன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் தெகிவளையில் பிரசித்தி பெற்று விளங்கும் தெகிவளை விஷ்ணு ஆலயம் நோக்கி பயணிக்கிறது. ஞாயிற்றுக்கிழமை என்பதால் வீதி நெருக்கடிகள் குறைவாக இருந்ததன் காரணமாக உரிய நேரத்தில் ஆலயத்தைச் சென்றடைய முடிந்தது. ஏராளமான பக்தர்களுடன் ஒன்று கூடி மிகவும் பிரமாதமாக நடைபெற்று பூசை வழிபாடு அதனோடு இணைந்த உன்னதமான நிகழ்வு என்பவற்றில் பங்குபற்ற முடிந்தமை எமக்குக் கிடைத்த ஒரு பேறாகக் கருதினோம்.கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு செல்பவர்கள் இக்கோயில் நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டால் இரவு தங்குவதற்கான வசதிகளும் இலவச உணவு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆலய தரிசனத்தை தொடர்ந்து அருகிலுள்ள தெகிவளை மிருகக்காட்சிச் சாலைக்கு எமது குழுப்பயணம் தொடர்கின்றது. அன்றைய நாள் விடுமுறை நாள் என்பதாலும் விசேடமாக அன்றைய தினம் யானைகள் நடனம் இடம்பெறுவது வழக்கம் என்பதாலும் மிருகக்காட்சிச் சாலையின் வாயிலில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.



நுழைவுச்சீட்டுக்களை பெற்று உள் நுழைந்தோம். ஏறத்தாழ 60 பாகங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகையின உயிரங்கிகள் கண்களுக்கு விருந்தளிக்கூடிய வகையில் நேர்த்தியாக ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. ஊர்வன, பறப்பவை மிருகங்கள் என்றவகையில் பல்வேறு விதமான உயிரங்கிகளின் தொகுப்பை அங்கே காணமுடிந்தது. அதனை விட சிறப்பாயிருந்தது யானைகள் நடனம். யானைப் பாகனால் பயிற்சி வழங்கப்பட்ட நான்கு யானைகள் கட்டளைகளுக்கேற்ப சிறப்பான முறையில் எல்லோரையும் கவரக்கூடிய வகையில் நடனமாடியமை பார்வையாளர் கண்களுக்கு விருந்தளித்தது. தெகிவளை மிருகக்காட்சிச்சாலையில் இருந்து எமது பயணம் காலி முகத்திடல் நோக்கி விரைந்தது. அழகிய மாலை பொழுது. கதிரவன் மெல்ல மெல்ல தன் சூரிய வெப்பத்தை தணிக்க ஆழக்கடல் எங்கும் நீலம் பாலித்திருக்க நங்கையர்களும் ஆடவர்களும் மிகவும் உற்சாகமாக ஒரு குடையில் அமர்ந்திருக்க நாமும் அங்கு செல்கிறோம்.

(பயணம் நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மகா வித்தியாலய ஆசிரியர்களில் ஒரு தொகுதியினருக்கு அண்மையில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உரையாற்றுவதையும் ஆசிரியர் ஒருவருக்கு அவர் துவிச்சக்கரவண்டி ஒன்றை வழங்குவதையும் முதலிரு படங்களிலும், நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

# காணி தொடர்பான நடமாடும் சேவை; கல்மடு நகர் மக்களுக்குப் பெரும்பயன்

கிளிநொச்சி,ஜூலை 19

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவில் கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை நடமாடும் சேவை யொன்று இடம்பெற்றது.

சுதாங்கனி முன்பள்ளியில் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான காணி தொடர்பான இந்த நடமாடும் சேவையில் இக் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 6 ஆம் யுனிற், 7 ஆம் யுனிற் மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் காணி தொடர்பான ஆவணங் களைத் தொலைத் தவர்கள், ஆவணங்கள் இல்லாதவர்கள், உரிமை மாற்றம் செய்ப வர்கள் என நூற்றுக் கணக்கான மக்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித் துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலோனோர் 20 வருடங்களுக்கு மேலாக தமது குடியிருப் புக்குரிய எதுவித ஆவணங்களும் இல்லை என்று தெரிவித்து அதற்குரிய ஆவணங் களைப் பெற்றுத் தருமாறு தமது விண் ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

இக்கிராமத்தில் ''நேர்ப்'' வீட்டுத்திட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வரும் சமயத்தில் காணி தொடர்பான நடமாடும் சேவை இடம் பெற்றிருப்பது பொருத் தமான விடயமாக அமைந்ததாகப் பொது மக்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள் ளனர்.

ஏனைய கிராமங்களிலும் தொடர்ந்து இந்த நடமாடும் சேவை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடமாடும் சேவையில் கண்டாவளைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த உத்தியோ கத்தர்கள் பலரும் பங்கு பற்றினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-405)

## பங்கீட்டு அட்டை வழங்கல்

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டா வளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட கல்மடுநகர் கிராம அலுவலகர் பிரி வில் கடந்த மே மாதம் 15 - 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மீளக்குடியேற் றப்பட்டவர்களுக்கான உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அவற்றைப் பெறாதவர்கள் கிராம அலுவலர்கள் செயலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-315- 405)

# சிதைந்த கட்டடத்தில் முன்பள்ளி சீர் செய்துதருமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்மடு நகர் கிராம அலுவலர் பிரிவில் இயங்கும் சுதாங்கனி முன்பள்ளி எவ்வித அடிப் படை வசதிகளும் இன்றி இயங்கி வருகின் றது.

இடப்பெயர்வுக்கு முன்னர் இக்கிராமத் தில் பல முன்பள்ளிகள் இயங்கிய போதும், மக்கள் கடந்த மே மாதம் மீளக் குடிய மர்ந்த பின்னர் இந்த முன்பள்ளி மட்டுமே இப்பகுதியில் செயற்பட்டு வருகின்றது.

இங்கு 60 மாணவர்கள், தற்போது கல்வி கற்று வருகின்றனர். இவர்களுக்கு இரண்டு ஆசிரியர்கள் எதுவித வேதனமும் இன்றிக் கற்பித்து வருகின்றனர்.

முன் பள்ளியின் கூரைகள் உடைந்து விழும் தொங்கு பறி நிலையில் உள்ளன. அத்துடன் பாடசாலை மாணவர்கள் கற்றல் சாதனங்கள் மற்றும் குடிதண்ணீர், மலசல கூடவசதிகள் எதுவும் இன்றி அவஸ் தைப்படுகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கை மேற்கொள் ளுமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (எ-405)

# பண்டிவிரிச்சான் மக்கள் மீளவும் சொந்த இடங்களில் குடியேற்றம்

மன்னார்,ஜூலை 19

பண்டி விரிச்சானிலிருந்து போர்க் காலங்களில் இடம் பெயர்ந்து மன்னாரில் தங்கள் உறவினர் வீடுகளில் வாழ்ந்து வந்த மக்களில் ஒரு தொகையினர் மீண் டும் தங்கள் சொந்த மண்ணில் மீள் குடி யேற்றப்பட்டுள்ளனர்.

சுமார் 41 குடும்பங்களைச் சேர்ந்த 100 பேர்கடந்த 15ஆம், 16 ஆம் திகதிகளில் மூன்று பேருந்துகளில் ஏற்றி அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

இந்த வைபவத்தில் மன்னார் பிரதேசச் செயலர் திருமதி இஸ்டேன்ரி-டி-மெல், மன்னார் உதவிப் பிரதேசச் செயலர், மற்றும் பிரதேசக் கிராமத் தலைமை அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மீள்குடியேறிய மக்களுக்கு சமைத்த உணவினை மூன்று நாள்களுக்கு வழங் குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன - எனத் தெரிவிக்கப்பட்டது.




## அமைச்சருக்கு வரவேற்பு

மன்னார், ஜூலை 19

கடந்த பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற கைத்தொழில் வர்த்தக அமைச்சர் அல்ஹாஜ் ரிஷாத் பதியுதீனுக்கு ஊர் மக்களால் கடந்த 15 ஆம் திகதி மகத் தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்வையொட்டி தராபுரம் எங்கும் வண்ண மாலைகளாலும் தோரணங்களாலும் வீதிகள் தோறும் அழகு படுத்தி, வெகு உற்சாகத்துடன் அவரை மக்கள் வரவேற்றனர்.

முதன் முறையாக தனது சொந்த ஊருக்கு அமைச்சர் வந்ததையொட்டியே இந்தப் பிரமாண்ட வரவேற்பு நிகழ்வு இடம் பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

# கட்டி முடிக்கப்பட்ட பின்னரும் திறக்கப்படாத அடம்பன் வைத்தியசாலை

மன்னார்,ஜூலை 19

அடம்பன் வைத்தியசாலையும் அதனோ டுள்ள விடத்தல் தீவு வைத்தியசாலையும் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட பின்னரும் அரசியல் வாதிகளின் தாமதத் தால் இன்று வரை திறக்கப் படாமலேயே உள்ளன. இதனால் இப் பகுதியில் குடியேறியுள்ள பொதுமக்கள் பெரிதும் இன்னல்களை அனுபவிப்பதாகக் கூறப்படுகின்றது.

அரசியல் வாதிகளின் வருகையின் மையைக் காரணம் காட்டி வைத்திய சாலைகள் திறக்கப்படாமல் இருப்பதால் ''பூனைக்கு கொண்டாட்டம் - எலிக்கு திண்டாட்டம்'' என்பது போன்று - பெருந் தொகைக் கட்டணங்களை போக்குவரத்துக்காக செலவு செய்து - மக்கள் மன்னார் பொது வைத்திய சாலையிலேயே தங்கிச் கிசிக்சை பெறும் நிலைக்கு ஆளாகியுள்ளனர். எனினும் அங்கும் பூரண சிகிச்சை இன்றி வவுனியா மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்படும் நிலைக் கும் அவர்கள் ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஓட்டோவில் திறந்தபடி 'பாண்'சவாரி; அக்கறை காட்டுவார்களா அதிகாரிகள்?

கிளிநொச்சி,ஜூலை 19

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளுக்கு அதிகாலை வேளையில் விற்பனைக்கு வரும் பாணைப் பாதுகாப்பாகக் கொண்டு வர வேண்டும் என நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதிக்கு மக்கள் பயணம் செய்யும் ஓட்டோக்களில் பாண் அடுக்கப்பட்டு சுகா தார முறைகள் அற்று திறந்தபடியே கொண்டுவரப்படுகின்றது. கிளிநொச்சியில் இருந்து 10 தொடக்கம் 20 கிலோ மீற்றர் வரையான தூரம் இவ்வாறு கொண்டு வரப்படும் பாணே மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

முழுமையாகக் கிரவல் கொண்டு அமைந்துள்ள வீதிகளில் இவ்வாறு திறந்து கொண்டு வரப்படும் பாணில் தூசிகள் படிந்து நுகர்வுக்கு ஒவ்வாதவையாகவுள்ளன.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை கொண்டு இப்பகுதி மக்கள் சுத்தமான பாணை உண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர். (எ-405)

# தனியார் வீட்டில் அரச வைத்தியசாலை

கிளிநொச்சி,ஜூலை 19

வட்டக்கச்சியில் இலவச சித்த ஆயுர் வேத வைத்தியசாலை கடந்த மாதம் முதல் புதுப் பாலத்திற்கு அருகில் தனியார் வீடொன்றில் இயங்கி வருகிறது. இந்த வைத்தியசாலை இடம் பெயர்வுக்கு முன் வட்டக்கச்சி சந்தையில் இயங்கி வந்தது. இக் கட்டடம் புரனமைக்கப்படாமையினாலே இவ்வாறு தனியார் வீடொன்றில் இயங்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

இவ் வைத்தியசாலையில் டாக்டர் மு. சித் திரா பரமேஸ்வரநாதன் கடமை யாற்றி வரு கிறார். இவ் வைத்தியசாலையில் நோயா ளர்களுக்குரிய இருக்கைகள் வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் என்பனவும் அறவே இல்லையென்றும் தெரிவிக்கப் பட்டது.

எனினும் ஒவ்வொரு நாளும் 25-50 வரையான நோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் அனேக மானோர் தோல், சுவாசப்பை சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சை பெறுகின்றனர்.

எனவே இந்த வைத்திய சாலைக்குரிய அடிப்படை வசதிகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் செய்து தர வேண்டும் என இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-315-405)

# ரம்ழான் நோன்புக்குத் தயாராகும் மன்னார் மாவட்ட முஸ்லிம் மக்கள்

மன்னார்,ஜூலை 19

ரம்ழான் பண்டிகை நெருங்கி வருவ தால் மன்னார் வாழ் மக்கள் நோன்புக்குத் தயாராகி வருகின்றனர். தற்போது 10 ஆயி ரம் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்ற மன் னாரில் 1990 ஆம் ஆண்டளவில்- அவர் கள் வெளியேற்றப்பட முன்னர் - சுமார் 35 ஆயிரம் பேர் வரையில் வாழ்ந்து வந்தனர் தற்போது 2500 குடும்பங்கள் மன்னாரில் மீள் குடியேறியுள்ளன.

இவர்கள் மன்னார் மூர் வீதி, உப்புக் குளம், பெரிய கடை, தாராபுரம், புதுக்குடி யிருப்பு, கோணேஸ்பண்ணை, பெரிய கரிசல், காட்டாஸ்பத்திரி, தலைமன்னார் துறை, ரசூழ்புதுவெளி, அளவக்கை, இலந்தை மோட்டை, விடத்தல் தீவு,பெரிய மடு, கூழாங்குளம், வேப்பங்குளம் முசலி மற்றும் மேத்தன் வெளி ஆகிய இடங் களில் மீளக் குடியேறியுள்ளதால் அங்குள்ள 'ஜூம்மாப்' பள்ளிகளைப் புனரமைத்து சன்மார்க்கக் கடமைகளை நிறைவேற்றி வருவதாகக் கூறப்படுகின்றது. (எ-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 39
திகதி - 17.07.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **Y** அதிர்ஷ்ட இலக்கம் **08** வெற்றி இலக்கம் **6 4 8 6 4**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y 08 6 4 8 6 4 | ரூ. 13,683,272.00 | பரிசு | - |
| 1 பரிசு | 08 6 4 8 6 4 | ரூ. 2,000,000.00 | பரிசு | 01 |
| 2 பரிசு | 6 4 8 6 4 | ரூ. 100,000.00 | பரிசு | 02 |
| 3 பரிசு | 4 8 6 4 | ரூ. 10,000.00 | பரிசு | 24 |
| 4 பரிசு | 8 6 4 | ரூ. 1,000.00 | பரிசு | 243 |
| 5 பரிசு | 6 4 | ரூ. 50.00 | பரிசு | 2404 |
| 6 பரிசு | 4 | ரூ. 20.00 | பரிசு | 23382 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 7 பரிசு | 6 4 8 6 | ரூ. 1,000.00 | பரிசு | 25 |
| 8 பரிசு | 6 4 8 | ரூ. 100.00 | பரிசு | 244 |
| 9 பரிசு | 6 4 | ரூ. 50.00 | பரிசு | 2476 |
| 10 பரிசு | Y | ரூ. 20.00 | பரிசு | 9592 |
| 11 பரிசு | Y 08 | ரூ. 100.00 | பரிசு | 1083 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,744,180.00

தேசிய லொத்தர் சபை

இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ. 13,683,272.00

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



### தருமலிங்கம் விக்கினேஸ்வரி

தோற்றம் 02.03.1974 மறைவு 19.06.2010

கடந்த 19.06.2010 இறைபதம் அடைந்த எமது மகளின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (19.07.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
முதலி கோயில் ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அம்பலப்பிள்ளை இலங்கைநாயகம்

(முன்னாள் உத்தியோகத்தர், விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்)



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலப்பிள்ளை இலங்கைநாயகம் 16.07.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.07.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி (மானிப்பாய்) இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*நாவலி வடக்கு, மானிப்பாய்.*
*021 300 2132*
*021 492 2312*

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
மகன்: இ. சுதாகரன் (லண்டன்),
மருமகன்: கா.சோதிலிங்கம்.

*(101159)*

### நாகமணி செல்லையா

(இளைப்பாறிய மெக்கானிக், இலங்கைப் போக்குவரத்துச் சபை)



சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்தவருமான நாகமணி செல்லையா 15.07.2010 வியாழக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சி.நாகமணி-அன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு- இராசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவகுரு மற்றும் அழகம்மா, சரஸ்வதி (கண்மணி), கைலாயப்பிள்ளை, காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் கணேசு ஆகியோரின் அன்புச் சகோதரனும் உமா, இந்திரன், சுரேந்திரன் (சுரேஷ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மரத்தினம், அனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் லேனிகா, கீர்த்தன், பௌஜிகா, பௌஜிதன், அபிராமி, அஷ்வினி, ஜஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.07.2010 புதன்கிழமை பிரான்சில் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*0033144729722* (உமா)
*0033609254964* (இந்திரன்)
*004917677167716* (சுரேஷ்)

அழகம்மா கோபாலப்பிள்ளை,
சரஸ்வதி (கண்மணி) சின்னத்தம்பி
சகோதரர்கள்.

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தரம் 10 வகுப்பு விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களின் துரிதகற்றல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சிகல்வி வலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (எ-207)

## புதிய மினிபஸ் சேவை

வடமராட்சி, ஜூலை 19

பருத்தித்துறையிலிருந்து அம்பனுக்கு தனியார் மினிபஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மந்திகை ஊடாக இச்சேவை தினமும் இடம்பெற்று வருகிறது. இதனால் இப்பகுதி பொதுமக்களின் நீண்ட காலப் போக்குவரத்து நெருக்கடி ஓரளவு தீர்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (எ-236)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (எ-207)

## சிறுமி காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

இரு வாகனங்களுக்கு இடையில் மோட்டார் சைக்கிள் சென்றதில் அதில் அமர்ந்திருந்த சிறுமியின் காலினை வாகனத்தின் சில்லு நசித்தது.

இச் சம்பவம் நாவற்குழியில் இடம்பெற்றது. இதன்போது காலில் காயமடைந்த எஸ். தனுஷா (வயது 10) என்னும் சிறுமி சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வீதியின் இரு பக்கமும் வாகனங்கள் வந்த போது அவற்றினை முந்திச் செல்வதற்காக மோட்டார் சைக்கிள் இரு வாகனங்களும் இடையில் செல்ல முற்பட்ட வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-207)

## அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

சட்ட விரோதமாக கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு சாவகச்சேரியில் நீதிமன்றில் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது-

இப் பெண் குற்றத்தை ஒப்புக்கொண்டார். ஏற்கனவே இந்தப்பெண் நீதிமன்றில் இவ்வாறானதொரு வழக்கில் 60ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தியதாகப் பொலிஸார் நீதிவானின் கவனத்திற்குச் சுட்டிக்காட்டினர்.

எனவே குறித்த பெண்ணுக்கு 65 ஆயிரம் ரூபா அபராதம்வித்து, அபராதத் தொகை செலுத்தத்தவறின் எட்டு மாதச் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (எ-207)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11 வகுப்புகளுக்கு விவசாயப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இருநாள் செயலமர்வு எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இச்செயலமர்வு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் எதிர்வரும் 24,25 ஆகிய திகதிகளில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

## அதிபர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய அதிபராக.க.சண்முகதாஸ் கடந்த ஏழாம் திகதி பொறுப்பேற்றுள்ளார்.

இந்த வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய நா.அருட்சோதி கைதடி- நுணாவில் அ.த.க. பாடசாலைக்கு அதிபர் சேவை தரம்I இற்குபதவியுயர்வு பெற்றுச்சென்றதையடுத்து நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையில் கடமையாற்றிய அ.சண்முகதாஸ் இந்த வித்தியாலயத்தின் புதிய அதிபராகக் கல்வியமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் உப அதிபராக கடமையாற்றிய இவர் [illegible] பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-207)

## மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்



அகவை அறுபதை நிறைவு செய்து இன்று (19.07.2010) திங்கட்கிழமை மணிவிழாவைக் கொண்டாடும் எமது கோட்டக்கல்வி அலுவலர்
**உயர்திரு.சின்னத்தம்பி சித்திரவடிவேல்**
அவர்கள் சீரும் சிறப்பும்பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

மனமகிழ்வுடன் வாழ்த்தும்:
அதிபர் சங்கம்,
கோப்பாய் கல்விக் கோட்டம்.

(100664)

## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 558
திகதி 2010/07/17

சுப்பர் இலக்கம் **07** வெற்றியீட்ட இலக்கங்கள் **02 15 17 52**

| [illegible] | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | ரூ. 27,374,740.80 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 | — |
| இரண்டாம் பரிசு | [illegible] | ரூ. 50,000.00 | 10 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 | 222 |
| நான்காம் பரிசு | [illegible] | ரூ. 1,000.00 | 427 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 | 10,940 |
| ஆறாம் பரிசு | [illegible] | ரூ. 40.00 | 6,315 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 | 157,452 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 | 25,186 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ.6,370,360.00

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 27,948,600.00

தேசிய லொத்தர் சபை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/குடமியன் அ.த.க.பாடசாலையில் முதல் தடவையாக மாணவன்
**செல்வன் பாலதேவா கேசவன்**
வடமாகாண மெய்வன்மைப் போட்டியில் 75 மீற்றர் ஓட்டத்தில் மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டார். இவரை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

யா/குடமியன் அ.த.க. பாடசாலை, வரணி பாடசாலைச் சமூகம்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2139 திகதி 17-07-2010

ஆங்கில எழுத்திற்கும் **T**

வெற்றி எண்கள் **29 39 49 70** போனஸ் இல: **02**

ஜக்பொட் பரிசு ரூ. 13,878,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 179778 | 20/- | 3,595,560/- |
| 2 இல | 12899 | 100/- | 1,289,900/- |
| 3 இல | 273 | 1,000/- | 273,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7162 | 40/- | 286,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 450 | 1,000/- | 450,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,878,900/- | - |
| 1 இல + போனஸ் இல | 8555 | 100/- | 855,500/- |
| 2 இல + போனஸ் இல | 408 | 500/- | 204,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 347 | 200/- | 69,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 10 | 1,500/- | 15,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,558,840/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 209909 | | 9,158,840/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 302120031-9-07 |
| பொலன்னறுவை | 302118177-2-39 |
| கேகாலை | 302119376-7-23 |
| புத்தளம் | 302115226-9-16 |
| அநுராதபுரம் | 302119977-5-06 |
| பதுளை | 302119514-0-04 |
| மொனராகலை | 302116056-2-08 |
| குருநாகல் | 302114525-6-49 |
| காலி | 302121953-9-49 |
| நுவரேலியா | 302116689-4-26 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 14,368,975/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனக்ஷனின் அதிரடிச் சதம்; துவாரகனின் துல்லியமான பந்து வீச்சு விக்ரோறியாவை 188 ஓட்டங்களால் வென்றது ஸ்கந்தா



சிவராம் | துவாரகன் | ஜனக்சன்

யாழ்ப்பாணம்,ஜூலை19

பாடசாலைத் துடுப்பாட்ட சங்கத்தினால் அகில இலங்கைப் பாடசாலைகளிடையே நடத்தப்படும் 15 வயதிற் குட்பட்ட அணியினருக் கிடையேயான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூ ரியை 188 ஓட்டங்கள் என்ற மிகப் பெரும் ஓட்ட வித்தியாசத் தில் வெற்றி கொண்டது சுன் னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் முதலிலே துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக் களை இழந்து 260 ஓட்டங்களைக் குவித்தனர். ஸ்கந்தா அணியின் துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் ஜெனக்ஷன் 102 பந்துகளை மட்டும் எதிர்கொண்டு 1 சிக்சர், 15 பவுண்டரிகளுடன் அதிரடியாக ஆடி 121 ஓட்டங்களைப் பெற்றார். விதுஷன் , சுவிற்றன், துவாரகன் ஆகியோர் முறையே 28,20,19,14 ஓட்டங்களைப் பெற்றனர்.

விக்ரோறியாக் கல்லூரி சார்பில் அணித்தலைவர் சிவராம் 8 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார். சிவசங்கர் 2 விக்கெட்டுக்களையும் ஐங்கரன், ஜெயராம், பிரசாந் ஆகி யோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 261 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியினர் ஸ்கந்தா அணியின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 23 ஓவர்கள் நிறைவில் 72 ஓட்டங்களை மட்டுமே பெற்று 188 ஓட்டங்களால் தோல்வி அடைந்தனர். இந்த அணியின் துடுப்பாட்டத்தில் ஜெயராம் 17 ஓட்டங் களைப் பெற்றார்.

ஸ்கந்தா அணியின் சுழல் பந்து வீச்சாளர் துவாரகன் 4 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 8 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இவர் இம்முறை கலந்து கொண்ட நான்கு போட்டிகளில் மொத்தமாக 17 விக்கெட்டுக்களைச் சாய்த்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஜனக்சன் 2 விக்கெட்டுக்களையும் நிறோஸ், கிரிசாந் ,சுவிற்றன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த் தினர்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக் கிடையிலான 15 வயதுக் குட்பட்ட அணியினருக் கிடை யேயான போட்டிகளில் B பிரிவில் மகா ஜனக் கல்லூரி பங்கு பற் றிய 4 போட்டிகளிலுமே வெற்றியீட்டி முதலிடத் தையும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மகாஜன அணியுடனான போட்டி தவிர்ந்த ஏனைய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்று அடுத்த சுற்றுப் போட்டிகளுக் குத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக் கதாகும். (எ-55)

## உபகரணங்களைச் சேதமாக்குவதைத் தடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை19

தென்னிலங்கையில் இருந்து வந்து துரையப்பா விளையாட்டரங்கில் தங்கிச் செல்லும் சுற்றுலாப் பயணிகளால் விளையாட்டு உபகரணங்கள் சேதமாக்கப் படுவதாக அலு வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இரவு வேளைகளில் தங்கும் இவர்கள் உயரம் பாய்தலின் போது பயன்படுத் தப்படும் மெத்தைகளை மாடிப்படிகளால் இழுத்துச் சென்று அவற்றை படுக்கைகளாகப் பயன் படுத்தவதால் இவை சேதமடைவதாகத் தெரி விக்கப்பட்டது.

இந்த மெத்தை யாழ். மாவட்ட வீரர்களுக்காக ஒன்று மட்டுமே உள்ளது. எனவே இத னைப் பாதுகாக்க உரிய அதிகாரிகள் உதவ வேண்டும் என்றும் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. (6-23-86)

# பந்துவீச்சில் ஜொலித்தார் சன்சயன்; 'த்ரில்' வெற்றியீட்டியது சென்.ஜோன்ஸ்



யாழ்ப்பாணம், ஜூலை19

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதிற் குட்ப ட்டோருக் குக் கான சுற்றுப் போட்டி ஆட் டம் ஒன்றில் சன்சயினின் துல்லிய மான பந்து வீச்சால் சென். ஜோன்ஸ் கல்லூரி "ஏ" அணி ஸ்கந்தவரோதயா அணியை 3 ஓட்டங்களினால் வெற்றி கொண்டது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி "ஏ" அணி 22 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங் களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சன்சயன், றஜிந்தன், வில்சன் ஆகியோர் முறையே 19,16,11 ஓட்டங்களை பெற்றனர். ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பாக பந்து வீச்சில் சிந்துஜன் 4 விக்கெட்டுக்களையும், சஞ்ஜெயன் 4 விக்கெட்டுக்களையும் பதுஷன் 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

86 ஓட்டகளை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடிய ஸ்கந்தவரோயா அணி சன்சயன், வில்சன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 27.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களை பெற்று 3 ஓட்டங்களால் தோற்றது. துடுப்பாட்டத்தில் றொபேட் 23 ஓட்டங்களையும் சஞ்ஜெயன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாகச் சிறப்பாக பந்து வீசிய சன்சயன் 8 ஓவர் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர் உட்பட 22 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் வில்சன் 3 விக்கெட்டுக்களையும் ரஜிந்தன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். (எ-23)

# பார்த்தீபன் ஆக்ரோஷத் துடுப்பாட்டம்: 8 விக்கெட்டுக்களால் யாழ். இந்து வெற்றி

வலி.வடக்கு ,ஜூலை19

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாட்சாலைகள் கிரிக்கெட் சங் கம் யாழ்ப்பாணப் பாடசாலை அணி களுக்கு இடையே நடத்தும் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 8 விக்கெட்டுக்களினால் பெரு வெற்றி யீட்டியது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 24 ஓவர்கள் நிறைவில் 116ஓட்டங்களைப்பெற்றுஅனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் சகஜ 24 ஓட்டங்களையும் தீசன், குமணன் ஆகியோர் தலா 15 ஓட்டங் களையும் ஜெனிபர் 10 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரியாக 34 ஓட்டங் களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜஸ்மினன் 6 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக் களையும் நிலோஜனன் 8 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவருடன் 20 ஓட்டங்களுக்கு 3விக்கெட்டுக்களையும் சிலேந்திரன், சங்கீதன், பார்த்தீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

117 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 22.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

பார்த்தீபன் பன்னிரண்டு பௌண்டறிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 68 ஓட்டங்களையும் விதுஷன் 26 ஓட்டங் களையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த விதுசன் 07 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்கள். (எ-86)




# தியாகிகள் தின உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி சென்.மேரிஸ், பாடும் மீன் அணிகள் வெற்றி!

யாழ்ப்பாணம்,ஜூலை19

தியாகிகள் தினத்தையொட்டி நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்று போட்டியின் ஆட்டங்களில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி, நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி களமிறங் கியது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண் டது.

தொடர்ந்து அதே மைதானத்தில் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (எ-23)




வடமாகாண கல்வித் திணைக்களம் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 19 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாவது இடத்தினைப் பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி, இரண்டாம் இடத்தைப் பெற்ற இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி, மூன்றாமிடத்தை பெற்ற மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரிகளின் தலைவர்கள் வலிகாமம் கல்வி வலயக் கணக்காளர் கே. கமலரூபனிடம் இருந்து வெற்றிக் கிண்ணங்களைப் பெறுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள் : தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி விருதினைப் பெறும் யாழ்.தொழில் முயற்சியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

கிராமியக் கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சின் வழிப்படுத்தலின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபை '' தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தகச் சந்தை ஷில்ப 2010'' எனும் நிகழ்வை எதிர்வரும் 22 முதல் 25 ஆம் திகதி வரை சிறிமாவோ பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தவுள்ளது. இத்தேசிய கண்காட்சியில் ஜனாதிபதி விருதுகளுக்காக மாவட்ட, மாகாண மட்டங்களில் தொழில் முயற்சியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 14 தொழில் முயற்சியாளர்களின் விவரம் வருமாறு:

✱சோமசேகரம் ககனானந்தா (இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள் - மைக்ரோ பிசி சிஸ்ரம்)

✱வேலுப்பிள்ளை செந்தில்நாதன் (இயந்திரங்கள் மற்றும் இயந்திரப் பகுதிகள் - செல்கோ இஞ்சினியரிங் வேர்க் சொப்)

✱சுப்பர் பொன்னையா நடராஜா (உணவு மற்றும் பானங்கள்- அண்ணா, இண்டஸ்ரீட்)

✱கணேசன் கௌதமன் ( பாதணி தோல் மற்றும் ஒத்த உற்பத்திகள்- கௌரீ சூஸ்)

✱தோமஸ் கிறிஸ்ரீன் செல்வராஜன் (இலகு பொறியியல் மற்றும் பொறியியல் கைத்தொழில் - நியூட்டா இண்டஸ்றீஸ் )

✱சின்னப்பன் குருநாதன் ( தும்பு மற்றும் நார் அடிப்படையான உற்பத்தி - ஒமேகா மல்ரி புறொடக்ட் இண்டஸ்றீஸ்)

✱ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ் (மரம் மற்றும் மரம் அடிப்படையிலான உற்பத்தி- ஆறுமுகம் சிற்பாலயம்).

✱சிவஞானசுந்தரம் ராஜ்குமார்(அச்சிடும் கடதாசி மற்றும் கடதாசி கூழ் அடிப்படையிலான உற்பத்திகள் - கரிகணண் பிறிண்டேர்ஸ்),

✱சுப்பிரமணியம் ஆச்சாரி பாஸ்கரன் ஆச்சாரி(கனிப்பொருள்கள் மற்றும் இரசாயனப்பொருள்கள் அடிப்படையிலான உற்பத்திகள் -பாஸ்கரன் சிற்பாலயம்).

✱சண்முகம் யோகேந்திரன் (இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் அடிப்படையிலான உற்பத்தி -யெஸ் பிளாஸ்ரிக் அண்ட் ரிம்பர் போர்ட் மனுபக்டரி லிமிடெட்).

✱ஆறுமுகநாதன் ஜனார்த்தனன் (கட்டடம் மற்றும் கட்டடப்பொருள் சம்பந்தமான உற்பத்தி- ஜனா சிவில் இஞ்சினியரிங் கொன்சல்டன்).

✱திருமதி வாமதேவன் சோமேஸ்வரி (தைத்த ஆடைகள் மற்றும் மொத்த உற்பத்தி -சிற்றி கனன் காமன்ஸ்).

✱வேலுப்பிள்ளை சிறீஸ்கந்தராஜா (வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகள் - ஈ.யூ.ரி எக்கியூப் யுனிற் ட்ரஸ்ட்).

✱ஜெக்கப் யோகராஜா (சுயதொழில்- பவுன்றி வேக்ஸ்). (எ-310,311,312)

# பெறுபேறு வெளிவரத் தாமதம்; பரீட்சார்த்திகளுக்கு தண்டப்பணம்

யாழ்.மோட்டார்போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரத்துக்காக நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் காலதாமதமாகவே வெளியிடப்படுவதாக பரீட்சைக்குத் தோற்றியோர் கவலை தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாகப் போக்குவரத்துப் பொலிஸாரின் இறுக்கமான நடவடிக்கைகளை அடுத்து பெருமளவானோர் சாரதி அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பித்து இருந்தனர். எனினும் இவ்வாறு விண்ணப்பித்து ஒன்றரை மாதங்களின் பின்பே பரீட்சைக்கான திகதி இவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அதன்பின் பரீட்சை எழுதி ஒரு மாதத்துக்கு மேலாகியும் பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை எனவும், பரீட்சார்த்திகளால் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தாம் ஒவ்வொரு நாளும் மோட்டார் வாகனப் பகுதிக்குச் சென்று பெறுபேறு வெளிவந்துவிட்டதா? என்று பார்க்கும் நிலைக்கு உள்ளாகியுள்ளதாகவும் பரீட்சார்த்திகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பரீட்சைப் பெறுபேறு வெளியிடத் தாமதமாவதால் குறித்த சாரதிகள் பொலிஸாரிடம் அகப்படும் ஒவ்வொரு தடவையும் தண்டப் பணம் செலுத்தும் நிலைக்கும் ஆளாவதாகக் கூறப்படுகின்றது.

முன்னைய காலங்களில் பரீட்சை எழுதிய அன்று பிற்பகலிலேயே அதன் பெறுபேறு வெளியிடப்பட்டு வந்ததாகவும் தற்போது மாதக் கணக்கின்பின் பெறுபேறுகள் வெளியிடப்படும் விந்தை நிகழ்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த விடயத்தில் உரியவர்கள் உடனடிக் கவனமெடுத்து பொதுமக்களின் நலன்கருதி பரீட்சைப் பெறுபேறுகளை விரைவில் வெளியிட ஆவன செய்ய வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-288)

# வெங்காயம் அடி அழுகல் நோயால் விவசாயிகளுக்குப் பாதிப்பு

பண்டத்தரிப்பு, ஜூலை 19

சில்லாலை, மாதகல், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு ஆகிய கிராமங்களில் இம்முறை விவசாயிகள் அதிக அளவில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளார்கள். எனினும் இந்தக் கிராமங்கள் யாவற்றிலும் வெங்காய அடி அழுகல் நோய் ஏற்பட்டிருப்பதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வலி.தென்மேற்கு விவசாயப் போதனாசிரியர் திருமதி ப.மணிவண்ணன் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள மாதகல் விவசாயிகளைச் சந்தித்து உரிய கிருமிநாசினிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளார்.

நோயினால் பாதிக்கப்பட்ட வெங்காயப் பயிர்களை மேலதிக பரிசோதனைக் காக்வும் எடுத்துச்சென்றுள்ளார்.

இதேவேளை - சின்ன வெங்காயம் வேதாள வெங்காயம் என்பவற்றின் விலை 'தம்புள்ள' சந்தையில் அதிகரித்துள்ளமையால் வெங்காயத்தைத் தற்போது அறுவடை செய்யும் விவசாயிகள் வியாபாரிகளுக்கு நல்ல விலைக்கு விற்பனை செய்வதையும் காணமுடிகின்றது. (எ-130)

# கொழும்புத்துறையில் திருடர்கள் நடமாட்டம்!

யாழ்ப்பாணம்,ஜூலை 19

கொழும்புத்துறை மேற்குப் பகுதியில் திருடர்களின் கைவரிசை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த வாரம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் இரவு வேளையில் தமது கைவரிசையைத் திருடர்கள் காட்ட முயன்றனர். எனினும் வீட்டிலுள்ளோர் திடீரென விழித்துக் கொண்டு கூக்குரல் போட்டதும் அவர்கள் கால்பிடரியில் அடிபட ஓடிச்சென்று விட்டனர்.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் கொழும்புத்துறைமேற்கு பகுதியில் அண்மைக் காலமாகத் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

அதேசமயம் இப்பகுதியில் மக்கள் குடியிருக்காத வெற்றுக் காணிகளில் உள்ள தென்னை மரங்களில் இருக்கும் தேங்காய்களையும் திருடர்கள் பட்டப்பகலில் பிடுங்கிச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-224)


## யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
## மணிவிழா வாழ்த்து



திரு பாலு திலகராசா அவர்கள்
SLTS 1 , JP
உப அதிபர்
யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

19.07.2010 இன்று அறுபதாவது அகவையை கொண்டாடும்
மணிவிழா நாயகன் திரு பாலு திலகராசா அவர்கள்
எமது பாடசாலையில் ஆற்றிய பணிகள் அனைத்தையும்
பாராட்டுவதோடு அவர்கள் ஓய்வு காலத்தில்
சுக பலத்துடன் வாழ்ந்து தனது குடும்பத்திற்கும்
கல்விச் சமூகத்திற்கும் ஒளி விளக்காகத் திகழ
இன்றைய நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்
மாணவர்கள்
யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்


## மஹஜன சம்பத / Mahajana Sampatha 16.07.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2266

வெற்றி எழுத்து: A
வெற்றி எண்கள்: 4 9 9 5 5 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A | 4 | 9 | 9 | 5 | 5 | 2 | ரூபா 13,103,046/= | |
| 1 பரிசு | | 4 | 9 | 9 | 5 | 5 | 2 | ரூபா 2,000,000/= | 01 |
| 2 பரிசு | | | 9 | 9 | 5 | 5 | 2 | ரூபா 100,000/= | 15 |
| 3 பரிசு | | | | 9 | 5 | 5 | 2 | ரூபா 10,000/= | 131 |
| 4 பரிசு | | | | | 5 | 5 | 2 | ரூபா 1,000/= | 1294 |
| 5 பரிசு | | | | | | 5 | 2 | ரூபா 100/= | 12933 |
| 6 பரிசு | | | | | | | 2 | ரூபா 20/= | 128385 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | 4 | 9 | 9 | 5 | 5 | | ரூபா 10,000/= | 13 |
| 8 பரிசு | | 4 | 9 | 9 | 5 | | | ரூபா 1,000/= | 133 |
| 9 பரிசு | | 4 | 9 | 9 | | | | ரூபா 100/= | 1316 |
| 10 பரிசு | | 4 | 9 | | | | | ரூபா 50/= | 12843 |
| 11 பரிசு | A | | | | | | | ரூபா 20/= | 51321 |

Rs. 12,038,420.00

தேசிய லொத்தர் சபை

## நீங்காத நினைவலைகள்

5 ஆம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு





அமரர் சின்னையா வயிரமுத்து
திருமதி வயிரமுத்து தங்கம்மா

| | | |
|---|---|---|
| 05.05.1930 | தோற்றம் | 16.07.1935 |
| 29.07.2005 | மறைவு | 23.07.2007 |
| நவமி | திதி | நவமி |

பாசத்தின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
எமையெல்லாம் பெற்றெடுத்து அரவணைத்துப்
பெருமை தேடித்தந்த எமது முன்னறித் தெய்வங்களின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
மாவை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
தற்காலிக முகவரி:
அப்பையா வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

V.ரவிச்சந்திரன்
(மகன்).
(101143)

## மரண அறிவித்தல்

### திருமதி கணேஸ் விமலாதேவி



கே.கே.எஸ் வீதி, தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும் கனகசபை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணேஸ் விமலாதேவி நேற்று (18.07.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற கணேஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடேசு - யோகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் ரேவதி, மோகனராணி, சந்தானலட்சுமி, பற்குணராசா, பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌசலியா, விமலராஜ், கமலராஜ், கௌசியா ஆகியோரின் அன்புத் தாயும் சத்தியலிங்கம், ரதிகா, அமுதினிதேவி ஆகியோரின் அன்பு மாமியும் கஜானன், கரிஷாந், ஆருசன், அஸ்வினி, அம்சிகன், அபிநயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.07.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*20, கனகசபை லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 0777805368* (101162)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வளத்தைப் பக்குவப்படுத்தாவிடில் இந்தியா தனது முகவரியை இழக்கும்

## எச்சரிக்கிறார் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம்

பொள்ளாச்சி, ஜூலை 19

இந்தியாவில் மனித வளத்தை நாம் பதப்படுத்தி பக்குவப்படுத்தாவிட்டால், இந்தியா தனது முகவரியை இழந்து நிற்கும் நிலை ஏற்படும்,'' என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கூறினார்.

பொள்ளாச்சி புளியம்பட்டியில் உள்ள பி.ஏ., பொறியியல் கல்லூரி விழாவில் அப்துல்கலாம் பேசியவை வருமாறு:-

இந்திய பொருளாதாரம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. நாட்டின் வளர்ச்சி விகிதம் ஒன்பது சதவீதமாக தொடர்ந்து இருந்து வருகிறது. நாம் 10 சதவீதத்தை எட்டி, அதை 10 ஆண்டுகளுக்கு தொடர்ந்தால், நாம் வளர்ந்த இந்தியாவை 2020 ஆம் ஆண்டுக்குள் காண முடியும். இந்தியாவின் மொத்த உற்பத்தித்திறன் ஒரு பில்லியன் டொலர் என்ற இலக்கை எட்டி விட்டது. எமது அந்நியச் செலாவணி கையிருப்பு ஏறக்குறைய 300 பில்லியன் இலக்கை தாண்டியுள்ளது. மற்ற நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு அன்னிய முதலீடுகள் குவிகின்றன. இந்தியாவில் வேலைக்கேற்ற தகுதி வாய்ந்த திறமையான மனித வளம் கிடைப்பது அரிதாக உள்ளது. இதன் காரணமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தை சமநிலைப் படுத்தி, அதே நிலையில் மேம்படுத்திக் கொண்டு செல்லக்கூடிய அச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஓர் எண்ணெய் தூர் வாரும் தனியார் நிறுவனத்தின் பணிகளுக்கு இந்தியாவிலேயே அதற்குரிய மனித வளம் கிடைக்கவில்லை என்பதால், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் சூழ்நிலை உருவாகியுள்ளது.



இந்தியாவில் மனித வளத்தை நாம் பதப்படுத்தி பக்குவப்படுத்தாவிட்டால், இந்தியா தனது முகவரியை இழந்து நிற்கும் நிலை ஏற்படும். இந்தியாவினுடைய வேலை வாய்ப்பு திறன் கொண்ட மொத்த மனித வளம் 45 கோடி. அதில் வரன்முறை படுத்தப்பட்ட மனிதவளம் 8 முதல் 10 சதவீதம் மட்டுமே. மீதமுள்ள 90 சதவீதம் வரன் முறைபடுத்தப்படாத துறைகளிலிருந்து வருகிறது. இதில், விவசாயிகள், கட்டட தொழிலாளர்கள், தினக்கூலிகள், வீட்டு வேலையாள்கள் மற்றும் சுய தொழில் செய்யும் நபர்களும் உள்ளனர். பெரும் பாலானவர்கள் கிராமப்புறத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.இந்திய பொருளாதாரம் ஆண்டுக்கு 10 சதவீதம் என்று வளர வேண்டும் என்றால், விவசாயம் ஆண்டுக்கு நான்கு சதவீத வளர்ச்சியையும், உற்பத்தி மற்றும் சேவை துறைகள் 11 சதவீதம் வளர்ச்சி அடைந்தால் மட்டுமே சாத்தியம்.

விவசாயத் துறையில் குறைந்த வருவாயில் ஈடுபட்டுள்ள மனித வளம், மற்ற துறைகளுக்கு செல்லக் கூடிய வாய்ப்புகள் அதிகம். அதே சமயம் அவர்களுக்கு தேவையான பயிற்சியும், தேவையான திறமையும் இல்லையென்றால், அவர்களால் எந்தத் துறையிலும் நுழைய முடியாது. இங்கு தான் சவால் ஆரம்பிக்கிறது. இதை சரி செய்வதற்கு அரசு, தனியார் துறைகள், தொழில் துறை, கல்வித்துறை, பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள், சமூக ஆர்வலர்கள் என அனைத்து தரப்பினரும் இணைந்து இதற்கு தீர்வு காண வேண்டும்.

- இவ்வாறு அப்துல் கலாம் கூறினார்.



தெலுங்கு தேச தலைவர் சந்திரபாபு நாயுடு கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஆந்திர மாநிலம் தலைமைச் செயலகத்தை முற்றுகையிட முயன்ற கட்சித் தொண்டர்களை பொலிஸார் கைது செய்தனர்.

# ஜார்க்கண்டில் 5 பொலிஸார் பலி

புது டில்லி, ஜூலை 19

ஜார்க்கண்டின் லதேர் என்ற இடத்தில், ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது நக்சலைட்கள் நடத்திய கண்ணி வெடித் தாக்குதலில் ஐவர் பலியாகினர். பொலிஸார் சென்ற வாகனத்துக்கு முன்னால், லதேர் மாவட்ட எஸ்.பி., குல்தீப் திவேதி காரில் சென்று கொண்டிருந்தார். நக்சலைட்களின் தாக்குதலில் இவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

## இந்தியச் செய்திகள்

# கர்நாடகாவில் ஜனாதிபதி ஆட்சியை அமுலாக்க பிரதமர் மன்மோகன்சிங்கிடம் கோரிக்கை

பெங்களூர், ஜூலை 19

கர்நாடக மாநிலத்தில் பா.ஜனதா தலைமையிலான கூட்டணி ஆட்சியைக் கலைத்துவிட்டு, ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவர்கள் வலியுறுத்தினார்கள்.

கர்நாடக மாநில காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள், முக்கிய தலைவர்கள், மாநில தலைவர் ஆர்.வி.தேஷ்பாண்டே, சித்தராமையா ஆகியோர் தலைமையில் சனிக்கிழமை டில்லி சென்றனர்.

அங்கு அவர்கள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரைச் சந்தித்து கர்நாடக மாநில அரசியல் நிலைவரம் குறித்து விளக்கி கூறினார்கள்.

அப்போது, ''கர்நாடக மாநிலத்தில் பா. ஜனதா தலைமையிலான கூட்டணி ஆட்சியைக் கலைத்துவிட்டு, ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்த வேண்டும்'' என்று வலியுறுத்தினார்கள்.

பின்னர் இந்தச் சந்திப்பு குறித்து சித்தராமையா நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

எடியூரப்பா அமைச்சர் சபையிலுள்ள ரெட்டி சகோதரர்கள் விதிமுறைகளுக்கு மாறாக கர்நாடக மாநிலத்திலிருந்து இரும்புத் தாதுவை வெட்டி ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

கடந்த 2003ஆம் ஆண்டு முதல் இன்று வரை அவர்கள் இருபத்தொன்பதரை மில்லியன் மெட்ரிக்தொன் இரும்புத் தாதுவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர். குறிப்பாக எடியூரப்பா தலைமையிலான ஆட்சியில், கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 5 ஆயிரம் மெட்ரிக் தொன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இதுவரை அவர்களது ஏற்றுமதி காரணமாக, மாநில அரசுக்கு ரூ. 20 ஆயிரம் கோடி வரை வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் மொத்தம் 68 சுரங்கங்கள் உள்ளன. அவைகளில் 40 சுரங்கங்களின் உரிமையாளர்கள் ரெட்டி சகோதரர்களுக்கு நாள் ஒன்றுக்கு 10 கோடி முதல் 12 கோடி ரூபாய்வரை மாமூல் அளிக்கின்றனர். அவர்கள் அந்நிய செலாவணி, சுங்கவரி ஏய்ப்பு ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# விடுதலைக்கு குரல் கொடுக்குமாறு சீமானிடம் முருகன் வேண்டுகோள்

சென்னை, ஜூலை 19

ராஜீவ் காந்தி கொலை வழக்கு ஆயுள் கைதியான முருகன் தன்னை விடுதலை செய்ய குரல் கொடுக்க வேண்டும் என 'நாம் தமிழர்' அமைப்பின் தலைவர் சீமானிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஒரே சிறைச்சாலையில் உள்ள சீமானும் முருகனும் சந்தித்துப் பேசிய போதே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

சீமானை சந்தித்த முருகன், அரசியல் நிலைப்பாடு, வெளிநாடுகளில் கிடைக்கும் ஆதரவு போன்றவற்றை கேட்டு தெரிந்துகொண்டுள்ளார். கூடவே தங்களது விடுதலைக்காக குரல்கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதாக தெரிகிறது.

சீமான் முருகனின் வாழ்க்கை பற்றியும், குடும்பம் பற்றியும், இயக்கம் பற்றியும் விரிவாக பேசியுள்ளார் என தெரிகிறது. (1)

# மது அருந்திவிட்டு சக வீரர்கள் அறுவரை சுட்டுக்கொன்ற சிப்பாய்

## ஜார்க்கண்ட் மாநிலத்தில் சம்பவம்

ராஞ்சி ஜார்க்கண்டில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படை முகாமில் இருந்த ஹர்பீந்தர் என்ற வீரர், அளவுக்கு அதிகமாக மது குடித்து விட்டு, சக வீரர்களை நோக்கி துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டார். இதில், உதவி கமாண்டர் உட்பட ஆறு வீரர்கள் பரிதாபமாக பலியாகினர். இதன் பின், முகாமில் இருந்த மற்ற வீரர்கள் சுட்டதில், ஹர்பீந்தரும் பலியானார்.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் நக்சலைட் ஆதிக்கம் அதிகம் உள்ளது. இவர்களை ஒடுக்குவதற்கான பணிகளில் மத்திய ரிசர்வ் பொலிஸ்ப் படையைச் சேர்ந்த வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நக்சலைட் நடமாட்டம் அதிகம் உள்ள மாவட்டங்களில், ரிசர்வ் பொலிஸ் படையினரின் முகாம்கள் உள்ளன. சராய்கேலா மாவட்டத்திலும் ஒரு முகாம் உள்ளது. சம்பவ தினம் இரவு, இங்கிருந்த வீரர்கள் மது அருந்தினர். முகாமின் நுழைவாயிலில் காவல் இருக்கும் ஹர்பீந்தர் சிங் (196வது பட்டாலியன்) என்பவர், அளவுக்கு அதிகமாக மது குடித்து விட்டார். இதனால், சக வீரர்களுடன் வாய் தகராறில் ஈடுபட்டார். திடீரென ஆவேசமடைந்த ஹர்பீந்தர் சிங், தன்னிடம் இருந்த ஏ.கே.47 ரக துப்பாக்கியை எடுத்து, முகாமில் இருந்த சக வீரர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுடத் தொடங்கினார்.

இதை சற்றும் எதிர்பார்க்காத மற்ற வீரர்கள், அலறி அடித்துக்கொண்டு முகாமில் இருந்து ஓடினர். இருந்தாலும், முகாமில் இருந்த உதவி கமாண்டர் ஒருவர் உட்பட ஆறு பேர், இந்த சம்பவத்தில் பலியாகினர். குடிபோதை உச்சத்துக்கு ஏறியதால், ஆத்திரம் அடங்காத ஹர்பீந்தர் சிங், தொடர்ந்து துப்பாக்கியால் சுட்டவாறு இருந்தார். வேறு வழியில்லாமல், முகாமில் இருந்த மற்ற வீரர்கள் ஹர்பீந்தரை சுட்டுக் கொன்றனர். உடனடியாக சம்பவ இடத்துக்கு உயரதிகாரிகள் வந்து விசாரணை நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சில வீரர்களை மருத்துவமனையில் சேர்த்தனர். இதுகுறித்து விரிவான விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# சிறைச்சாலையில் முதல் வகுப்பு அறை வழங்கக் கோரி சீமான் மனு

சென்னை, ஜூலை 19

பல ஆண்டுகளாக பயன்படுத்தாமல் இருந்த பாழ் அடைந்த தனி அறையில் தன்னைச் சிறை அதிகாரிகள் அடைத்து வைத்துள்ளனர். இது சட்ட விரோதமான செயல். எனவே எனக்கு முதல்வகுப்பு அறை ஒதுக்க உத்தரவிட வேண்டும்.

சென்னை உயர் நீதிமன்றத்திடம் நாம் தமிழர் அமைப்பின் தலைவர் சீமான் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய வேளை கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள சீமான் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் தனிமைச் சிறையை மாற்ற வேண்டும் என்றும் உத்தரவிட வேண்டு என அவர் மனுவில் கோரியுள்ளார்.

நீதிபதிகள் நாகப்பன், கிருபாகரன் முன்பு இம்மனு விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் கூடுதல் அரசு வக்கீல் ஆஜராகி, சீமான் தனிமை சிறையில் அடைக்கப்படவில்லை என்று கூறினார்.

இதைக்கேட்ட நீதிபதிகள், அரசு இது குறித்த பதிலை வரும் செவ்வாய்க்கிழமைக்குள் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். (1)

# இந்திய அமைதிப்படை மேஜர் கொங்கோவில் தற்கொலை முயற்சி

புதுடில்லி, ஜூலை 19

கொங்கோவில் ஐக்கிய நாடுகள் சபை சார்பில் அமைதிகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள இந்தியத் தரைப்படைத் தளபதி மேஜர் ஆர்.எஸ். கும்மான் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார்.

சுயநினைவின்றிக் கிடந்த அவரைப் பிற இராணுவச் சிப்பாய்கள் பார்த்து உரிய நேரத்தில் சிகிச்சைக்குக் கொண்டு சேர்த்தனர்.

கடந்த 6ஆம் திகதி கொங்கோவின் ஹோட்டல் ஒன்றில் விலை மாதர்களுடன்·இருந்தார் எனக் கூறப்படும் சம்பவம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக்குழு அவரை விசாரணைக்குட்படுத்தியது. இதனால், அவமானம் தாளாமல் அவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிகிச்சைக்குப் பின்னர் அவரிடம் மீண்டும் விசாரணை தொடங்கிவிட்டது என டில்லியில் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடானில் போராட்டக்குழு - இராணுவம் மோதல்: நூற்றுக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் உயிரிழப்பு!

கார்ட்டூம், ஜூலை 19

சூடானிலுள்ள போராட்டக் குழுவினருக்கும், இராணுவத்துக்குமிடையில் மூண்ட மோதலில் நூற்றுக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். இதேபோல நூறுபேர் உயிருடன் சிறை பிடிக்கப்பட்டனர் என அரசு தெரிவித்துள்ளது.

இத்தகவலை மேற்குப் பிராந்திய இராணுவத் தலைவர் ஜெனரல் அல்-தயீப் அல்-முஸ்பா உஸ்மான் தெரிவித்தார். இராணுவத்தினர் 300இற்கும் அதிகமான கிளர்ச்சியாளர்களைக் கொன்றிருக்கலாம் என்றும் நூற்றுக்குக்கும் அதிகமானோர் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். போராளிகளின் வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக இராணுவத்துக்கும் போராட்டக் குழுவினருக்குமிடையே சண்டை நிகழ்ந்து வருகிறது. இதில் வெள்ளிக்கிழமை நடந்த மோதலில் 75 இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

நீதி மற்றும் அனைவரும் சமம் என்ற அமைப்பு டாபூரில் போராட் டக் குழுவாக உருவெடுத்து அரசுக்கு எதிரா கப் போராடி வருகிறது.

அரசுக்கு எதிராகப் போராடி வந்தபோதிலும் தங்கள் தரப்பில் உயிரிழப்பு ஏற்படவில்லை என அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

மிகவும் பரந்து விரிந்துள்ள வடக்குப் பிராந்தியத்தில் பாலைவனத்தைச் சுற்றியுள்ள மக்களின் நலனில் அரசு அக்கறை செலுத்தவில்லை என்று கூறி 2003ஆவது ஆண்டில் இக்குழுவினர் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதுவரை இராணுவத்துக்கும் போராட்டக் குழுவுக்குமிடையில் நடந்த மோதலில் 3 இலட்சம் பேர் உயிரிழந்திருப்பர் எனத் தகவல் தெரிவிக்கிறது.

வன்முறையாலும், கொடிய நோய்களாலும் சிக்கி பலர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. மேலும் பலர் இடம்பெயர்தலால் உயிரிழந்துள்ளனர் என அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசுக்கும் ஜேஇஎம் அமைப்புக்குமிடையில் நடந்த பேச்சுகள் தோல்வியில் முடிந்தன.

இதையடுத்து போராட்டக் குழுவினர் மீது தாக்குதல் நடத்தவும், குழுவினரைக் கைதுசெய்யவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது போர் நிறுத்த ஒப்பந்தத்தை அரசு செய்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட இப்பகுதியில் அமைதி திரும்பும் என பலரும் எதிர்பார்க்கின்றனர். ஏற்கனவே 26 இலட்சம் பேர் உள்நாட்டுப் போர் காரணமாக வேறிடங்களுக்குப் புலம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிரேக்கத் தீவுகளில் நிலநடுக்கம்

ஏதென்ஸ், ஜூலை 19

கிரேக்கத் தீவுப் பகுதிகளில் இரண்டு முறை மிதமான நில நடுக்கங்கள் ஏற்பட்டன. ரிச்டர் அளவுகோலில் 5.1 புள்ளிகளாகப் பதிவான முதல் நிலநடுக்கத்தால் உயிரிழப்போ, பொருள்சேதமோ ஏற்பட்டதாக உடனடித் தகவல் ஏதும் இல்லை.

ஏஜியான்கடல் பகுதியிலுள்ள கோஸ் தீவில் வெள்ளிக்கிழமை உள்ளூர் நேரப்படி காலை 11 மணியளவில் முதல் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதையடுத்து அலோனிசோஸ் தீவில் இரவு 9.45 மணியளவில் மற்றொரு நிலநடுக்க ம் ஏற்பட்டது. கிரேக்கத்தில் 6 ஆயிரத்துக்கும் அதிகமான தீவுகள் உள்ளன. இவற்றில் 250இற்கும் குறைவான தீவுகளில்தான் மக்கள் வசித்து வருகின்றனர்.

## உல்பா தலைவர் சவுத்ரி பங்களாதேஷில் கைது!

அசாம் உல்பா இயக்கத் தலைவர் ரஞ்ஜன் சவுத்ரி, சனிக்கிழமை பங்களாதேஷில் கைதுசெய்யப்பட்டார். அவருடன் பங்களா தேஷ் கூட்டாளி ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.

அசாம், துப்ரி மாவட்டத்திலுள்ள கவுரிபூரை சேர்ந்தவர் ரஞ்ஜன் சவுத்ரி. இவர், 1988 ஆம் ஆண்டு உல்பா பயங்கரவாத இயக்கத்தில் இணைந்தார். ஆயுதப் பயிற்சி பெற்ற இவர், 1995ஆம் ஆண்டு துப்ரி மாவட்டத்தின் உல்பா இயக்கப் பொதுச் செயலராக நியமிக்கப்பட்டார். அசாமில் நடந்த பல்வேறு நாச வேலைகளில் இவருக்குத் தொடர்பு இருந்ததால், அசாம் பொலிஸாரால் தேடப்பட்டார். இந்நிலையில், பங்களாதேஷில் பதுங்கியிருந்த ரஞ்ஜனை அதிரடிப்படைப் பொலிஸார் சனிக்கிழமை கைதுசெய்தனர்.

அவருடைய நெருங்கிய கூட்டாளியான பங்களாதேஷ் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த பிரதிப் மராக்கும் கைதுசெய்யப்பட்டார்.

# சுமுகத் தீர்வையே எதிர்பார்க்கின்றோம் பாக். வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

## முன்னேற்றம் ஏற்படாததற்கு அமைச்சர் கிருஸ்ணா காரணமாம்

இஸ்லாமாபாத், ஜூலை 19

இந்தியாவுடன் பேச்சு நடத்தி சுமுக தீர்வு காணவே விரும்புகிறோம் என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி குறிப்பிட்டுள்ளார்.

மும்பைத் தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னர் முதல் முறையாக பாகிஸ்தானுக்கு இந்திய மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா சென்றார். அங்கு ஜனாதி பதி, பிரதமர் உள்ளிட்ட அரசியல் தலைவர் களைச் சந்தித்துப் பேசினார்.

இரு நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துவது குறித்து பாகிஸ்தான் வெளி யுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷியுடன் நாள் முழுவதும் பேச்சு நடத்தப்பட் டது. வெள்ளிக்கிழமை பிற்பகலில் கிருஷ்ணா டில்லி திரும்பினார்.

அவர் டில்லி வந்துசேரும் முன்னரே இருதரப்பு பேச்சு குறித்து கடுமையாக குரேஷி விமர்சித்தார். எந்தவிதமான முன்னேற்றமும் பேச்சுகளில் எட்டப்படாததற்கு இந்திய வெளியுறவு அமைச்சரே காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். அத்துடன் பேச்சுகளின்போது சுயமாக முடிவெடுக்கவில்லை என்றும் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிக்கொண்டிருந்தார் என்றும் கிருஷ்ணாவை பற்றி குரேஷி குறிப்பிட்டார்.

இது இந்தியத் தலைவர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கிருஷ்ணாவை குரேஷி அவமதித்துவிட்டார் என இங்குள்ள அரசியல் தலைவர்கள் கூறினர்.

இந்நிலையில், இருதரப்பிலும் தேவையற்ற பேச்சுகள் பேசி உறவு சீர்கெடுவதைப் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி விரும்பவில்லை. இந்தியாவுடன் பேச்சு நடத்துவதைப் பாகிஸ்தான் விரும்புகிறது என சனிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**மன்மோகன் பெருந்தன்மையானவர்**

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மிகவும் பெருந்தன்மையானவர். அவரது தலைமையில் தீர்வு காணவே பாகிஸ்தான் விரும்புகிறது. இதற்காக இந்தியாவுடன் பேச்சு நடத்துவதை எமது நாடு விரும்புகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அனைத்துப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கலாம் என மன்மோகன் சிங் தம்மிடம் உறுதி அளித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தியாவுடன் சுமுகமான உறவை மேற்கொள்ளவே பாகிஸ்தான் விரும்புகிறது. இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுடன் நடத்திய பேச்சுகள் மிகவும் பயனுள்ளவையாக அமைந்தன.

நீண்டகாலமாகவே இரு நாடுகளிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதை இரு நாடுகளின் தலைவர்களும் பேச்சுகள் மூலம்தான் தீர்த்துக்கொள்ள முடியும். பரஸ்பரம் நம்பிக்கை வைத்து பேச்சுகள் நடத்துவதன் மூலம் உறவு சுமுகமாகும். இரு நாடுகளிடையிலான உறவில் புதிய அத்தியாயம் ஏற்படும் என்றும் குரேஷி தெரிவித்துள்ளார்.

தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியா-பாகிஸ்தான் இடையிலான உறவு எட்டாத தூரத்தில் இருப்பதாகவே தெரிகிறது. இந்நிலையை மாற்றவேண்டும் என்பதற்காகவே பாகிஸ்தான் அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றும் குரேஷி குறிப்பிட்டுள்ளார்.

**உலக அரங்கில்**

# ஐ.நா. சார்பில் மண்டேலா பிறந்தநாள் வைபவம்



நியூயோர்க், ஜூலை 19

தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் பிறந்த தினம், ஐ.நா. சபை சார்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சர்வதேச தினமாகக் கொண்டாடப்பட்டது.

கறுப்பின மக்களின் விடுதலைக்காகவும், சமூக அமைதிக்காகவும் போராடிய தென்னாபிரிக்கத்தலைவர் நெல்சன் மண்டேலாவின் 92ஆவது பிறந்த தினம் நேற்று முதன் முறையாக சர்வதேச தினமாகக் கொண்டாடப்பட்டது.

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மண் டேலாவை கௌரவப் படுத்தும் நோக்கில் ஐ.நா. சபை அவரது பிறந்த தின மான ஜூலை 18ஆம் திகதி ஆண்டு தோறும் சர்வதேச மண் டேலா தினமாகக் கொண்டாடப்படும் என கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அறிவித்திருந்தது.

அதன்படி அவரது பிறந்த தினம் நெல்சன் மண்டேலா சர்வதேச தினமாகக் கொண்டாடப்பட்டது. 'நெல்சன் மண்டேலா சர்வதேசதினம்' முதன் முறையாக கொண்டாடப் படுவதையொட்டி ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் விடுத்துள்ள அறிக்கையில், ''மண்டேலா பண பலம், அதிகார பலம் இல்லாமல் மக்களுக்காகப் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றவர்'' எனப்புகழாரம் சூட்டியுள்ளார்.

# எண்ணெய்க் குழாய் வெடித்துச்சிதறி சீனத் துறைமுகத்தில் பயங்கரத் தீ!

பீஜிங், ஜூலை 19

சீன துறைமுகத்தில், கச்சா எண்ணெய் எடுத்துச் செல்லும் குழாய் திடீரென வெடித்துச் சிதறியதில், பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில், அதிர்ஷ்டவசமாக உயிரி ழப்பு ஏதும் ஏற்படவில்லை. சீனாவின் வட கிழக்குப் பகுதியில் தலியன் துறைமுகம் அமைந்துள்ளது.

இத்துறைமுகத்தில் சனிக்கிழமை கச்சா எண்ணெய் ஏற்றி வந்த கப்பலிலிருந்து, துறைமுகத்தில் உள்ள எண்ணெய் கிடங்கிற்கு இராட்சத குழாய்கள் மூலம், கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் பணி நடந்து கொண் டிருந்தது. அப்போது, குழாய் திடீரென வெடித் துச் சிதறி தீப்பற்றியது.

இதைத்தொடர்ந்து அருகிலிருந்த மற்றொரு குழாயும் வெடித்துச் சிதறி, வானை முட்டும் அளவிற்கு தீ சுவாலைகள் எழுந்தன. உடனடியாக துறைமுகத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டது. எண்ணெய் ஏற்றி வந்த கப்பலின் குழாய் இணைப்புகள் அகற்றப்பட்டு உடனடியாகத் துறைமுகத்திற்கு வெளி யில் அக்கப்பல் கொண்டு செல்லப்பட் டது.

இதனால், மிகப்பெரிய சேதம் தவிர்க்கப் பட்டது. தீயணைப்புப் படையினர் தீயை அணைக்க கடுமையாகப் போராடினர். 15 மணி நேர போராட்டத்திற்குப் பின்னர், தீ முழுவதுமாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இந்தப் பயங்கர தீ விபத்தில் அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.

## சீன நிலக்கரிச் சுரங்க விபத்தில் 33 பேர் பலி!

பீஜிங், ஜூலை 19

சீன நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 33 பேர் பலியாகினர்.

சீனாவின் சான்க்ஸி மாகாணத்திலிருக்கும் நிலக்கரிச் சுரங்க ஊழியர்கள் 33 பேரும் உடல் கருகி இறந்துள்ளனர்.

போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாத காரணத்தால் சீன நிலக்கரிச் சுரங்கங்களில் அடிக்கடி விபத்து ஏற்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாதுகாப்பு வாகனம் மீது தாக்குதல்: பாகிஸ்தானில் 18 பேர் உயிரிழப்பு!

பெஷாவர், ஜூலை 19

பாகிஸ்தானில் தனியார் பாதுகாப்பு வாகனம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், 18 பேர் பலியாகினர்; மேலும் 2 பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள குர்ரம் பகுதி, பழங்குடியினர் வசிக்கும் பின்தங்கிய பகுதி. அங்கு ஷியா பிரிவு பழங்குடியினருக்கும், சன்னி பிரிவு பழங்குடியினருக்குமிடையே அடிக்கடி பயங்கர மோதல் ஏற்படுகிறது. சன்னி பிரிவு பழங்குடியினருக்குத் தலிபான் ஆதரவு உள்ளது.

இந்நிலையில், குர்ரம் பகுதியின் முக்கிய நகரமான பாராசினார் என்ற இடத்திலிருந்து பெஷாவர் நகருக்குத் தனியார் பாதுகாப்பு வாகனம் ஒன்று சனிக்கிழமை சென்றுகொண் டிருந்தது. சார்கேல் என்ற இடத்தில் சென்ற போது, அந்த வாகனத்தின் மீது, தீவிரவாதிகள் இயந்திரத் துப்பாக்கிகளால் சரமாரியாகச் சுட்டு திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில், வாகனத்தில் பயணம் செய்த 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் படுகாயமடைந்த 2 பேர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குர்ரம் பகுதியைச் சேர்ந்த மக்கள் தனியாக வாகனத்தில் சென்றால் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்ற காரணத்தினால் பாதுகாப்புப் படையினருடன் செல்கின்றனர். தீவிரவாதத் தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக மக் கள் பெஷவாருக்கு செல்வது வாடிக்கையாகிவிட்டது.

உள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சாஜித் ஹூசைன் தூரி, இத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளார். அரசு குர்ரம் பகுதியிலுள்ள முக்கியச் சாலைகளில் பாதுகாப்பை பலப்படுத்தவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வல்வை அபிவிருத்தி நிலையத்தின் தகவல் தொழில்நுட்ப திறப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இலங்கை வங்கியின் முன்னாள் உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் மங்கள விளக்கேற்றுவதையும் கப்பல் தலைமைப் பொறி யியலாளர் காத்தாமுத்து ரஞ்சனதாஸ் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்வதையும் சம்பத் வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் எஸ்.சற்குணபாலன், வல்வை மகளிர் மகா வித் தியாலய இளைப்பாறிய அதிபர் நகுலாம்பிகை ஆகியோர் வைபவரீதியாக கணனிகளை இயக்கு வதை முதல் வரிசையிலும் - ஓய்வுபெற்ற அதிபர் எஸ்.செல்வவிநாயகம் கணனியை இயக்குவதையும் வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு தண்டபாணிக தேசிகர் ஆசியுரை வழங்குவதையும், சமாதான நீதிவான் எஸ்.எக்ஸ். குலநாயகம் உரையாற்றுவதையும் கீழ் வரிசைப் படங்களிலும் காணலாம். (படங்கள்: கணேசமூர்த்தி)

# குருநகர் வடகடல் நிறுவன உற்பத்திகளை அதிகரிப்பது குறித்து நேற்று விரிவாக ஆராய்வு

## படகு திருத்தப் பணிகள் ஆரம்பிக்கவும் முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணம் குருநகர் வடகடல் நிறு வனத்தை இலாபமீட்டும் வகையில் மாற்றி அமைப்பது குறித்தும் அதிகூடிய வினைத்திறனை வெளிக்காட்டும் வகை யில் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பது தொடர்பாகவும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா நேற்று ஆராய்ந்தார்.



வடகடல் நிறுவனத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் வட கடல் நிறுவனத் தலைவர் பரந்தாமன், பிரதிப் பொது முகாமையாளர் கேதீஸ் வரன் மற்றும் அதிகாரிகளும், ஊழியர் களும் கலந்துகொண்டனர்.

வடபகுதிக்கான கடற்றொழில் உற்பத் திப் பொருள்களை உள்ளூரிலேயே பெற் றுக்கொடுக்கும் பொருட்டு அமைச்சரி னால் கடந்த 2002 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டதே இந்த நிறுவனமாகும்.

பின்னர் கடந்த 2006 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நிலவிய உள்நாட்டு யுத் தம் காரணமாக இந்த நிறுவனப் பணிகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தன.

எனினும் தற்போது இந்த நிறுவனம் சிறப்பாக இயங்கிவருவதுடன் கடந்த வருடத்தில் மாத்திரம் 40 மெற்றிக்தொன் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்துள்ள துடன் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டள வில் இதன் உற்பத்தி இரு மடங்காக அதி கரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேலும் கடற்றொழில் படகு திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கான முயற்சி களும் எடுக்கப்படவுள்ளன.

நேற்று நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து அமைச்சர் திறைசேரி உட்பட்ட சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பணிப்புரைகளை வழங்கினார். (ஓ-16-319)

### வெள்ளைப் பூரான் தீண்டிய சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை19

கரவெட்டியைச் சேர்ந்த ஐந்து வயதுச் சிறுமியை வெள்ளைப் பூரான் தீண்டியதில் மரணமானார்.

கரணவாய் தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த த.பிரவேணி என்ற அந்தச் சிறுமி நேற்று அதிகாலை படுக்கையில் வைத்து வெள்ளைப் பூரானால் கீடியுண்ட நிலை யில் மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனின்றி நேற்று மதியம் சிறுமி உயிரிழந்தார். (ஓ-க-78)

### நல்லூரில் இசை அரங்கு; கலைஞர்கள் விண்ணப்பிக்கலாம்

நல்லூர்க் கந்தன் மஹோற்சவத்தை ஒட்டி வழமைபோல் தெய்வீக இசை அரங்கை நடத்துதற்கு இளங்கலைஞர் மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கெள்ள விரும் பும் கலைஞர்களை மன்றப் பணி மனையில் உரிய படிவத்தைப் பெற்று எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கு மாறு மன்றச் செயலாளர் கேட்டுள்ளார். (ஓ-1)

# இலங்கை அகதிகளுடன் புறப்பட்ட கப்பல் இன்னும் இலக்கை அடையவில்லை

## கடைசியாக கௌத்தமாலாவுக்கு அருகில் காணப்பட்டதாம்

கொழும்பு, ஜூலை 19

புகலிடம் கோரும் இருநூறுக்கும் மேற் பட்ட இலங்கையரை ஏற்றிச் சென்று கொண்டிருக்கும் 'சன் சீ' என்ற கப்பல் கௌத்தமாலாவுக்கு அருகில் காணப்பட்ட தாக 'ஏசியன் ட்ரிபியூன்' இணையத்தளம் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

கனடாவை நோக்கிப் பயணத்தை ஆரம் பித்த இந்தக் கப்பல் இப்போது பிரிட்டன் நோக்கிச் செல்கிறது எனத் தெரிவிக்கப் படுகிறது. இதையடுத்து பிரிட்டன், கனடா ஆகிய நாடுகள் இக்கப்பல் குறித்துக் கண் காணிக்கும் வகையில் தத்தமது கடற் பாது காப்பை அதிகரித்துள்ளன.

புகலிடம் கோருபவர்களில் புலிச் சந் தேகநபர்களும் இருக்கலாமென 'ஏசியன் ட்ரிபியூன்' சந்தேகம் எழுப்பியுள்ளது. (சி)

### தேரர் கொலை

கொழும்பு, ஜூலை 19

கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட நாயக்க தேரர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் ஹெட்டி பொலயில் இடம்பெற்றது.

இத்தகவலை பொலிஸ் பேச்சாளர் பிர சாந்த ஜெயகொடி தெரிவித்தார்.

# சில்லாலை யாகப்பர் ஆலயத்தில் 75ஆவது ஆண்டு நிகழ்வுகள்

## எதிர்வரும் ஞாயிறன்று திருச்சொரூப பவனி

கொழும்புத்துறை,ஜூலை19

சில்லாலை புனித யாகப்பர் ஆலயத் தின் 75ஆவது ஆண்டு நிறைவுத் திருவிழா வும் பவள விழா மலர் வெளியீடும் எதிர் வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள வருடாந்த திருவிழாவுடன் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பங் குத் தந்தை அருட்திரு நேசன் அடிகள் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வரு டாந்த குருவிழாவின் நவநாள் வழிபாடு கள் தினமும் மாலை 5.30 மணிக்கு நடை பெறுகின்றன. நற்கருணை வழிபாடும் திருப்ப வனியும் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக் கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறும்.

திருவிழாத் திருப்பலி 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண் டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப் படும். தொடர்ந்து திருச்சொரூபப்பவனி யும் ஆசீரும் இடம்பெறும்.

பவள விழா மலர் வெளியீடு யாழ். ஆயரின் ஆசியுரையைத் தொடர்ந்து நடை பெறும். அன்றைய தினம் மாலை 8 மணிக்கு உள்ளூர் கலைஞர்களின் ஆற்றுகையில் உருவான 'சந்தியோகுமையோக படை வெட்டு' என்னும் நாட்டுக்கூத்து நிகழ்வும் இடம்பெறவுள்ள[illegible] தெரி வித்துள்ளார். (ஓ-1-135)

### ஐ.நா.சபையின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையில் சேர்த்துக்கொள்வதற்காக நேர்முகத் தேர்வை நடத்த கடந்த ஜூன் மாதம் 18ஆம் திகதி ஐ.நா.அதிகாரிகள் இருவர் இலங்கைக்கு வருகை தர இருந் தனர். ஆனால் அவர்கள் இதுவரை இங்கு வரவில்லை. அதற்கான காரணமும் தெரி விக்கப்படவில்லை.

450 இலங்கைப் பொலிஸாரை சமாதா னப் படையில் இணைத்துக் கொள்ள ஐ.நா. இணக்கம் தெரிவித்திருந்தது. இதற் கென ஐ.நா. மேற்பார்வையில் நடத்தப் பட்ட பரீட்சைக்கு 300பொலிஸ் அதிகாரி கள் தோற்றினர். அவர்களில் நூறுபேர் மாத்திரமே சித்தியடைந்தனர் என பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ஓ-சி)

# டெங்கு நோயைக் முழுமையாகக் குணப்படும் பப்பாசி இலைச்சாறு! வைத்தியர் ஹெட்டிகே சாதனை!!

கொழும்பு, ஜூலை 19

டெங்குக் காய்ச்சலை முழுமையாகக் குணப்படுத்தக்கூடிய நிவாரணியாகப் பப் பாசி மரத்தின் இலைகள் உள்ளன என இலங்கையின் பாரம்பரிய வைத்திய நிபுணர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். பப்பாசி இலைச் சாற்றைக் குடித்தால் டெங்குநோய் முற் றாகக் குணமாகி விடும் என்று வைத்திய கலாநிதி சரத் ஹெட்டிகே ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளார்.

இலங்கையில் மிகவும் வேகமாக டெங்குக் காய்ச்சல் பரவி வருகின்றது. இதனால் பலர் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையிலேயே வைத்திய கலாநிதி ஹெட்டிகே டெங்கு நோயாளர்கள் சுமார் 70 பேருக்கு 10 மில்லி லீற்றர் ப்பாசி இலைச்சாற்று ஜூஸ் தயாரித்துக் கொடுத்தார்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 10 முதல்15 பேர் வரையானோர் சிறுவர்களாவர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அனைவருக்குமே டெங்கு பரிபூரணமாகக் குணம் ஆகிவிட்டது. பாரம்பரிய மருத்துவ முறை மூலம் டெங்கை முழுமையாகக் குணப்படுத்த முடியம் என்பது முதல் தடவையாக உலகில் நிரூ பிக்கப்பட்டுள்ளது என வைத்திய கலாநிதி ஹெட்டிகே மகிழ்ச்சி தெரிவித்தார். (ஓ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி.+ வரிச்சலுகை நிறுத்தப்பட்டதில் எனக்குப் பங்குண்டா? - இல்லை என்கிறார் சந்திரிகா

யாழ்ப்பாணம், ஜூலை 19

இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டதில் நான் எவ்வித செல்வாக்கையும் செலுத்தவில்லை.

இவ்வாறு மறுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைக்காமல் செய்வதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தனது செல்வாக்கைப் பயன்படுத்தியுள்ளார் என்று அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியதாகத் தெரிவிக்கப்படும் தகவலுக்கு-

அவருக்கு மறுப்புத் தெரிவித்து அனுப்பிய கடிதத்திலேயே சந்திரிகா இதனைத் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா அக்கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைத் திட்டம் ரத்துச் செய்யப்படுவதற்காக நான் எனது செல்வாக்குகளைப் பயன்படுத்தியதாக அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தாங்கள் என்மீது குற்றம் சுமத்தியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேபோலக் கடந்த 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது தற்போதைய வெளியுறவுத்துறை அமைச்சராகவுள்ள ஜி.எல். பீரிஸும், ஐரோப்பிய ஒன்றியத் தலைவரிடம் இவ்வரிச்சலுகையை மீளப்பெறுமாறு நான் கூறியதாக என் மீது குற்றம் சுமத்தியிருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு ஆகியவற்றுக்கும் எனக்கும் இடையில் நெருங்கிய உறவு இருப்பது உண்மைதான்.

அவற்றினால் நியமிக்கப்பட்ட சில குழுக்களுக்கும் நான் தலைமை வகித்துள்ளேன். அவர்களால் நடத்தப்பட்ட மாநாடுகளில் பிரதம பேச்சாளராகக் கூட நான் பங்கு பற்றியிருந்தேன்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபட வேண்டிய தேவை எனக்கில்லை. தற்போது சாதாரண குடிமகனைப் போலவே நான் வாழ்ந்து வருகிறேன். எனவே இது போன்ற குற்றச்சாட்டுகள் என்மீது சுமத்தப்படுவது மிகவும் அபாண்டமானதாகும். (அ-16)

## நாளை மின்தடை

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், கரந்தன், நீர்வேலி, கோப்பாய் ஆகிய இடங்களில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப் பட்டிருக்கிறது. (50)

## அரசமைப்புத் திருத்தம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்தப்படுகிறது என்று பொன். செல்வராஜா எம்.பி. தெரிவித்தார். (ஒ-சி)

## முன்னாள் புலி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில், 230 மாணவர்களும், 110 மாணவிகளும் அடங்குகின்றனர் எனவும் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அடுத்த மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையில், விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் தோற்றுவதற்குத் தேவையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (சி)


### குழுப்புகைப்படம் எடுத்தல்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட 32ஆம், 33ஆம் அணி மாணவர்களின் குழுப்புகைப்படம் நாளை (20.07.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணியளவில் எடுக்கப்படவுள்ளது. இதில் 32ஆம், 33ஆம் அணி மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சி. திலீபன்,
3ஆம் வருடப்பிரதிநிதி,
விஞ்ஞானபீடம்.


## அரசமைப்புச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புத் திருத்தங்கள் குறித்த பேச்சுவார்த்தையின் போது ரணில் விக்கிரமசிங்க 17 ஆவது சட்டத்தை உடனடியாக அமுல் செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டையே கையில் எடுத்திருக்க வேண்டும்.

இச் சட்டத்தை அமுல் செய்த பின்னர் அதில் ஏற்படும் திருத்தங்களை முதலில் பகிரங்கமாக வெளியிட வேண்டும்.

இவ்வாறு வெளியிட்ட பின்னரே அத் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

அதனை விடுத்து அதாவது 17 ஆவது சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டைத் தவிர்த்து, அதில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு இணங்கியதன் மூலம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு பணிந்து போகின்றார் என்றே கூறவேண்டும் - என்றார். (அ-16)


### வெளிவந்து விட்டது! (அக்கடமி வெளியீடு)

தரம் :- 4 முதல் தரம் :- 10 வரை
இரண்டாம் தவணைப்பரீட்சை
வினாப்பத்திரங்களும்
O/L வகுப்பிற்கான முழு மாதிரி
வினாப்பத்திரங்களும்
புத்தகசாலைகளில் இன்றே பெறலாம்
(பூபாலசிங்கம், அன்னை)


## உயர் பாதுகாப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள் குடியேற்றப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப் படமாட்டா என அரச பேச்சாளரும், ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீள் குடியேற்றப்படுவர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அண்மையில் தெரிவித்திருந்தார். (சி)

## பல்கலைக்கழகங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்றப்படுவர்.

1988ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க சட்டம் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

இச் சட்டத்தின் பிரகாரம் பகிடிவதையில் ஈடுபட்டதாக இனம் காணப்படும் மாணவர்களுக்கு ஆறு அல்லது ஏழு வருட சிறைத்தண்டனை வழங்கப்படும்.

இச்சட்டத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படாவிடின் பல்கலைக் கழகங்களில் ஒழுக்கத்தைப் பேண முடியாது போய்விடும் அபாயம் உள்ளது.

தற்போது அதிகரித்துவரும் அகௌரவமான பகிடிவதைகளினால் எமது நாட்டுக்குப் பெரும் அவமரியாதை ஏற்படுகிறது.

இது தொடர்பாக அனைத்துப் பல்கலைக் கழக கல்வி சார்ந்த மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களது ஒத்துழைப்பு எமக்குக் கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

### வகுப்புகளைப் பகிஷ்கரித்தல்

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் தமது குறைகள் தொடர்பாக பல்கலைக் கழங்களுக்கு உள்ளே மட்டுமே ஆட்சேப ஆர்ப்பாட்டங்களை நடத்தலாம். ஆனால் வகுப்புக்களைப் பகிஷ்கரிக்க முடியாது.

இனிவரும் காலங்களில் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபடும் மாணவர்கள், வகுப்புக் குச் சமுகமளிக்காதவர்களாகவே கருதப் படுவர்.

தங்களது வரவில் வருட இறுதியில் 80 விகித வரவு இல்லாதவர்கள் எக்காரணம் கொண்டும் பரீட்சை களுக்குத் தோற்ற அனுமதிக் கப்படமாட்டார்கள் - என்று அமைச்சர் விவரித்தார். (அ-16)

## பான் கீ - மூனுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டுப்பேர் அடங்கிய செயலகம் ஒன்றை அமைக்க அவர் திட்டமிட்டுள்ளார்.

இந்தச் செயலகம் அமைக்கப்பட்டதும் நிபுணர்கள் குழு ஐ.நா. செயலகத்தில் இருந்து தனது பணியைத் தொடங்கும் என்றும் எட்டுப்பேர் கொண்ட செயலகத்துக்கு இந்தக் குழு பல வழிகளில் உதவிகளை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## பிரபா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இக்கூட்டத்திற்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.வி.தங்கபாலு தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் அந்த நாட்டில் கலவரமோ, வன்முறையோ இருக்கக் கூடாது.

நமக்கு பிரபாகரன் எதிரானவர் அல்லர். அவர் சென்ற பாதைதான் எதிரானது. நான் பிரபாகரனை நன்கு அறிந்தவன்.

இரவு 12 மணிக்கு எனது காரை நானே ஓட்டிச்சென்று அவர் இருந்த இடத்தில் அவருடன் பல மணி நேரம் பேசியிருக்கிறேன்.

ராஜீவ்காந்தி கூறியபடி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் இன்று இலங்கையில் 2 மாநிலங்களில் அவர் முடிசூடா மன்னனாக இருந்திருப்பார்.

ஆனால், நிலைமை வேறாகிவிட்டது. இலங்கையில் எத்தனை பேருக்கு பேரிழப்பு; எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர்.

எனினும் இன்று இலங்கையில் அமைதி திரும்பியுள்ளது.

இலங்கை தமிழர் நலனுக்காக இந்தியா 3ஆயிரத்து600 கோடி ரூபா நிதி உதவி அளித்துள்ளது. அங்குள்ள இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தர 1000 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தையும், பலாலி விமான நிலையத்தையும் சீரப்படுத்தித் தர இந்தியா முன் வந்திருக்கிறது. இன்னும் 2 வருட காலத்தில் அங்குள்ள 2 லட்சம் தமிழர்களுக்கும் வீடு கட்டி கொடுக்கப்படும் - இப்படி சிதம்பரம் தெரிவித்தார். (சி)


### வாகனம் விற்பனைக்கு

52-XXXX இலக்கமுடைய டபிள் கப் (ISUZU Double cap) வாகனம் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு :-
பிரகாஸ் எலக்ரோனிக்ஸ்,
பருத்தித்துறை.
தொ.பே.இல.:- 0773222837

### தொழிற்சாலைக்குக் காணி தேவை

அச்சுவேலி, இராச வீதிக்கு அண்மித்த பிரதேசத்தில் பிரதான வீதியில் நல்ல நீர்வளம் உள்ள காணி தொழிற்சாலை அமைப்பதற்கு நீண்டகாலக் குத்தகைக்குத் தேவை.
தொடர்புக்கு : 0776126089

நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Network Software Engineering
BIT CIMA-UK CCNA MCITP
Government Scholarship
Salary Scale more than 50,000$
www.payscale.com
Free Courses A+ Hardware-Australia BCS-UK English, ICDL, SUN JAVA PROGRAMMER-SCJP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் , MCS Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction, Jaffna.
Call 772395895

ESOFT நிறுவனத்தின் சாவகச்சேரி, கிளிநொச்சிக் கிளைகள் திறப்பு விழாவை முன்னிட்டு





மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி





இடம்: யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானம்
காலம்: இன்று (19.07.2010) திங்கட்கிழமை பி.ப.3 மணி

இலங்கையின் தேசிய சம்பியனான மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சாவகச்சேரி பாட சாலை சம்பியன் அணி.
- ESOFT நிறுவனம்

சிறி நதியா
வீடியோ.ஸ்ருடியோ & போட்டோ பிறிண்டிங்
அனைத்து தொழில்சார்
நண்பர்களின் வேண்டுகேளிற்கு இணங்க
எமது அதி சிறந்த சேவையினை
விரிவு படுத்தி உள்ளோம்
Kodak Express >>>>>> 3R தொடக்கம் 12X36 வரை

டிஜிட்டல் கலர் லாப்






108 A, லக்ஷன் பிளாஸா கட்டடம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 2228412


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.